# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 501 | 2000 பெப்பிரவரி | ரூபா 10.00

உள்ளே

■ தோட்டப்புற இளைஞர்கள் 19 மாதம் விசாரணையின்றி தடுத்து வைப்பு: ........ 3
■ விமானக் கடத்தல் முடிவடைந்த பின்னர் இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக சூடுபறக்கும் குற்றச்சாட்டுகளை வீசியுள்ளது........ 4
■ இந்திய தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ........ 5
■ கலைஞர்களுக்கு எதிரான தாக்குதல்:........ 7
■ இராணுவ சுற்றிவளைப்பு தேடுதலின் போது ஆயிரக் கணக்கான
■ தமிழ் மக்கள் கைது ........ 8,9
■ இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்
■ களுத்துறை சிறைச்சாலை தாக்குதலில் தமிழ் கைதிகள் இருவர் பலி........ 15
தென் ஆசியாவின் மனித அபிவிருத்தி ஆண்டு அறிக்கை – 1999: பக்கம் 10 – 11

## இலங்கையின் 52 ஆவது சுதந்திர தின விழா:

# ஆளும் கும்பல் பிரமுகர்களின் சடலத்தின் மூடுதிரையாக விளங்கியது

விஜே டயஸ்

சில சம்பவங்கள் ஒரு அரசியல் நிலைமையைப் பெரிதும் புட்டுக் காட்டிக் கொண்டுள்ளன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்த 52 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட பெப்பிரவரி 4ம் திகதி கொழும்பில் இடம் பெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் அந்த வகையறாவைச் சேர்ந்த ஒன்றாகும். ஆரம்பம் முதல் முடிவு வரையில் முழுச் சோகமயமாக விளங்கிய இந்தக் கொண்டாட்டம், நாட்டின் பிரமாண்டமான அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளையும்– எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு– கிழக்கில் தொடர்ந்து வரும் யுத்தத்தையும் கையாள்வதற்கு ஒரு தெளிவான நோக்கையோ அல்லது நம்பிக்கையையோ கொண்டிராத ஒரு அரசாங்கத்தையும், ஒரு இராணுவத்தையும் ஒரு அரசையும் காட்சிக்கு விட்டு வைத்தது.

அங்கு சமூகமளிக்கக் கூட எவரும் விரும்பவில்லை என்பதை அது காட்டிக் கொண்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க– வைத்திய ஆலோசனையின் பேரில் அல்லது அத்தகைய ஒரு காரணத்துக்காக – அங்கு வருகை தந்திருக்கவில்லை. அவரின் தாயாரான பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க வயோதிபம் காரணமாக இளைத்துப் களைத்துப் போனதால் வருகை தரவில்லை. இதன் காரணமாக பிரதம அதிதி பாத்திரம் பாராளுமன்ற சபாநாயகர் கே.பி.ரத்னாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அவரது வேலையும் சுபநேரத்தில்– காலை 8.33 மணிக்கு– தேசியக் கொடியை ஏற்றுவதுடன் முற்றுப் பெற்றது.

இந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம் பெற்ற பாராளுமன்றக் கட்டிடத்துக்கு எதிரில் உள்ள சதுக்கம் ஆயதம் தாங்கிய பொலிசாராலும் படையாட்களாலும் முற்றுகையிடப்பட்டு இருந்தது. அழைப்பிதழ் கிடைத்த விருந்தினர்கள்– சிரேஷ்ட அரசியல்வாதிகள், அரசாங்க உயர் அதிகாரிகள், இராணுவ பெரும் புள்ளிகள், இராஜதந்திரிகள்– தவிர பொது மக்களோ வாகனங்களோ அனுமதிக்கப்படவில்லை. கடந்த 17 வருடகால உள்நாட்டுப் போரில் இறந்த, காயமடைந்த, ஊனமுற்ற ஆயிரக்கணக்கானோரை கௌரவிக்கும் விதத்தில், கொண்டாட்ட மண்டப முன்வரிசை ஆசனங்களை அவர்களில் இருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கென ஒதுக்கும் அவசியம் ஏற்பட்டிருந்தது.

உத்தியோகபூர்வமான வைபவங்கள் எல்லாம் 30 நிமிடத்துக்கும் குறைவான காலப்பகுதிக்குள் நிறைவு பெற்றன. அரசின் அதிகாரத்தையும் பலத்தையும் வெளிக்காட்டும் விதத்தில் இத்தகைய தருணங்களில் வழக்கமாக இடம் பெறும் இராணுவ .யுத்த தளபாடங்களின் கண்காட்சியோ அல்லது படையாட்களின் வீர சாகச விளையாட்டுக்களோ இத்தடவை இடம் பெறவில்லை. இவை இரத்துச் செய்யப்பட்டதற்கான காரணங்களை ஒருவர் ஊகித்துக் கொள்ள முடியும். சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பாரதூரமான இராணுவ பின்னடைவுகள், மனோநிலை சிதறல், படைகளை விட்டோடும் வீதத்தின் அதிகரிப்பு போன்ற விடயங்களில் தலை மூழ்கிப் போயிருந்தனர்.


இதற்கு குல்லாய் போடும் விதத்தில் உத்தியோக பூர்வமான பார்வையாளர்கள் கொண்டாட்ட சோடனைகளின் கீழ் அமைக்கப்பட்ட தொலைக்காட்சி அமைப்பின் கீழ் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய– முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட உரையை தரிசிக்க வேண்டி ஏற்பட்டது. நாட்டின் ஏனைய மக்கட் தரப்பினர் தமது வீட்டில் உள்ள தொலைக்காட்சியில் குமாரதுங்கவை தரிசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த முழு விவகாரங்களும் தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு எந்த ஒரு தீர்வும் இல்லாத ஒரு ஆளும் வர்க்கத்தின் மனத்தளர்ச்சியையும், கோளாறுகளையும், அவஸ்தைகளையும் கசியச் செய்துள்ளன.

குமாரதுங்கவின் உரை அந்த ஏக்கம் கண்ட நிலைமைக்கு பொருத்தமானதாக விளங்கியது. அவர் கூறியதாவது: "சுதந்திரம் அடைந்ததில் இருந்து நாம் தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் கண்டிப்பான முறையில் ஈடுபட்டு இருக்கவில்லை. நாம் கூட்டாகவும் விரைவாகவும் கையாள வேண்டிய தனியொரு முக்கிய சவால் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காண்பதேயாகும்" எனவும் அவர் குறிப்பிட்டார். இலங்கையின் அரசியல் வார்த்தை ஜாலங்களில் யுத்தமும் யுத்தத்துக்கு இட்டுச் சென்ற சிறுபான்மையினரின் மீதான ஒடுக்குமுறையும் எப்போதும் குறுங்கோண நிலையில் இருந்து "சிறுபான்மையினர் பிரச்சினை" அல்லது "இனக்குழு பிரச்சினை" எனக் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது.

குமாரதுங்க யுத்தத்தை முடிவுக்கு கொணரத் தவறியமைக்காக மன்னிப்புக் கோருவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. சமாதானத்தை ஏற்படுத்தும் வாக்குறுதியுடன் சந்திரிகா குமாரதுங்க 1994ல் 62 சதவீத பெரும்பான்மை வாக்குகளுடன் முதலில் பதவிக்கு வந்தார். பொதுஜன முன்னணி அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து நடாத்தியது

14ம் பக்கம் பார்க்க

# செச்னியா மீதான ரூஷ்ய தாக்குதலின் அரசியல், வரலாற்று விளைவுகள்




உலக சோசலிச வெப் தளத்தின் ஆசிரியர் குழு, அறிக்கை

காக்கேசியன் குடியரசான செச்னியாவுக்கு எதிராக ரூஷ்யப் படைகள் மூன்று மாதங்களுக்கு மேலாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இதில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 10000 க்கு அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. செச்சியன் சனத்தொகையில் 1/3 பங்கினர் வீடுகளை இழந்துள்ளனர். 250000 பேர் இன்று அகதிகளாகியுள்ளனர். ரூஷ்ய ஷெல் தாக்குதல்களாலும் அங்குமிங்குமாக இடம் பெறும் படைகளின் ஊடுருவல்களாலும் நொருந்து போயுள்ளதும் முற்றுகையிடப்பட்டுள்ளதுமான தலைநகர் குரோஸ்னியினுள் சிக்குண்டு போயுள்ள

16ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம் !**

**சிங்கள – தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம் !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க

துணை ஆசிரியர்: எஸ்.இராசேந்திரன்

பதிப்பாளர்: தீபால் ஜயசேகர

சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்

அலுவலகம்:

90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை,
கொழும்பு - 10
தொலைபேசி: 682220

# குமார் பொன்னம்பலம் படுகொலை


குமார் பொன்னம்பலம்

பிரபல தமிழ் அரசியல் தலைவரான குமார் பொன்னம்பலம் ஜனவரி 8ம் திகதி மத்தியானம் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலை தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தை குறுக்குத் தெருவொன்றில் தமது வாகனத்தில் அவர் பயணம் செய்கையில் இடை நடுவில் நிறுத்தப்பட்டு தலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளரான குமார் பொன்னம்பலம் சமீபத்தில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளிடம் இருந்து அதற்கு கணிசமான ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் அவர் போட்டியிடுவதைக் கைவிட நேரிட்டது.

இந்தக் கொலைக்கு யார் பொறுப்பு என்பதை இன்னமும் கூற முடியாதுள்ளது எனப் பொலிசார் கூறிக்கொள்கின்றனர். ஆனால் பிரபல முதலாளித்துவ அரசியல்வாதியும் வழக்கறிஞருமான குமார் பொன்னம்பலம் இந்த விதத்தில் கொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் நடாத்திவரும் யுத்தம் தொடர்பான அவரின் கடும் விமர்சனம் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஆயுதப் படைகளும் மட்டுமன்றி கணிசமான தமிழ் அரசியல் அமைப்புக்களும் குமார் பொன்னம்பலத்தை வெளிவெளியாக எதிர்த்து வந்தன. இக்கொலைக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி வழங்கும்படி குமார் பொன்னம்பலம் விடுத்த கோரிக்கை பாதுகாப்பு அமைச்சினால் நிராகரிக்கப்பட்டது. செம்மணியில் பெரும் மனிதப் புதைகுழிகள் சம்பந்தமான இராணுவத்தின் பொறுப்புத் தொடர்பாக இடம் பெற்ற விசாரணையில் காணாமல் போனோரின் பெற்றோரினை பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் அங்கு விஜயம் செய்யவும் அவர் திட்டமிட்டிருந்தார். டிசம்பர் 21 ம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி கண்ட ஒரு சில மணித்தியாலங்களுள் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட சந்திரிகா குமாரதுங்க நிகழ்த்திய உரையை குமார் பொன்னம்பலம் வன்மையாகக் கண்டனம் செய்திருந்தார். அந்த விதத்தில் அவர் ஒரு பகிரங்கக் கடிதத்தை வெளியிட்டார். அக்கடிதத்தில் டிசம்பர் 18 ம் திகதி விடுதலைப் புலிகள் தன்னை படுகொலை செய்ய மேற்கொண்ட முயற்சி பற்றி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட விபரங்கள் தொடர்பாக குமார் பென்னம்பலம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"உங்களது கடிதத்தில் ஒரு வார்த்தை திரும்பத் திரும்ப வாந்தி எடுக்கப்படுகின்றது. அது "சமாதானம்" பற்றியதாகும். உங்களது நிஜ அர்த்தமோ சமாதானத்தை எதிர்ப்பதே அன்றி வேறொன்றும் அல்ல. நீங்கள் 18 ம் திகதி பற்றி குறிப்பிடுகையில் "இருளின் நிழல் இந்த நாட்டைப் பல தடவைகள் பீடித்த ஒரு இரவாக இந்த இரவும் வரலாற்றினுள் இடம் பெறும்" எனக் குறிப்பிட்டார்.

"நீங்கள் இந்த வாய்வீச்சில் ஈடுபட்டிருப்பது அது உங்களை பாதிப்பதனால் ஆகும். ஆனால் ஆயுதப் படைகளின் ஆணையிடும் அதிகாரி என்ற விதத்தில் கையாளும் நடவடிக்கைகள் காரணமாக இருளினால் பீடிக்கப்பட்ட இரவுகளாக தமது வாழ்க்கையை கழிக்க நேரிட்டுள்ள பல்லாயிரக் கணக்கான விதவைகள் தமிழ் ஈழத்தில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டதில்லை".

சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் பிரச்சார இயக்கம் பூராவும் தனது முக்கிய எதிர்ப்பாளரான ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற ஒரு பேச்சுவார்த்தையினை நடாத்தப் போவதாக தாக்குதல் நடாத்தி வந்தார். இதன் மூலம் வலதுசாரி சிங்கள சோவினிச பகுதியினரின் உணர்வுகளை தூண்டி விடுவதில் ஈடுபட்டார். அவரைக் கொலை செய்யும் முயற்சி இடம் பெற்றதன் பின்னர், தமிழ்ழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் இரகசியமானதும் மௌனமானதும், அரைகுறையானதுமான ஆதரவை நிறுத்திக் கொள்ளும்படி நிகழ்த்திய உரை, முழுத் தமிழ் மக்களுக்கும் எதிராக விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கையாகக் கணக்கில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

கொழும்பு பத்திரிகைகள் குமார் பொன்னம்பலத்தை விமர்சனம் செய்துள்ளதோடு படுகொலைக்கான பொறுப்பையும் விடுதலைப் புலிகளின் தலையில் கட்டியடிக்க முயன்றுள்ளன. "விடுதலைப் புலிகள் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் சங்கடத்துள் மாட்டி வைக்கும் விதத்தில் விடுதலைப் புலிகளுக்கு வெளிவெளியாக ஆதரவு வழங்குபவர்களுக்கு அரசாங்கத்தின் தண்டனை இதுதான் எனச் சமிக்கை செய்யும் முறையில் இந்தப் படுகொலை இடம் பெற்றுள்ளதா? தமது சகாக்களைத் தாமே கொன்று தள்ளும் கொழும்பு அரசாங்கத்தின் மனித உரிமைகள் வரலாறு தொடர்பாக வழிதடுமாற முடியுமா"? என்ற பாணியில் கேள்வி எழுப்பி "டெயிலி மிரர்" பத்திரிகை செய்தி வெளியிட்டு இருந்தது.

ஆனால் ஒரு விடயம் தெளிவாகியுள்ளது. அதாவது: இந்தப் படுகொலை பொன்னம்பலத்தின் அரசியல் கருத்துக்களுக்கு எதிரானவர்களால் செய்யப்பட்டது. இக்கொலை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட அறிக்கை, இக்கொலையின் அச்சுறுத்தல்களையிட்டு எச்சரிக்கை செய்யும் வகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "(கருத்து வெளியீட்டு சதந்திரம;) இந்த அடிப்படை உரிமையைப் பயன்படுத்தியதன் காரணமாக திரு.குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு இருப்பின் அது உண்மையில் ஒரு பயங்கரமான நிலைமையாகும். நாட்டின் பிரஜை ஒருவர் சுதந்திரமாகச் சிந்தித்து தனது கருத்தை வெளியிட உள்ள உரிமையை பெரிதும் துவம்சம் செய்வதாகும்" என்றது.

பழிவாங்கல்களுக்கு இலக்காக நேரிடும் என்ற அச்சம் காரணமாக குமார் பொன்னம்பலத்தின் உறவினர்கள் இந்தப் படுகொலை சிங்கள இனவாதிகளின் வேலையாக இருக்கலாம் எனச் சைகை செய்துள்ளனர். அத்தோடு "புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி" எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் ஒரு அமைப்பு இந்தப் படுகொலைக்கான பொறுப்பை தாம் ஏற்பதாக ஒரு புதினப் பத்திரிகைக்கு 'பக்ஸ்' செய்தி மூலம் அறிவித்துள்ளது. இத்தகைய வலதுசாரி குழுக்களுக்கு அரசாங்கப் படைகளுடன் மிகவும் நெருக்கமான உறவு இருந்து கொண்டுள்ளது.

'தினமுரசு' பத்திரிகை ஆசிரியரும் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினருமான அற்புதராஜா நடராஜா வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் கடந்த நவம்பர் 2ம் திகதி கொலை செய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக பொலிசாருக்கு எந்தவிதமான துப்பும் கிடைக்காததோடு அது அச்சம்பவத்தை குழி தோண்டிப் புதைக்கவும் இட்டுச் சென்றது.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை இடம்பெற்ற அதே நாளில் பிரதமரின் அலுவலகத்துக்கு எதிரில் தற்கொலைப் படைக் குண்டுதாரியின் குண்டு வெடித்தது. குண்டுதாரி உட்பட்ட அறுவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் எழுவர் ஆஸ்பத்திரியில் இறந்தனர். இறந்தவர்களுள் நான்கு பொலிஸ் அதிகாரிகளும் பிரதமரின் அலுவலக ஊழியர் 7 பேரும் அடங்குவர். மேலும் 15 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் குண்டு வெடிப்பு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற மூன்றாவது குண்டு வெடிப்பாகும், இவை அனைத்தும் விடுதலைப் புலிகளின் வேலை எனச் சந்தேகிக்கப்படுகின்றது. டிசம்பர் 18 திகதி – சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்ட கொழும்பு மாநகர சபை மைதான கூட்டத்திலும் யூ.என்.பி. யின் ஜா-எல கூட்டத்திலும் – இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் சுமார் 50 பேர் இறந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து "நகரின் பாதுகாப்பினை சோதனையிடும்" பாதுகாப்பு சபையின் விசேட கூட்டம் சந்திரிகா குமாரதுங்கவால் கூட்டப்பட்டது.

உண்மையில் இவற்றின் மூலம் சிறப்பாக தமிழ் மக்களுக்கு எதிரான புதிய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடும். ஜனவரி 6ம் திகதி நள்ளிரவில் இருந்து கொழும்பு, தெகிவளை– கல்கிசை மாநகர சபை பகுதிகளில் ஊரடங்குச் சட்டப் பிரகடனமும் முழு அளவிலான தேடுதலும் உண்மையில் தமிழ் மக்களுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகும். விடுதலைப் புலிகளைத் தேடுவதாகக் கூறி இரண்டாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி பொது மக்கள் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையங்கள் நிரப்பப்பட்டன..

## கீர்த்தி பாலசூரிய 12வது ஆண்டு நினைவு தினம் :

### அனைத்துலகவாதத்துக்கான போராட்டத்தை பெரிதும் மதித்தவர்



சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டதில் (1968) இருந்து 1987ல் அவர் காலமானதுவரை அதன் பொதுச் செயலாளராக விளங்கிய தோழர் கீர்த்தி பாலசூரியவின் மறைவின் 12வது ஆண்டு நினைவு தின கூட்டம் ஜனவரி 22ம் திகதி கொழும்பு பொதுஜன நூல்நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது.

சோ.ச.க. மத்திய குழு உறுப்பினரும் கீர்த்தி பாலசூரியவின் துணைவியுமான விலானி பீரிஸ் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் 'கம்கறு மாவத்த' பிரதம ஆசிரியர் கே.ரத்னாயக்க 'கீர்த்தி பாலசூரியவும் அனைத்துலகவாதத்துக்கான போராட்டமும்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகத்தை கட்டியெழுப்புவதில் முன்நின்ற தோழர். கீர்த்தி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையில் அனைத்துலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பயிற்றுவிப்பதில் சிறப்பு அக்கறை காட்டியதாக விலானி பீரிஸ் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

இலங்கையில் ட்ரொட்ஸ்கிச இயக்கமாக விளங்கிய லங்கா சமசமாஜக் கட்சி 1964 மாபெரும் காட்டிக் கொடுப்பின் அடிப்படையில் அபிவிருத்தி செய்த அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் கீர்த்தி பாலசூரிய அரசியலில் ஈடுபட்டதாக குறிப்பிட்ட கே.ரத்னாயக்க, இந்தக் காட்டிக் கொடுப்புக்கு இட்டுச் சென்ற வரலாற்று, அரசியல் காரணிகளை சரியான முறையில் மதிப்பீடு செய்வதில் கீர்த்தி ஈடுபட்ட விதத்தை தெளிவு படுத்தினார். 1970களின் நடுப்பகுதி தொடக்கம் 1985 வரை அனைத்துலக குழுவின் தலைமையினுள் தலையெடுத்த அனைத்துலகவாதத்தில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் போக்கிற்கு எதிராக ஈடாட்டம் காணாத அனைத்துலகவாத நிலைப்பாட்டை கீர்த்தி கடைப்பிடித்த முறைமையை ரத்னாயக்க தமது நினைவு பேருரையில் சுட்டிக்காட்டினார்.

இன்றைய நெருக்கடிகளின் மத்தியில் அனைத்துலக குழுவும் சோசலிச சமத்துவக் கட்சியும் மட்டுமே தொழிலாளர் வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும், புத்திஜீவிகளும் முகம் கொடுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கு பதில் காண்பதில் ஈடுபட்டுள்ளதை சுட்டிக் காட்டிய அவர் உலக சோசலிச வெப் தளத்தின் அடிப்படையில் அனைத்துலக குழு முன்னெடுக்கும் அரசியல், கோட்பாட்டு போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதன் அவசியத்தை அங்கு வலியுறுத்தினார்.

**அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்**

World Socialist Web Site
http://www.wsws.org
அமெரிக்கா:
http://www.socialequality.com
அவுஸ்திரேலியா:
http://www.workersnews.flex.com.au
பிரித்தானியா:
http://www.socialequality.org.uk
கனடா:
http://www.egalitesociale.com
ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோட்டப்புற இளைஞர்கள் 19 மாதம் விசாரணையின்றி தடுத்து வைப்பு:**

# 'அசுத்தமான மரக்கறியையும் கல்லுடன் அரிசியையும் சமைத்து போடுகிறார்கள்'

எமது நிருபர்

1998 மே 31 ம் திகதி அட்டன் நகரின் அருகில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, ஒரு வாரத்தின் பின்னர் இச்சம்பவத்தோடும் விடுதலைப் புலிகளோடும் தொடர்புடையவர்கள் எனவும் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு அட்டன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி தற்போது களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தோட்டப்புற இளைஞர்கள் 6 பேரும் தமது விடுதலையைக் கோரி சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளத் தீர்மானித்திருந்தனர்.

அட்டன் சித்திரவத்தைத் தோட்டத்தைச் சேர்ந்த சுப்பு உதயகுமார், (26) பிச்சமுத்து சந்திரன், (23) டிக்கோயா என் பீல்ட் தோட்டம் சாமிமுத்து பெனடிக்ட் (24), சென் எலியாஸ் தோட்டம் அருணாச்சலம் யோகேஸ்வரன்(26), குடாஓயா தோட்டம் சோலமலை லோகநாதன் (29) கொட்டகலை சௌமியபுரம் பொன்னையா சரவணகுமார் (23)ஆகியோரே இந்த ஆறு பேருமாவர். இவர்களில் சுப்பு உதயகுமார் சோசலிச சமத்துவக் கட்சியின் ஆதரவாளராக இருந்ததோடு கடந்த பிரதேச சபைத் தேர்தலில் கட்சியின் வேட்பாளராகவும் போட்டியிட்டார்.

இவர்களை உடன் விடுதலை செய்யக் கோரி சோ.ச.க. பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. "புலிகளின் ஊடுருவலை" தவிர்க்கும் போர்வையில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் கடுமையான சட்டம் விதிக்கப்பட்டிருப்பது இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட பகுதியான தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களை தீவிரமாக ஒடுக்கி தள்ளுவதற்காகும். மிகவும் சாதாரண பொய்க் குற்றச் சாட்டின் கீழ் நூற்றுக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் விசாரணையின்றி இவ்வாறு நீண்ட காலம் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த இளைஞர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது ஒரு வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டதற்கு பின்னரே. அதுவும் முதலில் குறிப்பிட்ட குற்றச் சாட்டுகள் அல்ல.

அதற்கு பதிலாக தோட்டப்புறங்களில் மின்மாற்றிகளை தகர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக் குற்றச் சாட்டுகளை நிராகரித்துள்ள இளைஞர்கள் ஆறு பேரும், அது பொலிசாரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒன்று எனக் குறிப்பிடுகின்றனர். 1999 ஜுலை 8ம் திகதி கண்டி உயர் நீதி மன்றத்தில் முதன் முதலாக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு முழுமையாக ஒத்தி வைக்கப்பட்டது.

அட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்களான சம்பந்தன் திருவருட் செல்வன், சிவனு சிவானந்தராஜா ஆகிய இருவரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு இளைஞர்களின் பேரில் ஆஜராகும் சட்டத்தரணி அஜித் ரட்னாயக்கவும், அவரது மொழி பெயர்ப்பாளரான அ.சாந்தகுமாரும் (இவர்கள் இருவரும் சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்கள்) கடந்த டிசம்பர் 4ம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ள தமது ஆதரவாளர்களை சந்திப்பதற்காக தமிழ் சிறைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரதான சிறைச்சாலையான களுத்துறைக்குச் சென்றனர். சிறைச்சாலைக்கு செல்ல எந்த விதமான போக்குவரத்தும் அற்ற ஒரு நிலையில் கைதிகளைப் பார்வையிடச் செல்பவர்கள் களுத்துறை நகரிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் வரை நடந்து அல்லது முச்சக்கர வண்டிகளிலேயே செல்ல வேண்டும்.

கைதிகளை பார்வையிடுவது கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குடும்ப அங்கத்தவர்களுக்கு அதற்கான பொலிஸ் அனுமதி இருக்கவேண்டும். அரசாங்கத்தின் புதிய சட்டங்களுக்கு இணங்க இதற்காக பல மாதங்களுக்கு முன்னரே விண்ணப்பிக்க வேண்டும். சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களை பார்வையிடச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் பூரண அனுமதியைப் பெற்றிருந்த போதிலும், சாந்தகுமார் முன்னர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்ற காரணத்தினால் அவருக்கு கைதிகளைப் பார்வையிட சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதி தர மறுத்தனர். சட்டத்தரணி அஜித் ரட்னாயக்க சிறைச்சாலை ஆணையாளரோடு அவரது அலுவலகத்தில் உரையாடிக் கொண்டிருந்தபோது பிரதான அதிகாரி கலவரத்துடன் சாந்தகுமாரை சிறைச்சாலை வளாகத்தில் இருந்து வெளியேற்றுமாறு காவலாளிகளுக்கு பணித்துள்ளார். எவ்வாறெனினும் அதிகாரிகள் இறுதியில் அனுமதி வழங்க தள்ளப்பட்டனர்.

தோட்டப்புற இளைஞர்கள் 6 பேரும் அஜித்ரட்னாயக்கவோடும் சாந்தகுமாரோடும் கலந்துரையாடிய போது தாங்கள் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை என தெளிவாகக் குறிப்பிட்டனர் "பொலிசில் இருக்கும் போது நாம் மோசமான சித்திரவதைக்குள்ளானோம். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வாக்குமூலத்தில் எங்களிடம் கையெழுத்து வாங்கினர். எங்களது வாக்குமூலம் என போலியாக காட்டுவது அதையே."

பொலிசிலும் அங்கு வன்முறை ஒழிப்பு பகுதியிலும் மூன்று மாதங்கள் எங்களை அடைத்து வைத்திருந்த பின் எம்மை அட்டன் கொண்டு சென்றார்கள். அட்டன் பதில் நீதவான் ராஜேந்திரன் முன்நிலையில் ஆஜர் செய்து விட்டு கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கும் அதன் பின்னர் அங்கிருந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கும் கொண்டு வந்தனர்" என சுப்பு உதயகுமார் குறிப்பிட்டார்.

"கைது செய்வதற்கான உத்தரவை பெற்றுக் கொள்வதற்காக எங்களை மஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவில்லை. மஜிஸ்திரேட் வீட்டில் இருந்து அங்கு வருகை தரும் வரையும் நாம் பொலிஸ் வாகனத்திலேயே இருந்தோம். அப்போது எங்களைக் காட்டினார்கள். அவர் எங்களை நிமிர்ந்தும் பார்க்காமலே ஒரு காகிதத்தில் கையொப்பமிட்டார். பின்னர் எங்களை போகாம்பர சிறைச்சாலைக்கு கொண்டு வந்தனர்." என பொன்னையா சரவணகுமார் குறிப்பிட்டார்.

## வழக்கு ஒத்திவைப்பு

வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதை பற்றி கேட்ட போது சோலமலை லோகநாதன் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இது அவர்களால் சோடிக்கப்பட்ட வழக்கு, ஆகையால் நிரூபிப்பதற்கு சாட்சியங்கள் இல்லை. ஆனாலும் ஏதாவது ஒரு வகையில் எங்களுக்கு தண்டணை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது. அதன் காரணமாகவே தொடர்ந்தும் இவ்வாறு வழக்கை ஒத்தி வைக்கின்றார்கள். நாங்கள் சிறை வைக்கப்பட்டு ஒரு வருடமாகிறது. இவ்வாறு தொடர்ந்தும் வழக்கு ஒத்திவைக்கப்படுமானால் எதுவித குற்றமும் செய்யாமலே இரண்டு வருட தண்டனை அனுபவித்தவர்களாவோம்."

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனின் வருகையின் பின்னர் இந்த ஆறு பேரும் ஆரம்பித்த உண்ணாவிரதம் கைவிடப்பட்ட விதத்தை பிச்சமுத்து சந்திரன் விபரித்தார்: "எங்களை விடுதலை செய்யக் கோரி டிசம்பர் 1ம் திகதி உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்தோம். டிசம்பர் 3ம் திகதி எம்மைப் பார்வையிட வந்த பிரதியமைச்சர் சந்திரசேகரன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கலந்துரையாடி எங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டார். எங்கள் உண்ணாவிரதத்தை கைவிடச் சொன்னார். நாங்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டது அவரின் வாக்குறுதியை நம்பியதால் அல்ல. இத்தகைய பெருந்தொகையான வாக்குறுதிகளை இந்தச் சிறைச்சாலையில் இருக்கும் நாங்கள் பார்த்திருக்கிறோம். நாங்கள் பொறுத்திருந்து 2000 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க உள்ளோம். நாங்கள் அதை ஆரம்பித்தும் எங்களை விடுதலை செய்யாவிட்டால் சாகும்வரை முன்னெடுப்போம்"

எங்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய சந்திரசேகரன் வாக்குறுதியளிக்கவில்லை என அருணாச்சலம் லோகேஸ்வரன் கூறினார். "வழக்கை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார்– நாங்கள் குற்றம் அற்றவர்களாக இருந்தால் எங்களை விடுதலை செய்வார்கள். உயர் நீதிபதியுடன் கதைப்பதாகவும் பிரபல சட்டத்தரணி ஒருவரின் சேவையை பெற்றுத் தருவதாகவும் அவர் எங்களிடம் குறிப்பிட்டார்."

## வெறுப்பும் விமர்சனமும்

சந்திரசேகரனைப் பற்றி அனைவரும் முழு வெறுப்புடனும் விசனத்துடன் கதைத்தனர். "அவர் இங்கு வந்தது எங்களின் உணவை நிராகரிக்கும் உண்ணாவிரதத்தை நிறுத்தி, அரசாங்கத்தை திருப்திப்படுத்தி, மேலும் சலுகை பெற்றுக் கொள்ளவே. அரசாங்கம் அவரை இங்கு அனுப்பவில்லை என்றும் கூற முடியாது. நாங்கள் நீண்டகாலம் சிறையில் இருந்துள்ள போதும் தற்போது அவர் இங்கு வந்தது அரசியல் இலாபம் தேடுவதற்கே."

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற பொய்க் குற்றச் சாட்டின் பேரில் 1994 ம் ஆண்டு தாம் முதலாவதாக கைது செய்யப்பட்ட சம்பவத்தை தோட்டப்புற இளைஞர்கள் நினைவுபடுத்தினர். "சோ.ச.க. வின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகம் முன்னெடுத்த பிரச்சாரத்தின் விளைவாக நாம் இரண்டு வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டோம். எங்களுக்கு எதிராக வழக்குத் தொடர சாட்சி இல்லாததால் எங்களை விடுதலை செய்வதற்கான உத்தரவை சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு முன்வைத்தது.

"எங்களை விடுதலை செய்தனர். ஆனாலும் பொலிசார் நுவரெலியா மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்தனர். பிடி.எ. (பயங்கரவாதத் தடைச் சட்டம;) வின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் பொய் வாக்குமூலங்களை தற்போது சாதாரன சட்டத்தின் கீழ் பயன்படுத்துகிறார்கள். வழக்கு விசாரணை ஆரம்பித்தவுடன் பொலிசார் மூன்று சாட்சிகளை முன்வைத்தனர். அவர்கள் அனைவரும் எங்களை கண்டதில்லை என்று கூறிவிட்டனர். ஆனாலும் வழக்கு இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது." (பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் பொய் வாக்குமூலங்களை சாதாரண சட்டத்தின் கீழ் பயன்படுத்த முடியாது.)

"கடந்த ஆண்டு எமது சார்பாக அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் 'அவற்றை உடனடியாக கணக்கில் எடுக்கவில்லை. தற்போதைய வழக்கு விசாரணை ஆரம்பித்தவுடன் அரச வைத்திய அதிகாரி ஒருவரைக் கொண்டு எங்களை சோதனை செய்ய நீதி மன்றம் உத்தரவிட்டது. நாங்கள் ஒரு வருடகாலம் சித்திரவதை செய்யப்பட்டோம். வைத்திய அதிகாரியால் எவ்வாறு சித்திரவதை தொடர்பான சரியான அறிக்கையை முன்வைக்க முடியும். அவர் எங்கள் உடலில் உள்ள தளும்புகளை பார்ப்பார். அதையும் தேடிக்கொள்ள முடியாவிட்டால் நாங்கள் சொல்வதை முன்வைப்பார்."

## சிறைச்சாலை நிலைமைகள்

இக்கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலை நிலைமைகள் தொடர்பாக குறிப்பிடும் போது "இங்கு தமிழ் அரசியல் கைதிகள் 844 பேர் உள்ளனர். அதில் 78 பேர் குற்றவாளிகள். 20x40 அடி பரப்பான மண்டபத்தில் நாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். ஒரு மண்டபத்தில் 50–60 கைதிகள் வரை உள்ளனர். எங்களுக்கு ஒழுங்கான சாப்பாடு கிடைப்பதில்லை. அசுத்தமான மரக்கறியையும், கல் நிறைந்த அரிசியையும் சமைத்து போடுகிறார்கள். அரசாங்க சஞ்சிகைகள் இரண்டு மாத்திரமே எங்களுக்கு கிடைக்கிறது. அரசியல் புத்தகங்களுக்கு அனுமதி கிடையாது.

"ஒரு மண்டபத்திற்குள் ஒன்று அல்லது இரண்டு மலசல கூடங்களுக்கு மேல் கிடையாது. சௌக்கிய நிலைமைகள் மிகவும் மோசமாக உள்ளது. சிறைச்சாலைக்கென்று ஒரே ஒரு வைத்தியர் உள்ளார். அவருக்கு எமது மொழி புரியாது. எங்களை வைத்தியசாலைக்கு அனுமதித்தாலும் நிலத்திலேயே தூங்க வேண்டும். (சுகாதார வசதி மிகவும் மோசமாக உள்ளதால் கைதிகள் கடந்த 18, 19 ம் திகதிகளில் உணவை நிராகரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்)

"சிறைச்சாலை நிர்வாகிகள் சிங்களம் பேசும் சாதாரண குற்றவாளிகளை சமைப்பதற்கு வைத்துக்கொண்டுள்ளனர். 1997ல் இந்த குற்றவாளிகள் தமிழ் பேசும் கைதிகளை தாக்கினர். இந்த சிறைச்சாலை அதிகாரிகள் இனவாதிகள். தேவையான சந்தர்ப்பத்தில் எங்களுக்கு எதிராக கிறிமினல் குற்றவாளிகளை தூண்டிவிட முடியும். 1983 முதல் அவ்வாறான சந்தர்ப்பங்கள் பல இடம்பெற்றுள்ளன. சில அரசியல் கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆணைக்குழுக்கள் நியமித்து விசாரணைகள் நடாத்திய போதிலும் எதுவும் நடக்கவில்லை. தவறிழைத்தவர்களை தூக்கி பிடித்துள்ளனர்."

சிறைச்சாலையைச் சுற்றி மூன்று மதில்கள் கட்டப்பட்டுள்ளதோடு பொலிஸ், இராணுவம் மற்றும் ஜெயிலர்கள் மூலம் அவை பர்துகாக்கப்பட்டு வருகின்றன. பெரும் குற்றவாளிகள் எனக் கூறப்படும் கைதிகள், அதிகாரிகள் மூலம் ஏனைய கைதிகளில் இருந்து வேறுபடுத்தப்பட்டுள்ளனர். சிறைச்சாலை கொசுக்களால் நிரம்பியுள்ளது. கைதிகள் தூங்கும்போது மாத்திரமே பாய் கிடைக்கும;."

இங்னனம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர்கள் சிலரை எமது உலக சோசலிச வெப் தளத்தின் நிருபர்கள் அட்டனில் சந்தித்தனர். "எங்களால் எங்கள் பிள்ளைகளை சந்திக்க முடிவதில்லை. அவர்களைப் பார்க்கச் சென்றால் எங்களுக்கு நான்கு நாட்களுக்கு வேலைக்குச் செல்லமுடியாது. 5,6 நாள் சம்பளத்தை அதற்காக செலவிட வேண்டியுள்ளது. வேலை நாள் ஒன்றுக்கு எங்களுக்கு கிடைப்பது 95 ரூபா மாத்திரமே. நாங்கள் அவ்வாறான சம்பளத்திற்கு வேலை செய்து கொண்டு, (பயணச் செலவு) சாப்பாட்டு செலவுகளுடன் பிள்ளைகளை பராமரிப்பது எப்படி? என ஒரு தந்தை குறிப்பிட்டார்.

"எங்களுக்கு அவர்களோடு சரியாக கடித தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. நாங்கள் அனுப்பும் கடிதங்கள் ஒரு மாதம் கழித்தே அவர்களுக்கு கிடைக்கிறது. அவர்கள் அனுப்பும் கடிதங்களுக்கும் இதுதான் நடைபெறுகிறது. அனுப்பும் கடிதங்களையும் அவர்களின் கடிதங்களையும் சோதிக்கின்றார்கள். பிள்ளைகள் அடிக்கடி சவற்காரமும் பற்பொடியும் கேட்டு எழுதுகிறார்கள். அத்தகைய தேவையான பொருட்களைக் கூட சிறைச்சாலை வழங்குவதில்லை" என மற்றுமோர் தந்தை குறிப்பிட்டார்.

உதயகுமாரின் தந்தை சுப்பு குறிப்பிடும் போது "எங்களுடைய பிள்ளை ஒரு வருடத்திற்கு மேலாக சிறையில் உள்ளார். எந்த ஒரு தொழிற்சங்கத் தலைவரோ, அரசியல் தலைவரோ அவர்களைச் சந்திக்கச் செல்லவில்லை. அவர்களை விடுதலை செய்ய எந்த ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. ஆனால் ஜனாதிபதி தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்தவுடன் சில அரசியல் தலைவர்கள் அரசியல் கைதிகள் தொடர்பாக கதைக்கவும் அறிக்கைகள் வெளியிடவும் ஆரம்பித்தார்கள். தேர்தல் முடிந்தவுடன் இந்த தொழிற்சங்கத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் தமது பெயர்களை காத்துக் கொள்ள தவண்டை அடிக்கிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானக் கடத்தல் முடிவடைந்த பின்னர் இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக சூடுபறக்கும் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியுள்ளது

பீட்டர் சைமன்ஸ்

இந்தியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த மூன்று காஷ்மீர் பிரிவினைவாதிகளை விடுதலை செய்து, கையளிக்கும் உடன்பாட்டின் அடிப்படையில் டிசம்பர் 31ம் திகதி பணயம் வைத்திருந்த 155 பேரும் விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து இந்திய விமானச் சேவையின் (814) விமானக் கடத்தல் சம்பவம் நிறைவு பெற்றது. ஆனால் இந்தியாவின் உள்ளும் இந்தியத் துணைக் கண்டத்தினுள்ளும் இந்த விமானக் கடத்தலினால் உருவான அரசியல் தாக்கங்கள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆப்கானிஸ்தானின் கந்தகார் விமான நிலையத்தில் ஆரம்பமான இச்சம்பவம், பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயின் இந்திய அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க் கட்சிகளதும் தொடர்பு சாதனங்களதும் விமர்சனங்களை உக்கிரம் அடையச் செய்ததோடு அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ஆதாளபாதாளத்தை மேலும் ஆழித்தது.

சம்பவம் நிறைவு பெற்றதுதான் தாமதம் பாகிஸ்தானுக்கு எதிரான வார்த்தை ஜாலங்கள் நிறைந்த குற்றச்சாட்டில் இந்தியா ஈடுபட்டது. இந்திய வெளிநாட்டமைச்சர் ஜஸ்வந்சிங் (ஜனவரி) வெளியிட்ட அறிக்கையில் விமானக் கடத்தல் சம்பவத்தின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்துள்ளதற்கான 'நம்பத்தகுந்த' சாட்சியங்கள் கிடைத்திருப்பதாகக் கூறினார். விமானக் கடத்தல் காரர்களுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் அவர்கள் "மூன்றாவது சக்தியின் ஆலோசனைகளின்படி" நடந்து கொண்டுள்ளதாக மேலும் குற்றம் சாட்டினார். பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தை தொடர்ந்து மேலும் முன்னெடுப்பதாகவும் விமானக் கடத்தல் சம்பந்தமான 'பெறுபேறுகள் கிட்டும்' எனவும் 'நீதி கிடைக்கும்' எனவும் சிங் உறுதி கூறினார்.

இதைத் தொடர்ந்து இந்திய பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிஜேஸ் மிஸ்ரா 'ஸ்டார்' தொலைக் காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் "பாகிஸ்தான் இந்த சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளது என்பதற்கு தெளிவான சாட்சி இந்தியாவுக்கு கிடைத்துள்ளதாகவும் சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் திட்டவட்டமான முறையில் பொறுப்புச் சொல்லியாக வேண்டும்" எனவும் குறிப்பிட்டார். அவர் விமானக் கடத்தல்காரர்கள் பாகிஸ்தானியர்கள் எனவும் பணயக் கைதிகளின் சார்பில் கையளிக்கப்பட்ட மூன்று கைதிகளில் இருவர் பாகிஸ்தானியர் எனவும் அவர் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டிக் கொண்டார். அத்தோடு விமானத்தை கடத்திச் சென்ற கடத்தல்காரர்கள் கும்பல் பாகிஸ்தான் திசையில் பயணம் செய்ததாகவும் மிஸ்ரா குற்றம் சாட்டினார்.

இருந்த போதிலும் இந்தச் சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கத்தின் பங்களிப்பை ஊர்ஜிதம் செய்யும் எந்த ஒரு தெளிவான சாட்சியத்தையும் முன்வைக்க மிஸ்ரா தவறியதோடு, காஷ்மீர் பிரிவினைவாதிகள் காஷ்மீருடன் கொண்டுள்ள வானொலி கலந்துரையாடலை அந்தரங்கமாக ஒற்றுக் கேட்டதன் மூலம் இந்திய உளவுச் சேவையினர் வழங்கிய மேலதிக சாட்சியங்கள் பற்றியே பெரிதும் பேசிக் கொண்டார். சம்பவம் தொடர்பாக ஏதேனும் சிறு தகவல்களை பெற்றுக் கொள்ள முடிந்தாலும் எலக்ரொனிக் சாதனங்களின் தலையீடு மூலம் பெற்றுக் கொண்ட உளவுச் செய்திகளின் பிரதிகள் எதுவும் இன்னமும் வெளியிடப்படவில்லை.



*கந்தகார் விமான நிலையத்தில் தரையிறங்கியிருக்கும் கடத்தப்பட்ட விமானத்தின் அருகில் தலிபான் இராணுவத்தினர்*

## நிராகரிப்பு

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் அப்துல் சத்தார் இந்திய குற்றச்சாட்டுக்கள் "சிருஷ்டிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்" என நிராகரித்தார். அத்தோடு "அரச பயங்கரவாதம் பற்றிய வெறுப்புக்கிடமான ஒரு அறிக்கை இந்தியாவிடம் இருந்துகொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். காஷ்மீர் பிரிவினைவாதக் குழுக்களை ஆயுத பலத்தின் மூலம் நசுக்கித் தள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய பாதுகாப்புப் படைகளின் கீழும் இந்திய ஆட்சியாளர்களின் கீழும் இருந்துகொண்டுள்ள ஜம்மு-காஷ்மீர் பிராந்தியத்தில் வன்முறைகளும் காணாமற்போதலும் ஜனநாயக உரிமைகளை துவம்சம் செய்வதும் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. விமானக் கடத்தலை பாகிஸ்தான் கண்டனம் செய்வதாகக் குறிப்பிட்ட சத்தார், பாகிஸ்தான் தேச எல்லைக்குள் விமானக் கடத்தல்காரர்கள் நுழையுமிடத்து அவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் தெரிவித்தார்.

இந்த அரசியல் நிலைமை மேலும் சூடுபிடிக்கும் விதத்தில் ஜனவரி 2ம் திகதி பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் ஆதரவு வழங்கியதாக திட்டவட்டமாக குற்றம் சாட்டினார். அத்தோடு பாகிஸ்தான் அரசை ஒரு பயங்கரவாத அரசாக பெயர் சூட்டும்படியும் அவர் வேண்டிக் கொண்டார். வாஜ்பாய் கூறியதாவது: "விமானக் கடத்தல் பாகிஸ்தான் ஆதரவுடன் கூடிய பயங்கரவாத நடவடிக்கையின் ஒன்றிணைந்த பாகமாகும என்பதை தெளிவுபடுத்தும் சகல தகவல்களும் இப்போது இந்திய அரசாங்கத்திடம் உள்ளது" எனக் கூறினார். "இந்தியாவினுள் பயங்கரவாதத்துக்கு தூபமிடுவது தொடர்பான பாகிஸ்தானிய நடவடிக்கைகளின் குமுறல் நிலையை அனைத்துலக சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது இன்று பெரிதும் தெளிவாகியுள்ளது" எனவும் இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்தார். உலகின் முக்கிய நாடுகள் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாகப் பிரகடனம் செய்வதைக் காண்பதில் இந்தியா பெரும் அக்கறை காட்டுகின்றது.

சிறப்பாக பாகிஸ்தானை தனிமைப்படுத்தும் தொடக்கிவைப்பில் ஈடுபட வாஜ்பாய் கிளின்டன் நிர்வாகத்தை ஊக்குவிக்கின்றார். பாகிஸ்தானின் ஆதரவு கொண்ட ஆயுதக் குழுக்கள் கடந்த ஆண்டில் காஷ்மீரின் கார்கில் பிராந்தியத்தின் விரகி முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டதிலிருந்து தலைதூக்கிய நெருக்கடியில் அமெரிக்காவின் உறவுகள் இந்தியாவின் பக்கம் திரும்பியமையை தமது நலன்களுக்கு பயன்படுத்திக் கொள்ள வாஜ்பாய் பிரயத்தனம் செய்கின்றார். இதில் சந்தேகம் கிடையாது. இந்தப் படையணிகளை அந்தப் பிராந்தியத்தில் இருந்து வாபஸ் பெறும்படி வாஷிங்டன் ஆட்சியாளர்கள் இஸ்லாமாபாத்துக்கு கணிசமான நெருக்குவாரங்களை கொணர்ந்தனர். அத்தோடு அதில் இருந்து இந்திய பாரதீய ஜனதாக கட்சி கூட்டரசாங்கத்துக்கும் வாஷிங்டன் ஆட்சியாளர்களுக்கும் இடையே உயர் மட்ட சந்திப்புகள் பல இடம் பெற்றன.

கிளின்டன் நிர்வாகம் பாகிஸ்தானை பயங்கரவாத அரசாக பெயர் சூட்டுவதை நிராகரித்துள்ள போதிலும் அது கென்யாவுக்கும், தான்சானியாவுக்கும் 1998ல் அமெரிக்க தூதரகம் மீதான குண்டுத் தாக்குதலுக்கு திட்டமிட்டதாக குற்றம் சாட்டும் சவூதி அரேபிய கோடீஸ்வரரான ஒசாமா பின்லேடனுக்கும் எதிரான தொழிற்பாடுகள் சம்பந்தமாக இந்தியாவுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளது. விமானக் கடத்தல் சம்பவம் தொடர்பாக அமெரிக்க உளவுச் சேவைகள் பல்வேறு காஷ்மீர் பிரிவினைவாதக் குழுக்கள் சம்பந்தமான தகவல்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ளன.

## திசை திருப்பல்

வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடுத்த தீர்க்கமான தாக்குதல்களின் நோக்கம், விமானக் கடத்தல்காரர்களுடன் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பாரதீய ஜனதா கட்சியினுள்ளும் தலைதூக்கிய விமர்சனங்களை திசைதிருப்புவதேயாகும்.

விமானக் கடத்தல்காரர்கள் பயணிகளை பணயம் வைத்துக் கொண்டிருந்த காலத்தினுள் அவர்களின் குடும்பத்தினர், தமது உறவினர்களை எந்தவித தொந்தரவுக்கும் இலக்காகாமல் விடுதலை செய்ய உதவுவதை ஊர்ஜிதம் செய்யும் உடன்பாட்டுக்கு வரும்படி கோரி புதுடில்லியில் ஒரு தொகை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து இந்திய எதிர்க்கட்சியினரும், வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் சம்பவம் தொடர்பாக கண்டிப்பான விதத்தில நடந்து கொள்ள அரசாங்கம் தவறிவிட்டதாக கண்டனம் செய்வதை உக்கிரமாக்கினர். இந்திலையில் இந்தியாவின் "இடதுசாரி" தலைமைகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பா.ஜ.க. அரசாங்கத்தை பெரிதும் வலதுசாரி பாணியில் கண்டனம் செய்ததோடு அது இந்திய தேசிய நலன்களுக்கு குழிபறித்துள்ளதாகவும் குற்றம் சாட்டின.

# உலகம் பூராவும் தொழிலாளர் போராட்டங்கள்

### அமெரிக்கா:

#### கொக்கா கோலா கம்பனியில் 6000 பேரின் தொழில் வெட்டு

உலகின் பிரமாண்டமான குளிர்பான உற்பத்தியாளர்களான கொக்காகோலா கம்பனி எதிர்வரும் ஒரு சில மாதங்களுள் 6000 தொழிலாளர்களை அல்லது அதனது பூகோளரீதியான உழைப்பு படையில் 1/5 பங்கை வெட்டித் தள்ளப் போவதாக ஜனவரி 16ம் திகதி அறிவித்தது. அமெரிக்காவில் அட்லான்டில் உள்ள கம்பனியின் தலைமை அலுவலகத்தில் சுமார் 2500 தொழில்களை அல்லது உழைப்பு படையில் நூற்றுக்கு 40 வீதத்தினரை வெட்டித் தள்ள நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. கம்பனியின் ஏனைய அனைத்துலக உற்பத்தி நிலையங்களில் உள்ள ஊழியப் படையில் 2700 பேரை சேவை நீக்கம் செய்யவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. 200க்கும் அதிகமான நாடுகளில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்த கொக்கா கோலா கம்பனி அமெரிக்க வோல் ஸ்ரீட் பங்குச் சந்தை முதலாளிகளுக்கு பிரமாண்டமான இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐரோப்பா:

#### பிரித்தானிய புகையிரத சாரதிகள் வேலை நிறுத்தம்

35 மணித்தியால (கிழமைக்கு) வேலை நேரம், நூற்றுக்கு நூறு வீதம் ஓய்வுதியம் உட்பட சேவை நிலைமைகளை அதிகரிக்கும்படி கோரி இங்கிலாந்தின் புகையிரத சாரதிகள் ஜனவரி 25ம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் இங்கிலாந்தின் கொனெக்ஸ் கம்பனி ஊழியர்கள். வேலை நிறுத்தம் இடம் பெற்ற நாளில் வட-கிழக்கு இங்கிலாந்தில் பத்துக்கு ஒரு புகையிரதம் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

பொதுவாக இக்கம்பனி லண்டனுக்கு (தினசரி) பயணம் செய்யும் 200000 பயணிகளை ஏற்றி இறக்கும் வேலையில் ஈடுபட்டுவந்தது. ஆனால் இக்கம்பனி சேவையில் ஈடுபடுத்தும் 3500 புகையிரதங்களில் 350 புகையிரதங்கள் மட்டுமே வேலை நிறுத்த நாளில் சேவையில் ஈடுபட்டன. இந்த புகையிரத வேலை நிறுத்தம் காரணமாக லண்டனில் போக்குவரத்து நெரிசல் நூற்றுக்கு 15 வீதம் அதிகரித்தது.

### பேரு:

#### வேலையற்ற கட்டிடத் தொழிலாளர் நடைபவனி

பேரு நாட்டின் வேலையற்ற கட்டிடத் தொழிலாளர்களும் அவர்களின் மனைவிமாரும் மற்றும் குடும்ப அங்கத்தவர்களும் வேலை வழங்கும்படி கோரி ஜனவரி 18ம் திகதி அரசாங்க மாளிகைக்கு (Government Palace) நடை பவனி ஒன்றை நடாத்தினர். அரசாங்கத்தன் புதிய- லிபரல் பாணி தோல்வி கண்டுள்ளதாக சிவில் கட்டிடத் தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். பேரு நாட்டில் 250,000 கட்டிடத் தொழிலாளர்கள் வேலையின்றி உள்ளனர். கடந்த 5 வருடங்களாக சம்பளங்கள் உறையச் செய்யப்பட்டுள்ளதோடு தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வசதிகளும் கிடையாது. ஜனவரி 26ம் திகதி கட்டிடத் தொழிலாளர்கள் தேசிய ரீதியிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மார்ச் மாதத்தில் நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ள பொது வேலை நிறுத்தத்துக்கான தயாரிப்பாக பெப்பிரவரி 16ம் திகதி தேசிய ரீதியில் மற்றொரு அணிதிரள்வில் ஈடுபட கட்டிடத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

## இலங்கை:

### வடக்கு–கிழக்கு அமைய ஊழியர் பிரச்சாரம்

சேவை நிரந்தரம் உட்பட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து, வடக்கு–கிழக்கு மாகாண அரச சிற்றூழியர்கள் கடந்த ஜனவரி 24 திகதி திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண சபை ஆளுனர் அலுவலகத்தின் எதிரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களின் இந்த பிரச்சார இயக்கத்தின் மத்தியில் அரச பொது ஊழியர் சங்கத் தலைவர்களுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது 3 மாத காலத்துள் சகலரையும் சேவையில் நிரந்தரமாக்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது. இத்தகைய வாக்குறுதிகள் முன்னரும் பல தடவை வழங்கப்பட்ட போதிலும் தொழிலாளர்களின்

பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டவில்லை. அரசாங்க சேவையில் (தொடர்ச்சியாக சேவையாற்றி இருந்தால்) உள்ள சகல தொழிலாளர்களையும் சேவை நிரந்தரமாக்கக் கோரும் சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சினால் சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## புத்தளம்:

### சீமெந்து பக்டரியில் வேலை, சேவை வெட்டு

புத்தளம் சீமெந்து பக்டரி பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் தனியார் துறைக்கு விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களின் தொழில், சேவை நிலைமைகளை வெட்டித் தள்ள பக்டரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'யிடம் தெரிவித்தனர்.

1998 நவம்பரில் 188 தொழிலாளர்கள், நஷ்டஈடு கொடுப்பனவுகள் அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்டதோடு, எஞ்சியுள்ள நிரந்தர ஊழியர்களையும் வேலை நீக்கம் செய்து, ஒப்பந்த அடிப்படையில் அமைய தொழிலாளர்களை மிகவும் இக்கட்டான சேவை நிலைமைகளின் கீழ் சேவைக்கு அமர்த்தி தமது இலாப மட்டத்தைத அதிகரிக்க புதிய பக்டரி நிர்வாகம் செயற்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள நிரந்தர தொழிலாளர்களையும் வேலை நீக்கம் செய்யும் பொருட்டு "சுயவிருப்பின்" பேரிலான ஓய்வுத் திட்டத்தை ஊக்குவிக்கும் நஷ்டஈட்டு தொகையை நிர்வர்கம் 10 இலட்சம் வரை அதிகரிப்பதாக தெரிவித்தது. ஆனால் ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு அவர்களின் சேவைக் காலத்தின் அடிப்படையிலேயே நஷ்டஈடு வழங்கப்படுகின்றது.

புத்தளம் சீமெந்து பக்டரி சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஹோல்டர் பாங் கம்பனியினால், சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

## பெருந்தோட்டம்:

### வீடமைப்பு மானியத்தை சம்பளத்தில் வெட்டுவதற்கு எதிர்ப்பு

நெதர்லாந்து, நோர்வே முதலான நாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டு தமக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் பேரில் சம்பளத்தில் இருந்து பணம் அறவிடுவதை நிறுத்தும்படி கோரி பஹத்த தும்பர தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்த விதத்தில் கிடைத்த நிதி உதவியில் இருந்து ஒரு வீட்டுக்கு ரூபா 30,000 வீதம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து அறவிட தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. 15 வருட காலத்தினுள் இந்த நிதியை சம்பளத்தில் இருந்து அறிவிடும் போது ஒரு தொழிலாளி ரூபா. 69,000 செலுத்த நேரிடும். அந்த விதத்தில் உதவி நிதியின் இரண்டு மடங்கிற்கும் அதிகமான பணம் தொழிலாளர்களிடமிருந்து கறக்கப்படும் நிலை ஏற்படும். இதையிட்டு தொழிற்சங்கங்கள் முழு மௌனம் சாதித்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

## கொழும்பு:

### புறக்கோட்டை நாட்டாமை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு நகரின் தனியார் மொத்த வர்த்தக நிலையங்களில் மூட்டைகளை ஏற்றி இறக்கும் வேலைகளில் ஈடுபடும் 4000 நாட்டாமை தொழிலாளர்கள் கடந்த ஜனவரி 3ம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உலர் உணவு பொருட்களைக் கொண்ட மூடையை ஏற்றி இறக்க தற்சமயம் வழங்கப்படும் ரூபா.4ம், ரூபா.3ம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக விளங்கியது. கொழும்பு நகரின் 4ம் குறுக்குத் தெரு, 5ம் குறுக்குத் தெரு, பழைய சோனகத் தெரு ஆகிய இடங்களில் இப்போராட்டம் பரவியிருந்தது. இதனால் அன்றைய தினம் இந்த வீதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் கண்டது.

அன்று மத்தியானம் பழைய சோனகத் தெருவில் வர்த்தகர் சங்க தலைவர் கே.பழனியாண்டியுடன் தொழிலாளர் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடாத்தினர். இக்கோரிக்கைகளை வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

சில கடை முதலாளிகள் இந்த மூடைகளை லொறிகளில் ஏற்றுவதற்கு ரூபா.6ம் இறக்குவதற்கு ரூபா.5ம் வார்த்தகர்களிடம் இருந்து அறவிடுகின்ற போதிலும் தொழிலாளர்களுக்கு இது கிடைப்பது இல்லை. இவர்களுக்கு நிலையான சம்பளம் கிடையாது. லொறிகளுக்கு இந்த மூட்டைகளை ஏற்றி இறக்குவதன் அடிப்படையிலேயே கூலி வழங்கப்படுகிறது.

## இந்தோனேசியா:

### ஆடைத் தொழிற்சாலை பெண் தொழிலாளர்கள் பிரச்சாரத்தில்

மிகவும் நல்ல சம்பளம், சுத்தமான குடிநீர், பயணச் செலவு உட்பட்ட சிறந்த சேவை நிலைமையையும் உறுதி செய்யக் கோரி, இந்தோனேசியாவில் செமரான் பிரதேசத்தில் உள்ள பீடீ சூர்யா இந்தா காமின்டோ ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பெண் தொழிலாளர்கள் ஜனவரி 28ம் திகதி மத்திய ஜாவாவில் அமைந்துள்ள பிரதேச தொழிலாளர் அலுவலக முன்நிலையில் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தினர். தங்களின் சுகாதார காப்புறுதி பணத்தை வழங்கும்படியும், தாம் விரும்பிய தொழிற்சங்கத்தில் சேருவதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும் தொழிலாளர்கள் கோரினர்.

"நாம் விரும்பும் தொழிற்சங்கத்தில் சேருவதற்கான உரிமை எமக்குத் தேவை. எஸ்.பி.எஸ்.ஐ. சங்கம் மாத்திரம் அல்ல, தற்போது பல தொர்ழிற்சங்கங்கள் உள்ளன. எஸ்.பி.எஸ்.ஐ. என்பது சுகார்த்தோவின் சர்வாதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரசாங்க சார்பு தனி இந்தோனேசிய தொழிலாளர் சம்மேளனமாகும்.

# இந்திய தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஆறு மாதங்களை தாண்டுகின்றது

**சுந்தரம், கணேஷ்தேவ்**

தென் இந்திய மாநிலமான தமிழ்நாடு மாஞ்சோலை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் 2000 பேர் பொலிஸ் பயமுறுத்தல்களுக்கும் தோட்ட நிர்வாகத்தின் கெடிபிடிகளுக்கும் மத்தியில் சேவை நிலைமைகளையும் சம்பளத்தையும் அதிகரிக்கும்படி கோரி 6 மாதங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேலை நிறுத்தத்தில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாஞ்சோலை, நலுமுக்கு, ஊத்து தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கு 85 வீதத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு இந்திய முதலாளித்துவத்தின் பாரம்பரிய அரசியல் கட்சியான இந்திய காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைமை தாங்கியது. இத்துடன் சாதி முறையை அடிப்படையாகக் கொண்ட புதிய தமிழகம் கட்சியும் சேர்ந்து கொண்டுள்ளது.

நவம்பர் 15 ம் திகதிக்கு முன்னர் வேலைக்குத் திரும்பாது போனால் முழுத் தொழிலாளர்களையும் வேலை நீக்கம் செய்யப் போவதாக தோட்ட நிர்வாகம் மிரட்டியிருந்தது. இச்சமயத்தில் புதிய தமிழகம் கட்சியின் தலைவரான கலாநிதி. கே.கிருஷ்ணசாமி பிரச்சினையில் தலையிடும்படியும் மாஞ்சோலை தோட்டத்தை கொள்வனவு செய்யும்படியும் தமிழ் நாடு மாநில அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார்.

நவம்பர் 24ம் திகதி மாநில கூட்டு தொழில் ஆணையாளர், தொழிற்சங்கங்கள், தோட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்ட ஒரு முத்தரப்பு கூட்டம் இடம் பெற்றது. நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மட்டுமே மீண்டும் வேலை வழங்குவோம் என நிர்வாகம் அடம்பிடித்தது. இதனால் பேச்சுவார்த்தை தோல்வி கண்டது. உழைப்பு படையில் 1600 பேர் நிரந்தரத் தொழிலாளர்கள். 800 பேர் தற்காலிகத் தொழிலாளர்கள். டிசம்பர் 8ம் திகதி இப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இடம் பெற்ற போதிலும் அதை தொடர்ந்து நடாத்த ஏற்பாடாகியுள்ளது. வேலை நிறுத்தக்காரர்கள் தோட்டங்களுக்கு அண்மையில் உள்ள ஆரோக்கியநாதபுரம் கிராமத்தில் வாழ்க்கை நடாத்துவதோடு அயல் கிராமங்களில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டே உயிரைக் காக்க முடிந்துள்ளது. ஒவ்வொரு கிராமமும் சுற்று முறையில் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் அவசியமான உணவுப் பொருட்களை– அரிசி மூடை 2–3 பருப்பு– வழங்கி வருகின்றன.

தோட்டங்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிறிய தொகையினரே வேலை செய்கின்றனர். முகாமை மதிப்பீட்டு எழுதுவினைஞர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்ததைத் தொடர்ந்து தோட்ட நிர்வாகம் 350 கொந்தராத்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது. 804 ஹெக்டயர் நிலப்பரப்பைக் கொண்ட இத்தோட்டங்களில் மூன்று தோட்டங்கள் பம்பாய்–பர்மா வர்த்தக கூட்டுத்தாபனத்தின் சிகம்பதி கம்பனிக்கு சொந்தமானது. இந்த வேலை நிறுத்தம் காரணமாக 1.5 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி இல்லாது போயுள்ளது. உற்பத்தி வரியாக இந்திய மத்திய அரசாங்கத்துக்குக் கிடைக்கும் 15 இலட்சம் ரூபாக்களும் தமிழ்நாடு மாநில அரசுக்கு கிடைக்கும் 3.2 மில்லியன் ரூபா வியாபார வரியும் கிடையாது போயுள்ளதாகக் கம்பனி கணக்கிட்டுக் கெண்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தம் பெப்பிரவரி, 1999ல் ஆரம்பமாகியது. தொழில் சட்டம் சிபார்சு செய்துள்ள 8 மணித்தியால வேலை நேரத்தை ஒழுங்கான முறையில் அமுல் செய்ய வேண்டும் என தொழிற் சங்கங்கள் கோரியதைத் தொடர்ந்தே இது ஆரம்பமாகியது. தோட்ட வேலை நேரம் காலை 7.30 க்கு ஆரம்பமாகி (மதிய போசன இடை வேளை 1 மணித்தியாலம் உட்பட) மாலை 4.30க்கு முடிவுறுகிறது. தேயிலைக் கொழுந்து ஒரு நாளைக்கு மூன்று தடவைகள்– மத்தியானம், மாலை 2.30, மாலை 4மணி– நிறுக்கப்படுகின்றது. எட்டு மணித்தியால வேலை நேரம் தொடர்பான பேச்சு வார்த்தைக்கு தோட்ட நிர்வாகம் இணங்காது போனதன் காரணமாகத், தொழிலாளர்களை மாலை 3.30 மணியுடன் வேலையை நிறுத்தி, கொழுந்து நிறுப்பதை நடைமுறைக்கிடும்படி தொழிற்சங்கங்கள் ஆலோசனை வழங்கின. ஆனால் நிர்வாகம் கொழுந்தை நிறுக்க மறுத்ததன் காரணமாக தொழிலாளர்கள் அவற்றை அந்தந்த இடத்திலேயே விட்டுப் போயினர்.

சட்டவிதிகளின்படி தொழிலாளர்கள் எட்டு மணித்தியால வேலை செய்திருந்தாலும் கூட தோட்ட நிர்வாகம் அரைநாள் சம்பளத்தை வெட்டி பழி வாங்கியது. ஒரு தொழிலாளியின் நாட் சம்பளம், ரூபா 63.00 (இந்தியன்.) அல்லது 1.50 அமெரிக்க டொலர்களாகும். மூன்று மாதங்களாக தொழிலாளர்கள் இந்த விதத்தில் மாலை 3.30 மணிக்கே வேலை நிறுத்த நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டனர். தோட்ட நிர்வாகம் அரைநாட் சம்பளத்தை தொடர்ந்து வெட்டிய போதிலும் எட்டு மணித்தியால வேலைநாள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த மறுத்தனர். இறுதியில் மே 29 ம் திகதி வேலை நிறுத்தம் வெடித்தது.

ஜுன் 7ம் திகதி 1600 தொழிலாளர்கள், 600 ஆண்களும் 950 பெண்களும் பிள்ளைகளும், ஓய்வு பெற்றவர்களும்– திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு ஊர்வலம் சென்றனர். தொழிலாளர்கள் அரசாங்க அதிகாரிகளைச் சந்திப்பதற்கு பொலிசார் இடமளிக்காததோடு அவர்கள் பொலிசாரின் தடையையும் தாண்டி உள்ளே செல்ல முற்பட்டபோது 450 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் "சட்டத்தின் பொறுப்பில்" ரிமாண்டில் வைக்கப்பட்டதோடு 300 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தமிழ்நாடு ட்ரிட் சிறைக்குள் தள்ளப்பட்டனர். இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஆண் தொழிலாளர்களை விடுதலை செய்யும்படி கோரி 200 பெண் தொழிலாளர்களும் 15 சிறுவர்களும் மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கு மீண்டும் ஊர்வலம் சென்றனர். பொலிசார் திரும்பவும் இவர்கள் அரசாங்க அதிகாரிகளைச் சந்திப்பதை தவிர்த்து இவர்களையும் சிறைக்குள் தள்ளியது.

ஜுலை 23 ம் திகதி மாவட்டச் செயலாளர் அலுவலகத்தை நோக்கி மற்றுமொரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட தொழிலாளர்களதும் அவர்களது குடும்பத்தினரதும் ஆதரவாளர்களை பொலிசார் ஈவிரக்கமின்றி தாக்கினர். ஊர்வலத்தின் மீதான தாக்குதல் மாஞ்சோலை படுகொலை எனப் பிரசித்தி பெற்றுள்ளது. கண்ணீர்ப் புகையுடனும் 6 அடி நீளமான குண்டாந்தடியுடனும் இடம் பெற்ற இந்த பொலிஸ் தாக்குதல் காரணமாக பலர் வேண்டுமென்றே தாமரபரணி ஆற்றுப் பக்கமாக கலைக்கப்பட்டனர். இதனால் 17 பேர் காலமானதோடு 500 பேர் காயமடைந்தனர். 3 பெண்கள் உட்பட 18–20 பேரின் நிலைமை பற்றி இன்னமும் தகவல் இல்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் எம்.கருணாநிதி பொலிசாரின் நடவடிக்கைக்ளை நியாயப்படுத்தும் பொருட்டு ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டை உடன் கூட்டினார். அதில் கருணாநிதி கூறியதாவது: "அவர்களை, (ஆர்ப்பாட்டக் காரர்களை) காக்கும் பொருட்டு பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர் மீது குண்டாந்தடியடிப் பிரயோகம் நடத்தினர். நீரில் மூழ்கி இறந்து போனவர்கள், குண்டாந்தடியடிப் பிரயோகத்தில் இருந்து தப்பியோடி ஆற்றில் நீச்சலடிக்க முயற்சித்தவர்களே."

19ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச சுகாதார சேவை மீதான அரசின் தாக்குதலுக்கு எதிர்ப்பு அதிகரிப்பு

அஜித குணரத்ன

பொதுஜன முன்னணி அரசாங்கம் இலவச சுகாதார சேவை மீது நடாத்திவரும் தாக்குதல்களுக்கு எதிராக மருத்துவ மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசாங்க டாக்டர்கள் இணைந்து எதிர்ப்புப் பிரச்சாரத்தை செய்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் கட்டளைகளுக்கு இணங்க கடந்த வருடங்களில் இலவச சுகாதார சேவைக்கு எதிரான தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களாக ஒரு தொடர் எதிர்ப்பு ஊர்வலங்களும், மறியல் போராட்டங்களும் இடம் பெற்று வருகின்றன. கடந்த செப்டம்பர் மாத ஆரம்பத்தில் 5000 மருத்துவ பீட மாணவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் (நான்கு கிலோமீட்டர்) ஊர்வலமாக சுகாதார அமைசுக்கு சென்று, அங்கு ஒரு கூட்டத்தையும் நடாத்தினர். யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வட மாகாணத்தை சேர்ந்த மருத்துவ பீட மாணவர்களும் இதற்கு தமது ஆதரவை தெரிவித்து செய்தி அனுப்பியிருந்தனர்.

உள்ளகப் பயிற்சியை முடித்தவுடன் அம்மாணவர்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் டாக்டர்களாக நியமிக்கும் நீண்ட கால நடைமுறையை அரசாங்கம் கைவிட எடுத்த முயற்சியையே மாணவர்கள் எதிர்த்தனர். கடந்த மாதங்களில் உள்ளகப் பயிற்சியை முடித்த 600 டாகடர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இன்று நாட்டில் அரச டாக்டர்களின் பற்றாகுறை அதிகரித்துள்ளது. 4347 பேருக்கு 1 வைத்தியர் என்ற விகிதத்திலேயே டாக்டர்கள் உள்ளனர். இது இந்தியாவில் 2083 பேருக்கு ஒருவர், பாகிஸ்தானில் 1923 பேருக்கு ஒருவர் ஆகிய விகிதங்களில் காணப்படுகின்றது. 1997 ம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் ஒரு இலட்சம் மக்களுக்கு 78.7 வீதமான டாக்டர்களும், 166.1 வீதமான தாதிகளும் இருந்தனர். கிராமப் புறங்களின் நிலைமை மிக மோசமானது. உதாரணமாக மொனராகலை மாவட்டத்தில் 100,000 பேருக்கு 9.4 வீத டாக்டர்களும் 36.5 வீத தாதிகளும் மட்டுமே உள்ளனர். யுத்தப் பிரதேசங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 2 வீதமானவர்களே உள்ளனர்.

வைத்திய நிபுணர்களின் பற்றாகுறை இன்னும் மோசமாக அதிகரித்துள்ளது. 1000 பேருக்கு 0.3 வீதமான நிபுணர்களே உள்ளனர். இது உலக சராசரியுடன் ஒப்பிடுகையில் 10 மடங்கு குறைவாகவும், தென் ஆசிய பிராந்திய சராசரியுடன் ஒப்பிடுகையில் அரைவாசியாகவும் உள்ளது.

இப்பற்றாக்குறையானது பல நோய்த்தடுப்பு திட்டங்களை செயலிழக்கச் செய்துள்ளதோடு கொலரா, மலேரியா, டெங்குக் காய்ச்சல், மஞ்சள் காமாளை, வயிற்றோட்டம் போன்ற நோய்களை அதிகரிக்கச் செய்துள்ளதோடு மரண வீதத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. 1963ல் 17 பேர் மாத்திரமே மலேரியாவால் பாதிக்கப்பட்டிருந்தனர். 1997ல் இது 163,000 ஆக அதிகரித்துள்ளது.

அரசாங்க முதலீட்டாளர் சபை முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகை வழங்குவதன் மூலம் தனியார் மருத்துவ கல்லூரிகளை நிறுவுவதற்கான ஊக்குவிப்பை வழங்கும் திட்டம் இருந்துகொண்டுள்ளதை கவனத்தில் எடுத்துள்ளனர். இச்சபை இதுவரை 3 தனியார் மருத்துவ மனைகளை நிறுவுவதற்கு அனுமதியளித்துள்ளது.

அதே வேளை அரசாங்கக் கல்லூரிகளில் உள்ள பீடங்களும் கீழ் நோக்கி இயங்கிக் கொண்டுள்ளன. விரிவுரையாளர்களின் தொகை மிகப் பற்றாகுறையாக உள்ளதோடு, மருத்துவ கல்லூரி உத்தியோகத்தர்கள் பற்றாகுறையும் வசதியின்மையும் காணப்படுவதாக மாணவர்களும் உத்தியோகத்தார்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

அண்மையில் நடந்த எதிர்ப்பு ஊர்வலத்தின் போது மாணவர்களும் பெற்றோர்களும் உலக சோசலிச வெப் தளத்தின் நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்தனர். கொழும்பு பல்கலைக் கழகத்தை சேர்ந்த மாணவர் ஆசா டி சில்வா கூறியதாவது: "எங்களுக்கு நூலக வசதி போதியளவு இல்லாததோடு போதியளவு புதிய நூல்கள் கிடைப்பதில்லை. அரைவாசி மாணவர்களே அரசாங்க விடுதியில் தங்கியுள்ளனர். ஏனையோர் ஆயிரக் கணக்கான ரூபாய்களை தங்குமிட வசதிக்காகச் செலவிட வேண்டியுள்ளது" என்றார்.

ஒரு மாணவரின் தாயாரான பத்மா தனபால குறிப்பிடுகையில் இது ஒரு சிக்கலான நிலைமையாகும், நாங்கள் எங்களால் முடிந்த மட்டும் பிள்ளைகளை படிப்பிக்க முயற்சிக்கின்றோம், அவர்களின் கல்விக்காக பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியுள்ளது. அவர்களும் தங்கள் கல்விக்காக வாழ்க்கையையும் நேரத்தையும் தியாகம் செய்கின்றார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையானால் வீதியில் தள்ளப்பட்டவர்கள் ஆவார்கள். இலங்கையில் வைத்தியர்கள் பற்றாகுறை இருப்பது அனைவரும் அறிந்ததே. மக்களுக்கு தகுதியான டாக்டர்களின் சேவையே தேவைப்படுகின்றது. அப்படியானால் ஏன் அரசாங்கம் புதிய டாக்டர்களை சேவையில் சேர்க்கவில்லை. இது இலவச சுகாதார சேவையை தனியார்மயப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தையே எடுத்துக் காட்டுகின்றது."

கொழும்பு மருத்துவ பீடத்தில் பயிலும் ஒரு மாணவரின் தந்தையான பி.என்.பெரேரா: "நாங்கள் எங்கள் நாளாந்த தேவைகளையும் கூட அவர்களின் கல்விக்காக செலவிடுகின்றோம். அரசாங்கம் அவர்களை வேலையற்றவர்களாக வைத்திருக்குமானால் அது மாணவர்களுக்கு மாத்திரம் அல்ல அவர்களின் பெற்றோர்களுக்கும் இழைக்கும் அநீதியாகும். டாக்டர்களின்றி நோயாளர்கள் எந்தளவிற்கு கஷ்டப்படுகின்றார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. தேவையான டாக்டர்களை சேவையில் அமர்த்தி சுகாதார சேவையை விரிவுபடுத்தவேண்டியது அரசாங்கத்தின் பணியாகும்" என்றார்.

மாணவர்கள் மீதான அரசாங்கத்தின் தாக்குதலானது இலவச சுகாதார சேவையை தனியார்மயமாக்கும் திட்டத்தின் ஒரு பாகமாகும். "சுகாதார சீர்திருத்தம்" எனும் பேரில் இதனை ஆய்வு செய்ய ஜனாதிபதி நிறைவேற்றுக் குழு ஒன்றை பொதுஜன முன்னணி அரசாங்கம் உருவாக்கியுள்ளது. ஏற்கனவே சுதந்திர வர்த்தக வலய வரிச் சலுகைகள் சுகாதார துறையில் முதலீடு செய்யக் காத்திருக்கும் பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2,467 கட்டில்களைக் கொண்ட 118 க்கு மேற்பட்ட தனியார் ஆஸ்பத்திரிகள் தீவு முழுவதும் உள்ளன. கடந்த காலங்களில் இந்தியாவின் பிரபல நிறுவனமான 'அப்பலோ' 350 கட்டில்களைக் கொண்ட ஆஸ்பத்திரியொன்றை நாரஹேன்பிட்டியில் நிறுவ அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐ,தே.க அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார சேவையை அழித்தொழிக்கும் திட்டத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. இலவச சுகாதார சேவைக்கான செலவீனங்கள் கடந்த இரண்டு தசாப்தங்களாக அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அது மொத்த தேசிய வருமானத்தின் அல்லது மொத்த தேசிய செலவீனத்தின் வீதத்திற்கு ஏற்றவாறு அதிகரிக்கப்படவில்லை. வருடாந்த சுகாதார சேவை அறிக்கையின்படி தேசிய செலவீனத்தில் இலவச சுகாதார சேவைக்கான செலவு 1989ல் 6.5 வீதமாக காணப்பட்டது. 1997ல் இது 4.7 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த தேசிய வருமானத்திற்கேற்ப 1989ம் ஆண்டு 2.3 வீதத்திலிருந்து 1997 ஆகும்போது 1.6 வீழ்ச்சி கண்டது. தற்போது அதிகரித்து வரும் ஜனத்தொகைக்கு ஏற்ப இதன் தேவை அதிகரித்துள்ளது.

இக்கால கட்டத்தில் சுகாதார சேவைக்கான மொத்த முதலீட்டு செலவினம் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது ஆஸ்பத்திரிகள், நவீன வைத்திய உபகரணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1965 ம் ஆண்டு ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் 3.2 ஆஸ்பத்திரி கட்டில்கள் இருந்தன. இது 1997ல் 2.9 வரை வீழ்ச்சி கண்டது. இதே காலப்பகுதியல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 150.4 வீத்தில் இருந்து 184.5 வீதம் வரை அதிகரித்துள்ளது.



இருதய சிகிச்சைக்காக கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் காத்திருக்கும் நோயாளிகளில் சிலர்

## தாதிமார் பற்றாகுறை

நாட்டில் 548 அரச ஆஸ்பத்திரிகளில் மோசமான தாதிமார் பற்றாகுறை காணப்படுகிறது. பொதுஜன முன்னணி அரசாங்கம் அரச செலவுகளைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் 1994,1996 களில் தாதிமார் பயிற்சி பாடசாலைகளுக்கும், மேலதிக வைத்திய பயிற்சி பாடசாலைகளுக்கும் மாணவர்களை சேர்த்துக் கொள்வதை தவிர்த்துக் கொண்டது. இவ்விரண்டு துறையிலும் பயிற்றப்பட்ட சேவையாளர்கள் தற்போது பற்றாகுறையாக உள்ளனர். உதாரணமாக கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் – இலங்கையின் பிரதான ஆஸ்பத்திரிகள் – 1300 தாதிமார்களே உள்ளனர். 1950 தாதிமார்கள் அங்கு தேவைப்படுகின்றனர்.

ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொது வைத்தியசாலைகளும் மருத்துவ மனைகளும், வடக்கில் கொழும்பு அரசாங்கம் 17 வருடங்களாக நடாத்திவரும் யுத்தம் காரணமாக மேலும் மோசமடைந்துள்ளன. ஏற்கனவே நிரம்பிவழியும் பொது வைத்தியசாலைகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதே வேளை வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கான சுகாதார சேவை கைவிடப்பட்டுள்ளது, அல்லது இராணுவத்தினராலோ பிரிவினைவாத விடுதலைப் புலிகளாலோ ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.க, பொதுஜன முன்னணி ஆகிய இரண்டு அரசாங்கங்களும் வைத்தியசாலை நிலைமைகளிலும் சுகாதார தொழிலாளர்களுக்கு நெருக்குவாரம் கொடுத்து வந்துள்ளன. 1990 ம் ஆண்டு ஐ.தே.க. அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட "சுய விருப்பு ஓய்வு" திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கானோர் சேவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இதன் கீழ் விலகாது சேவையில் தொடர்ந்து இருப்போர் சம்பள அதிகரிப்பின்றி மேலதிக வேலைப்பளுவையும் சுமக்க வேண்டியுள்ளது. முக்கியமாக உதவியாளர்களும், ஒப்பந்த தொழிலாளர்களும், கீழ்மட்ட தொழிலாளர்களும், காவலாளிகளும் ரூபா. 5000 க்கும் குறைவான மாதச் சம்பளத்தையே பெறுகின்றனர். 1999ம் ஆண்டு மார்ச் மாதம் இத்தொழிலாளர்கள் தமது வேலை நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளதை எதிர்த்துப் பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இலவச சுகாதார சேவை மீதான அரசின் தாக்குதல்களுக்கு ஆதரவளிப்பதில் சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கங்களும் பங்கு வகிக்கின்றன. அவர்கள் இந்தப் போராட்டங்களை தனிமைபடுத்தவும், தொழிலாளர்களை பிளவுபடுத்தவும் தொழிட்பட்டார்கள். தற்போது பெரும்பான்மையான சுகாதார தொழிற்சங்கங்கள் அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் தலைமையின் கீழ் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளன. இவர்கள் அரசாங்கத்தின் தனியார்மயத் திட்டத்திற்கு எதிராக போராடுவதாக கூறிக் கொள்கின்றன.

எனினும் இக்கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதி நிறைவேற்றுக் குழுவில் இணைந்து கொள்ளாவிட்டாலும் இலவச சுகாதார சேவையை சீர்திருத்தும் திட்டங்களுக்கு தமது சொந்த திட்டங்களை முன்வைத்து ஒத்துழைக்க சம்மதித்துள்ளனர். போதியளவு வைத்தியர்களும் வைத்திய நிபுணர்களும் இல்லை என்பது மட்டுமே ஜனாதிபதி நிறைவேற்றுக் குழு மீதான இவர்களின் ஒரேயொரு விமர்சனமாக உள்ளது.

தங்களது கோப்பரேட்வாத நிலைப்பாட்டை எதிர்ப்பவர்களையும் மோசமாக ஒடுக்குவதற்கு இக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சியினதும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகத்தினதும் அங்கத்தவர்கள் இலவச சுகாதார சேவைய்யை பாதுகாப்பதற்காக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடி வந்த சந்தர்ப்பங்களில் தொழிற்சங்க தலைவர்களரல் தாக்கப்பட்டனர். இதன்மூலம் தனது நிலைப்பாட்டை இத் தொழிற்சங்கங்கள் வெளிக்காட்டிக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களுக்கு எதிரான தாக்குதல்: பொது மக்களுக்கு ஒரு எச்சரிக்கை

வருண அழககோன்

இலங்கையின் பிரபல சிங்களப் பாடகரும் அவரின் மனைவியும் சமீபத்தில் படு மோசமான குண்டர் தாக்குதலுக்கு இலக்காகினர். இந்த இசைக் கலைஞர்கள் ரூகாந்த குணதிலகவும், சந்திரலேகா பெரேராவும் ஆவர். இவர்கள் மட்டுமன்றி இன்னும் பல சிங்கள கலைஞர்களும், இரசிகர்களும் இத்தாக்குதலால் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இத்தாக்குதல் தொடர்பான இவர்களின் எதிர்ப்பும் குற்றச்சாட்டும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகவே தொடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிர்ச்சியினதும் ஆத்திரத்தினதும் பெறுபேறாக 1999ல் மட்டுமன்றி 1994 லும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய பல கலைஞர்களைக் கொண்ட "தொல்லைகளுக்கு எதிரான கலைஞர்கள்" என்ற பேரில் ஒரு அமைப்பும் தலைநீட்டியுள்ளது.

1999 டிசம்பர் 21ம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னரே அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு எதிரான இந்தப் பழிவாங்கல்களும் குண்டர் தாக்குதல்களும் உக்கிரம் கண்டுள்ளன. கடந்த ஜனாதிபதி தேர்தலில் "தேசிய கலைஞர் அவையில்" சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக செயற்பட்டமையே இத்தாக்குதலுக்கு காரணமாகும்.

ஜனவரி 26ம் திகதி இரவு 8.30 மணிக்கு ரூகாந்த குணதிலகவும், சந்திரலேகா பெரேராவும் வசித்துவந்த மத்தேகொட வீடமைப்பு திட்டத்துக்கு மூன்று வாகனங்களில் சென்ற சுமார் 22 குண்டர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதம் தாங்கிய கும்பல் இந்த இசைக் கலைஞர் தம்பதிகளுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டதோடு அவர்களின் தலை மயிர்களையும் வெட்டி வீசியது. அத்தோடு அவர்களை பெற்றோல், டீசலால் குளிப்பாட்டி கொலை செய்யும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. ரூகாந்தவின் முகத்துக்கும், தலைக்கும் கைத் துப்பாக்கியை நீட்டிய குண்டர்கள் அவர்கள் யூ.என்.பி. பிரச்சாரக் கூட்டத்தில் பாடியது பற்றியும், "அமெரிக்காவில் இருந்து கொணர்ந்த ஆயுதங்கள்" பற்றியும் விசாரித்தனர். தாம் அப்பாவி கலைஞர்களே தவிர ஆயுதங்களை கொண்டவர்கள் அல்ல என ரூகாந்த தெரிவித்துள்ளார். இக்கலைத் தம்பதியர்களின் குழந்தைகளுக்கு எதிரில் அடாவடித்தனங்களில் ஈடுபட்ட இந்தக் குண்டர்கள், அவர்களின் தங்க நகைகளையும் வாகனத்தையும் கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் வாகனம் உதிரிப்பாகங்கள். களட்டப்பட்ட நிலையில் கொழும்பு நகரில் கைவிடப்பட்டுக் கிடந்தது.



பெப்பிரவரி 1ம் திகதி ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு வருகைதந்திருந்த ரூகாந்த குணதிலகவும் சந்திரலேகா பெரேராவும்

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் முதல் தாக்குதல் அனோஜா வீரசிங்கவுக்கு எதிராக டிசம்பர் 20ம் திகதி இடம் பெற்றது. கொழும்பில் இருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ள மொனராகலையில் உள்ள அனோஜாவின் இல்லம் குண்டு வீச்சுக்கும் துப்பாக்கி வேட்டுக்கும் இலக்காகியது. இதைத் தொடர்ந்து அனோஜா வீரசிங்க வெளிநாடு சென்றார். ஜனவரி 2ம் திகதி மீண்டும் அந்த வீட்டில் பாய்ந்து விழுந்த குண்டர்கள் அதை அடியோடு தீக்கிரையாக்கினர். அத்தோடு அனோஜாவின் கலைத்துறை வாழ்க்கையின் நினைவுக் குறிப்புகளும் நாசமாக்கப்பட்டது. இந்த குண்டர் தாக்குதல்களில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மாவட்ட தலைவர்கள் ஈடுபட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குண்டர் தாக்குதல்களின் மற்றொரு அம்சம், பிரபல நாடக, சினிமா, இயக்குனர் தர்மசிரி பண்டாரநாயக்காவுக்கு எதிரான அச்சுறுத்தலாகும். இவர் மிகவும் பிரபல்யமான "தவள பீஷணய" "ஏகாதிபதி" நாடகங்களின் இயக்குனர். இவரால் சமீபத்தில் நெறிப்படுத்தப்பட்ட கிரேக்க நாடக ஆசிரியர் யூரிபிட்சினின் "ட்ரோஜன் பெண்கள்" என்ற உலகப் பிரசித்தி பெற்ற நாடகத்தின் பேரில் இது இடம் பெற்றுள்ளது. இதில் அனோஜா வீரசிங்க பிரதான பாத்திரம் வகித்தவர். இதன் இசை அமைப்பாளராக ரூகாந்த குணதிலக்க விளங்கினார். தர்மசிரி பண்டாரநாயக்க ஐ.தே.க. வுக்கு ஆதரவு வழங்கிய கலைஞர் அல்ல. 1994ல் பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்கிய பண்டாரநாயக்க 1999 தேர்தலில் எவருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாக தெரிவித்தார். 1994ல் பொதுஜன முன்னணிக்கு ஆதரவளித்ததற்குக் காரணம் யுத்தத்துக்கு முடிவு கட்டவாகும். ஆனால் அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொணர்வதற்கு பதிலாக அதை மேலும் உக்கிரமாக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். அவரின் தயாரிப்பான ட்ரோஜன் பெண்கள் (ட்ரோஜன் காந்தாவோ) என்ற நாடகத்தை நிறுத்தும்படி அவருக்கு பலதடவை கொலை பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன. பெப்பிரவரி 6ம்,7ம் திகதிகளில் இடம்பெற இருந்த அதன் காட்சிகளை நிறுத்தும்படி கோரி பல்வேறு வகையிலான இடையூறுகளும் இளைக்கப்பட்டன.

இந்த நிலைமை தொடர்பாக "தொல்லைகளுக்கு எதிரான கலைஞர்கள்" ஜனவரி 31ம் திகதி வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது: "இதற்கு மேலதிகமாக இன்னும் பல கலைஞர்கள் தமக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல்களை அம்பலப்படுத்தாமல் மௌனம் சாதிக்க வேண்டிய நிலைமைக்குள்ளும் தள்ளப்பட்டனர். இச்சம்பவங்கள் கொள்ளை, தனிப்பட்ட தகராறுகள் அல்ல என நாம் பெரிதும் நம்புகின்றோம். ரிச்சேட் த சொய்சா கொலை செய்யப்பட்டதன் பின்னர் அவரின் தாயாருக்கு கிடைத்த அச்சுறுத்தல் கடிதம் "சுவர்க்க அரசில் இருந்து" கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. இப்போது தர்மசிறி பண்டாரநாயக்கவுக்கு கிடைத்த மிரட்டல் கடிதமும் "சுவர்க்க அரசிலிருந்து" வந்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. யூ.என்.பி. ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கமாக இருந்த கொலைகாரப் புள்ளிகள் தற்சமயம் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு நெருக்கமாக உள்ளமை அவர்களின் திட்டங்களின் ஒருமைப்பாட்டின் மூலம் தெளிவாகியுள்ளது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் காட்டிக் கொள்ளும் மௌனம் இந்த காடைத்தனங்களுக்கும் அதற்கும் இடையேயான நெருக்கமான உறவை எடுத்துக்காட்டுகிறது. 'இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை இடம் பெற்று வருகின்றது' என்பதைத் தவிர குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க பொதுஜன முன்னணி அரசாங்கமோ அல்லது பொலிசாரோ எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தோடு இவற்றை யூ.என்.பி. சதிகளாக சித்தரிக்கும் முயற்சியில் தகவல் துறை அமைச்சர் மங்கள சமரவீர ஈடுபட்டுள்ளார். அவரின் அறிக்கை கூறுவதாவது: "ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நடிகை அனோஜா வீரசிங்கவின் வீட்டின் மீதான தாக்குதலை (பொதுஜன) முன்னணியின் மீது திணிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால் அனோஜா வீரசிங்கவின் வீட்டின் மீதான தாக்குதல் தனிப்பட்ட காரணங்களின் பேரில் இடம் பெற்றதாக இப்போது தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த விதத்தில் பார்க்கும் போது ரூகாந்த குணதிலக, சந்திரலேகா பெரேரா முதலிய கலைஞர்கள் மீதான தாக்குதலும் இந்தச் சதிகார வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும் எனச் சந்தேகிக்க இடமுண்டு. இல்லாது போனால் அவை ஏதேனும் ஒரு தனிப்பட்ட காரணத்தின் பேரில் இடம் பெற்று இருக்கவேண்டும். கலை உலகில் இருந்து கொண்டுள்ள பல்வேறு குத்து வெட்டுக்களைப் பற்றி சிந்திக்கும் போது அத்தகைய நிலைமை உருவாகுவதற்கான வாய்ப்பை தவிர்க்க முடியாது."

இவற்றை யூ.என்.பி. சதியாகக் காட்ட முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் டிசம்பர் 16ம் திகதி வியாங்கொடையில் இடம் பெற்ற குண்டர் தாக்குதலில் பொதுஜன முன்னணியின் மாகாண சபை எம்.பி.யும் ஜனாதிபதிக்கு நெருக்கமானவருமான வசந்த அளகியவண்ண வெளிவெளியாக ஈடுபட்டு இருந்துள்ளார்.

கடந்த பெப்பிரவரி 1ம் திகதி இத்தாக்குதல்களுக்கு எதிராக 'தொல்லைகளுக்கு எதிரான கலைஞர்கள்' நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பிரபல சிங்கள கலைஞர்களான தர்மசிரி பண்டாரநாயக்க, டபிள்யூ.ஜயசிரி, வசந்த ஒபேசேகர, ரவீந்திர ரன்தெனிய, குணதாச கப்புகே, ரூகாந்த குணதிலக, சந்திரலேகா பெரேரா, ரோஹண வீரசிங்க முதலியோர் கலந்து கொண்டனர்.

## 600 இராணுவத்தினர் சீதுவ நகரத்தில் பயங்கரவாதத் தாக்குதல்

ஜனவரி 20ம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைலுக்கு அப்பால் அமைந்திருக்கும் சீதுவ நகருக்குள் பாய்ந்து விழுந்த இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்த 600 இராணுவத்தினர், அங்கு கடைகள், ஹோட்டல்கள், குடியிருப்புகள் மீது தாக்குதல் நடாத்தி சேதத்தை ஏற்படுத்தியதுடன் அங்குள்ள மக்களுக்கும் மிலேச்சத் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சீதுவ கெமுனு ஹோட்டலின் ஊழியர்களான பிரசாத்குமார, திலக், ரஞ்சித், பேபி ஆகியோர் ராகமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். காயமடைந்த ஏனைய 25 பேர் வைத்தியசாலையின் மருந்துசாலையில் சிகிச்சை பெற்றனர். வீதிகளில் நடமாட்டம் குறைந்த வேளையில் வீதியில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களையும, சில வாகனங்களையும் கூட இந்த இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

அருகில் இருந்த மரக்காலையில் சில தடிகளை பிடுங்கிக் கொண்ட இராணுவத்தினர் கெமுனு ஹோட்டலின் கண்ணாடி பெட்டிகளையும், யன்னல்களையும் தூளாக்கி அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கிய பின் மேலும் இரண்டு ஹோட்டல்களையும், ஸ்டூடியோ, வங்கி, எண்ணெய் ஆலை, மற்றும் வீடுகளையும் தாக்கினர். ஏனைய கடைகள் மூடப்பட்டிருந்ததால் சேதங்கள் குறைவான போதும் அந்தக் கடைகளின் பலகைகளையும் போட்களையும் உடைத்துள்ளனர். ஒரு மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் சீதுவ நகர சந்தியில் இடம்பெற்ற தாக்குதலில் சேதமடைந்த சொத்துக்களின் பெறுமதி 10 லட்சத்துக்கும் அதிகம் என கடை சொந்தக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சீதுவ நகரில் உள்ள கெமுனு ஹோட்டலுக்குச் செந்தமான மதுபானக் கடையில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த இரு இராணுவத்தினருக்கும் ஏனைய் இரண்டு இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையின் பின்னர், இராணுவத்தினருக்கு எதிரான முறைப்பாட்டைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டதே இத்தாக்குதலுக்கான காரணமாகும். தாக்குதல் இடம் பெற்ற அன்று சீதுவ பொலிஸ் நிலையத்துக்கு சென்ற இராணுவக் கும்பல் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரை விடுதலை செய்யக் கோரி நெருக்கியுள்ளனர்.



கெமுனு ஹோட்டலில் உடமைகளை சேதப்படுத்தியிருக்கும் விதம்

வடக்கு – கிழக்கு இராணுவ நடவடிக்கைக்காக சென்றுகாண்டிருக்கையில் கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு தெற்கில் அமைந்துள்ள இடைக்கால முகாமில் தங்கியிருந்த இராணுவத்தினரே இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். தாக்குதலை நடாத்திய கும்பல் அன்று அதிகாலையிலேயே விமானம் மூலம் வட –கிழக்குக்கு கொண்டு செல்லப்பட்டதோடு, கைது செய்யப்பட்டிருந்த 5 இராணுவத்தினரும் ஜனவரி 21ம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தைப் பற்றி விசாரணைகள் ஏதும் நடத்தப்படவில்லை என குறிப்பிட்ட கடை சொந்தக்காரர்கள் இராணுவத்தினர் மீதான தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

கலகக்கார இராணுவத்தினர் மூலம் தமது வீட்டின் கேட் களற்றி எறியப்பட்டதாக குறிப்பிட்ட ஒரு வீட்டுச் சொந்தக்காரர் 'தொழிலாளர் பாதைக்கு' குறிப்பிடுகையில்: "சத்தம் கேட்டு நான் வெளியில் வந்தேன், தடிகள் சகிதம் இருந்த பல இராணுவத்தினர் இங்கு பேயாட்டம் ஆடினர். அடிக்கக் கூடிய உடைக்கக் கூடிய அனைத்தையும் நொருக்கினர்."

"இவர்கள் வடக்கில் கடமைக்காக செல்பவர்கள். சமாதானத்தைப் பாதுகாப்பதாகக் கூறும் இவர்கள் சிங்களவர்களாகிய எங்களையே இவ்வாறு கணிப்பார்களானால், அங்கிருக்கும் தமிழ் மக்களுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்?" என்பதை நான் சிந்தித்தேன்.

"இங்கு ஹோட்டலில் இடம் பெற்ற வாக்குவாதத்திற்கே இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்யும் போது, அந்தப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் குண்டொன்று இருந்தால் சும்மாயிருக்கும் மக்களையும் அடித்து கொன்று விடுவார்கள்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன முன்னணி அரசாங்கமும் தமிழர் எதிர்ப்பு இனவாத அரச வேட்டையும்

**விஜித சில்வா**

ஜனவரி 5ம் திகதி பிரதமர் அலுவலகத்தின் அருகில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையாளி ஒருவர் நடாத்திய குண்டுத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கையின் தென்பகுதியில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் பூராவும் தமிழ் மக்களுக்கு எதிராக கொடிய இராணுவ தேடுதல் நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. "எல்.டி.டி.ஈ. சந்தேக நபர்களை" கைது செய்வதாக கூறி தமிழர்கள் வாழும் நகரங்கள் கிராமங்களை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டு வரும் இந்த தேடுதல் வேட்டையில் ஆயிரக் கணக்கான படையாட்களும் பொலிசாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இந்த தேடுதல் வேட்டையில் தமிழ் தோட்டத் தொழிலாளர்களும் முக்கிய இலக்காகியுள்ளனர்.

பிரதமர் அலுவலக முன்றலில் நடந்த குண்டுத் தாக்குதலின் பின்னர் கொழும்பிலும் அதை அண்டிய பகுதிகளிலும் 14 மணிநேர ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்து நடாத்தப்பட்ட இந்த தேடுதல் வேட்டையில் 5000 த்திற்கு மேற்பட்ட படையாட்களும் பொலிசாரும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட அதே வேளை ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த தேடுதல் வேட்டையானது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தமிழர் எதிர்ப்பு இனவாத இயக்கத்தின் உச்சக் கட்டமாகும். கொழும்பிலும் அதை அண்டிய பகுதிகளிலும் எல்.டி.டி.ஈ. யினரின் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு சார்பான தனியார் மற்றும் அரச தொடர்பு சாதனங்களின் பிரச்சாரங்களுக்கு மத்தியில் இது மேலும் உக்கிரமாக்கப்பட்டுள்ளது.

**'பாஸ்' முறை**

இலங்கை 'தேசிய பாதுகாப்பு சபையின்' தீர்மானத்தின்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் நிரந்தர வதிவாளர்கள் ஒவ்வொருவருக்கும் விசேட பாதுகாப்பு அடையாள அட்டை வழங்குவது இதன் புதிய அம்சமாக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் யுத்த நடவடிக்கை உட்பட்ட நாட்டின் சகல பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகளையும் இலங்கை தேசிய பாதுகாப்பு சபையே தீர்மானிக்கின்றது. இராணுவத்தையும் பொலிசையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் நாட்டின் ஜனாதிபதியே இந்த தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவராவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஊடாக கொழும்புக்கும் ஏனைய பாகங்களுக்கும் விடுதலைப் புலிகள் ஊடுருவிக் கொண்டுள்ளதாக கூறி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம், 6 லட்சம் மக்களை மரணப்பொறிக்குள் தள்ளவுள்ளது.

ஜனவரி 28ம் திகதி ஆயிரக்கணக்கான மட்டக்களப்பு வாசிகள் கடைகளை மூடியும் பஸ் சேவைகளை நிறுத்தியும் ஹர்த்தால் நடாத்தி, தேசியப் பாதுகாப்புச் சபையின் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பைக் காட்டினர். மக்கள் இராணுவத்தினதும், பொலிசினதும் பயமுறுத்தல்களுக்கும் அஞ்சாமல் இந்த ஹர்த்தாலை நடாத்தினர். தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தே.பா.ச. வின் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தன.

விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டால் மட்டக்களப்பு மக்கள் தேசிய அடையாள அட்டை உட்பட இரண்டு அடையாள அட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டும்.

எவ்வாறானாலும் விசேட அடையாள அட்டையின்றி அந்த மக்களால் தங்கள் மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு – முக்கியமாக கொழும்பு – செல்லமுடியாது.

**தோட்டப்புற தமிழ் மக்கள் இலக்கு**

தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் கண்டி, அட்டன், மஸ்கெலியா, நுவரெலியா, பதுளை, பண்டாரவளை, பசறை, மத்துகம போன்ற பிரதேசங்களும் இராணுவச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. உலக சோசலிச வெப் தளத்தின் நிருபர்கள் மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள சில தோட்டங்களுக்கு விஜயம் செய்தனர். ஜனவரி 6,7,8ம் திகதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் மஸ்கெலியாவில் 14 தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர். இவர்களில் முஸ்லிம் இளைஞர்களும் அடங்குவர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிசாரால் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். கைதுகளின் பின்னர், இவர்கள் பயணிகள் பஸ்களிலும், எண்ணைத் தாங்கிகளிலும், தொலைபேசி கோபுரங்களிலும், மின்மாற்றிகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த குண்டுத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டதாக பொலிசாரின் அறிக்கைகளை சுட்டிக்காட்டிய தொடர்பு சாதனங்கள், இந்த இளைஞர்கள் இவ்வாறான குண்டுத் தாக்குதல்களை நடாத்துவதற்கு புலிகளின் முகாம்களில் விசேட பயிற்சி பெற்றுள்ளதாகவும் பிரச்சாரம் செய்தன.

சம்சன், பிரதீபன், ஜெயந்தியன், ராஜகுமாரன், சுரேஷ், பிரசாத்ரோய், இராஜேந்திரன், தியாகராஜா, ஜபார், பிரபாகரன், கருணாநாதன், சந்திரதாஸ், சுகந்தன், புஷ்பகுமார் ஆகிய 14 பேரின் பெயர்கள் உலக சோசலிச வெப் தளத்திற்கு கிடைத்துள்ளது. பொலிசாரின் இந்த நடவடிக்கையால் இந்த இளைஞர்களின் பெற்றோர்கள் வெறுப்படைந்துள்ளனர். உண்மையில் ராஜகுமாரன், பிரசாத்ரோய், பிரபாகரன், மொகமட் ஜபார் மற்றும் மேலும் ஒரு இளைஞரையும் பொலிசார் விடுதலை செய்யத் தள்ளப்பட்டது பொலிசாரின் மோசடியை எடுத்துக் காட்டுகின்றது. ஏனையோர் பிரதேசத்தின் பல பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனவரி 6ம் திகதி இரவு 9.30 மணிக்கு சாமிமலை கிளனுாஜ் தோட்டத்திற்குள் பாய்ந்து விழுந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரோடு (CID) வந்த பொலிஸ் குழுவினர் 19 வயதுடைய சிவப்பிரகாசம் ஜெயந்தியன் எனும் இளைஞனை அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர். அவர் தனது தேசிய அடையாள அட்டையைக் காட்டிய போதும் அவர்கள் அதைக் கணக்கில் எடுக்கவில்லை என பெற்றோர்கள் தெரிவித்தனர்.

அடுத்த நாள் விடுதலை செய்வதாகக் கூறி மகனை கைது செய்துள்ளனர். ஆனால் தற்போது அவரை கினிகத்தேன பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். அவரை பார்ப்பதற்கு பெற்றோருக்கு ஒருமுறை அனுமதியளிக்கப்பட்டது. மறுநாள் அவரின் வீட்டை சீ.ஐ.டி.யினர் கடுமையாகச் சோதனையிட்டனர். இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு அறிவித்தபோதும் இதுவரை நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டதாக தகவல்கள் கிடைக்கவில்லை.

அதே தினம் சாமிமலை டீசைட் தோட்டத்தில் 24 வயதுடைய வேலையற்ற இளைஞரான தங்கவேல் இராஜகுமாரன் சிவில் உடையில் வந்த பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவர் பற்றிய விபரங்களை அறிய மஸ்கெலியா பொலிசுக்கு செல்லுமாறு பொலிசார் பெற்றோரிடம் கூறியுள்ளனர். அடுத்தநாள் மஸ்கெலியா பொலிஸ் நிலையம் சென்ற ராஜகுமாரனின் பெற்றோர்களுக்கு அது பற்றி 'எங்களுக்கு எதுவும் தெரியாது' எனும் பதிலே அவர்களிடமிருந்து கிடைத்தது.

அதன் பின்னர் மீண்டும் மோப்ப நாய்களுடன் வந்த பொலிசார் இராஜகுமாரின் வீட்டை சோதனையிட்டு அவரின் தினக் குறிப்பையும் பழைய செலூலர் போன் ஒன்றையும் கைப்பற்றினர். அவரைப் பார்ப்பதற்காக தகப்பனார் சென்றபோது கதைப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை.

அதே தினம் இரவு 10.45 மணியளவில் மஸ்கெலியா பிரன்விக் தோட்டத்தில் 19 வயது இளைஞனான பெனடிக் பிரசாத் ரோய் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, நோட்டன் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டார். பிரசாத் ரோயின் தந்தை குமாஸ்தாவாக தொழில் புரிவதோடு தாய் பாடசாலை ஆசிரியராவார்.

**மோப்ப நாய்கள்**

19 வயது இளைஞரான இராஜரட்னம் சம்சனின் வீட்டிற்குள் மோப்ப நாய்களுடன் நுளைந்த பொலிஸ் கோஷ்டி, மகன் சம்சன் கல்முனையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் தாயிடம் கூறியதோடு பிரவுன்லோ தோட்டத்தில் உள்ள அவரின் வீட்டை சோதனையிட்டுள்ளனர். ஆனால் சம்சன் கொழும்புக்கு வேலை தேடி சென்றதாக அவரின் தாயார் குறிப்பிட்டார்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த பிரதீபன் கொழும்பில் இருக்கும் போது கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சிறு வியாபாரியான 26 வயது இராமையா சுரேஷ், ஒரு குழந்தைக்கு தந்தையாவார், கைதுசெய்யப்பட்டபோது விசாரணையின் பின் விடுதலை செய்வதாக பொலிசார் குறிப்பிட்டனர். வீட்டை சோதனையிட்ட போது வீட்டுத் தோட்டத்திற்கு பயன்படுத்துவதற்காக விலை கொடுத்து வாங்கி வைத்திருந்த நீர் சுண்ணாம்பு பக்கட்டையும் கால்நடைகளுக்கு வழங்கும் விட்டமின் தூளையும் தடயப் பொருட்களாக கைப்பற்றியுள்ளனர். அதை எதிர்த்த போது "இவற்றில் குண்டு உற்பத்தி செய்யமுடியுமா, முடியாதா என்பது பற்றி உமக்கு எப்படித் தெரியும்?" என சீறியதாக சுரேசின் தாயார் குறிப்பிட்டார். இதை அரச வானொலி சேவைகளும், தனியார் வானொலி சேவைகளும் வெடி மருந்துகளுடன் விடுதலைப் புலி சந்தேக நபர்கள் கைது! என பிரச்சாரம் செய்தன.

ஒரு தாய் தனது மகன் இராஜதுரை பிரபாகரன் கைது செய்யப்பட்டதை உலக சோசலிச வெப் தளத்துக்கு கவலையுடன் தெரிவித்தார்: "மகனை மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் ஆஜராகும்படி கூறினர். பொலிஸ் நிலையம் சென்றபோது அவரை கைது செய்தனர். அவருக்கு இப்போது 20 வயது, எனது இன்னொரு மகனும் கொழும்புக்கு வேலை தேடிச் சென்றபோது கைது செய்யபட்டுள்ளார்".

வேலை தேடி கொழும்புக்கு வரும் பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் இடைவிடாது கைதுசெய்யப்படுவதோடு, விசேடமாக ஹோட்டல்களிலும், தனியார் வேலைத் தலங்களிலும், சேவை நிரந்தரமின்றி உழைக்கும் ஏழை இளைஞர்கள் மிகவும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டுள்ள 45 வயதான செல்லையா இராஜேந்திரனுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இது தொடர்பாக இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கமான செங்கொடிச் சங்க பிரதிநிதிகளுக்கு அறிவித்த போதும் ஒன்றும் நடைபெறவில்லை.

தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பிரதேசங்களான மாத்தளை, கண்டி, பதுளை ஆகிய பிரதேசங்களிலும் தேடுதல் வேட்டைகள் தொடர்வதாக தகவல்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. கொழும்பிலிருந்து 230 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பண்டாரவளை, தியத்தலாவ ஆகிய பிரதேசங்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து நடாத்திய தேடுதல் வேட்டையின் போது 150க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து 60 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மத்துகம, அம்பத்தன்னை தோட்டங்களும் கடந்த பொங்கல் தினத்தன்று சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டதோடு தைப் பொங்கல் கொண்டாட்டங்களும் சோகத்தில் ஆழ்ந்தது.

**நாடுதளுவிய சோதனை நடவடிக்கைகள்**

கிழக்கு மாகாணப் பிரதேசங்களும் தற்போது சோதனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன. மூதூர் கிராமங்களான– பச்சநூர், பெரியவள்ளி, மல்லிகைத்தீவு, பட்டித் திடல், பாரதபுரம், மன்னச்சேனை, மண்காமம், மண்ணம்பொடி வெட்டி போன்ற ஐந்து குடியேற்றங்கள் சுற்றி வளைக்கப்பட்டு கிராமத்தவர்கள் மல்லிகைத் தீவிற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். ஜனவரி 31ம் திகதி சுற்றி வளைக்கப்பட்ட கல்முனைப் பிரதேசமும் கிழக்கு மாகாணத்திலேயே உள்ளது.

வட மத்திய மாகாணம் – யுத்தப் பிரதேசத்தின் எல்லைப் கிராமங்களும் தமிழ் மக்களுக்கு எதிரான வேட்டைக்கு உட்பட்டு வருகிறது. இப்பிரதேச அரிசி ஆலைகளிலும், தேனீர் கடைகளிலும் தொழில் புரிந்து வந்த இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. இந்த இளைஞர்கள் அருகில் உள்ள மாகாணங்களுக்கு செல்வது யுத்தத்துக்கு மத்தியில் தங்கள் ஜீவியத்தை நடாத்துவதற்காகும்.

கொழும்பில் தமிழ் மக்கள் வாழும் வெள்ளவத்தை' முழுவதிலும் இடம் பெற்ற இரண்டாவது தேடுதல் வேட்டையின் (ஜனவரி 22) போது, வயது பேதமின்றி ஆண், பெண் இருபாலாருமாக 300 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை வீடியோ படம் பிடித்தல், கைரேகை பதிவு செய்தல் போன்றவைகளும் இடம் பெற்றன. இராணுவத்தினர் சந்தேக நபர்களை



*3000க்கும் அதிகமான தமிழ் மக்களை கைதுசெய்த ஜனவரி 22ம் திகதிய ஊரடங்குச் சட்ட சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலைக்காக காத்திருக்கும் இளம் தாய்மார்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு, தெகிவளை – கல்கிசை மாநகர சபை பகுதிகளில்

# இராணுவ சுற்றிவளைப்பு தேடுதலின் போது ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கைது

**நந்த விக்கிரமசிங்க**

கடந்த ஜனவரி 5ம் திகதி பிரதமர் அலுவலகத்தின் அருகில் குண்டு வெடித்த சம்பவமும், தமிழ் அரசியல் தலைவர் குமார் பொன்னம்பலம் படுகொலையும் இடம் பெற்ற மறுநாள், வெள்ளிக்கிழமை மேற் கொள்ளப்பட்ட திடீர் பாதுகாப்பு சுற்றிவளைப்பின் மூலம் இராணுவமும், பொலிசும் ஆயிரக் கணக்கான தமிழ் மக்களை கைது செய்தனர்.

இராணுவம், கடற் படை, விமானப் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கை ஆரம்பித்த போதே 'அவசர அறிவிப்பின்' மூலம் கொழும்பு, தெகிவளை – கல்கிசை மாநகர சபை பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இரவு 11.55 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் அரை மணித்தியாலத்திற்கு முன்னரே அறிவிக்கப்பட்டது. மக்கள் வீதிகளில் இருந்து விலகிச் செல்வதற்குக் கூட காலம் போதவில்லை. கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தென்பகுதியில் அமைந்துள்ள தமிழர் வதிவிடங்களே முதலாவது இலக்காகின.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 1200–3000 வரை என அறிக்கைகள் குறிப்பிட்டன. 'சன்டே டைம்ஸ்' பத்திரிகையின்படி விசாரிப்பதற்காக இழுத்துச் செல்லப்பட்டவர்களின் தொகை 1563 ஆகவுள்ளதோடு ஒவ்வொருவரும் கடும் விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர். தலையாட்டிகளை பயன்படுத்தி நடாத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு, வீடியோ படப்பிடிப்பு, நிழற்படம் எடுத்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

விசாரணைகள் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் பலவற்றிலும் நடாத்தப்பட்டன. குற்றப் புலனாய்வு திணைக்களம் (CID), அரச விரோத வன்முறைத் தவிர்ப்பு பிரிவு(CSU), (CDO) இரகசிய புலனாய்வு பிரிவு (DII) மற்றும் யுத்தத் தகவல் பிரிவு(DMI) ஆகியவை இதில் அடங்கும். மேலதிக விசாரணைக்காக 87 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாபெரும் பாதுகாப்பு நடவடிக்கையானது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையின் கீழ் இராணுவம், பொலிஸ் மற்றும் இரகசிய புலனாய்வு துறைகளின் தலைவர்களும் கலந்து கொண்ட பாதுகாப்பு கலந்துரையாடலின் பின்பே மேற்கொள்ளப்பட்டது. இதிலிருந்து 48 மணித்தியாலங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டின் வடக்கு– கிழக்கு மாகாணங்களில் தமிழ் சிறுபான்மையினருக்கென தனியான அரசு ஒன்றைக் கோரி யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படையாளிகள் நகருக்குள் புகுந்து ஒழிந்து கொண்டிருப்பதாகவும், அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களையும் ஏனைய முக்கிய உறுப்பினர்களையும் கொன்று தள்ளுவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அரசாங்கம் கூறிக்கொண்டது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பகுதிகளுக்குள் மக்கள் நுளைவதோ, வெளியேறுவதோ, தடுக்கப்பட்டது. வெளி இடங்களில் இருந்து வந்த ரயில்கள் மற்றும் வாகனங்கள் துணை நகரங்களில் நிறுத்தப்பட்டதோடு அவற்றில் இருந்த சந்தேகத்திற்கு இடமானவர்களும் விசாரணையின் பின் கைது செய்யப்பட்டனர். சகல அரச அலுவலகங்களும், தனியார் வியாபார நிலையங்கள், பாடசாலை, வங்கி ஆகியவைகளும் ஊரடங்குச் சட்டத்தின் போது மூடப்பட்டிருந்தன.

பிரதேசவாரியாகப் பிரித்து நடாத்தப்பட்ட இந்த தேடுதலின் போது தேவையான அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கையில் உள்ள சட்டத்தின்படி 18 வயதுக்கு மேட்பட்டவர்கள் அனைவரும் அரசாங்கத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையை வைத்திருத்தல் வேண்டும். சிவில் யுத்தத்திற்கு உட்பட்ட பிரதேசங்களிள் உள்ளவர்கள் இதற்கு மேலதிகமாக இராணுவ அடையாள அட்டைகளையும் அத்தாட்சிப் பத்திரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். இந்த பாதுகாப்பு சுற்றிவளைப்பின் போது இவ்வாறான பாதுகாப்பு அத்தாட்சி பத்திரங்களை வைத்திருந்தவர்களின் அனுமதிகள் தூக்கி வீசப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் ஒன்றில் பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள் அல்லது குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு நடந்து செல்லத் தள்ளப்பட்டார்கள். இவர்களில் அரச ஊழியர்கள், மாணவர்கள் உட்பட வயோதிபர்களும் அடங்குவர். இவர்களில் 200 பேர் இளம் வயதினர். கைது செய்யப்பட்டவர்கள் மருதானை, பம்பலப்பிட்டி, கல்கிசை, கொட்டாஞ்சேனை மோரட்டுவை போன்ற 5 பொலிஸ் நிலையங்களுக்கும் இழுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் ஆயிரம் பேர் கொழும்பு மத்திய பிரதேசத்தையும் நகரின் தென் பிரதேசத்தில் 450 பேரும், கொழும்பு வடக்கில் 150 பேரும் அடங்குவர்.

பல பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களை பார்வையிடச் சென்ற பெற்றோர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. பெரும்பாலானவர்கள் காத்திருந்து இறுதிவரை கைது செய்யப்பட்ட தமது உறவினர்களின் தகவல்களை அறிய முடியாமல் தவித்துக்



*ஜனவரி 6ம் திகதி வெள்ளவத்தையில் வேட்டையில் ஈடுபட்ட பொலிசார் தமிழ் இளைஞர்களை விசாரணை செய்கின்றனர்*

கொண்டிருந்தனர். தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு மறுநாள் நண்பகல் வரை உணவு கிடைக்கவில்லை.

87 பேர் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மூன்று நாட்களுக்கு பின்னரே அறிவிக்கப்பட்டது. இவர்களை விசாரிப்பதற்காக விசேட இரகசிய புலனாய்வு குழுவொன்று பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் சன்டே டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டதாவது 5000 வீரர்கள் ஈடுபடுத்தப்பட்ட இந்த தேடுதலின் போது, ஆயுதங்களோ, வெடி மருந்துகளோ, அல்லது உபகரணங்களையோ கண்டு பிடிக்க முடியாமல் போனது.

பின்னர் கொட்டாஞ்சேனையில் பாய்ந்து விழுந்த படையினர் தற்கொலைப் படையாளியொருவரின் மேலாடை ஒன்றினை கண்டுபிடித்ததாக குறிப்பிடப்பட்டது.

கொழும்பு நகரை சுற்றிவளைத்து மேற் கொள்ளப்படும் இந்த நடவடிக்கை குமாரதுங்க அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் வேட்டையின் ஒரு பாகமாகும். நுகேகொட மீரிகானை பிரதேசத்தில் 47 பேரும், கண்டிப் பகுதியில் 60 பேரும், மஸ்கெலியாவில் 14 பேரும் கடந்த மாத ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"சுற்றிவளைத்து தேடி கைதுசெய்யும் இந்நடவடிக்கையானது பாதுகாப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துவதற்கான ஏற்பாட்டின் மிக உயர்ந்த கட்டத்தை எடுத்துக் காட்டுகிறது" என பொலிஸ் உயர் அதிகாரியொருவர் 'சன்டே லீடர்' பத்திரிகைக்கு கூறியிருந்தார். இவ்வாறான முன்னறிவித்தல் அற்ற நடவடிக்கை எதிர்காலத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு அரசாங்கத்தால் வெளியிடப்படும் 'ஜனதா' பத்திரிகை தமிழர் விரோத இனவாதத்தை தூண்டும் வகையில் அறிக்கை வெளியிட்டிருந்தது. வீரகேசரி பத்திரிகை ஊரடங்கு சட்டம் பற்றி ஏற்கனவே அறிவித்ததனால் புலிகள் வலையிலிருந்து பாய்ந்து தப்பிக்கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற சில வாரங்களுக்குள் குமாரதுங்க மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது ஆளும் வர்க்கத்தின் ஆழமான நெருக்கடியை எடுத்துக் காட்டுகிறது. கடந்த நவம்பரில் இலங்கை இராணுவம் வன்னிப் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க பின்னடைவை எதிர் நோக்கிய அதே வேளையில் கொழும்பு பிரதேச பாதுகாப்பு நிலைமை மோசமான நிலைமைக்கு திரும்பியுள்ளது. சில செய்திகளின்படி அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளின் வெளிப் பயணங்களை குறைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

ஸ்திர்மற்ற அரசியல் நிலைமை, பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறைகளில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் வீழ்ச்சி கண்டு வந்த கொழும்பு பங்குச் சந்தை, முன்னொரு போதும் இல்லாத மிகக் குறைந்த மட்டத்தில் தேங்கிக் கிடக்கின்றது. குண்டுப் பீதியின் காரணமாக முதலீட்டாளர்கள் சந்தையிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாக தரகர்கள் கூறியுள்ளனர். அதே வேளையில் கொழும்புக்கு வருவதற்கு டிக்கட்டுகளை பதிவு செய்து கொண்ட பெரும்பாண்மையான உல்லாசப் பயணிகள் அவற்றை மீளப் பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்து. இந்நிலைமையில் அரசாங்கத்தினுள்ளும் ஆளும் கும்பல்களிடையேயும் ஆழமான பீதி பரவிக் கொண்டுள்ளது.

---

அடையாளம் காட்ட தலையாட்டிகளையும் பயன்படுத்தினர். இந்த தலையாட்டிகள் இராணுவத்திற்கு சேவை செய்யும் சில தமிழ் இயக்கங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறான தேடுதல் வேட்டைகளின் மூலம் கொழும்பை அண்டிய பிரதேசங்களான– வத்தளை, ஜா எல, கந்தானை, பேலியகொட, கம்பகா மற்றும் களனி ஆகிய இடங்களிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் கொழும்பு பொலிஸ் நடவடிக்கை செயலகம் "பல எல்.டி.டி.ஈ சந்தேக நபர்களை" கைது செய்ய முடிந்ததாக குறிப்பிட்டதோடு, அதில் ஒன்பது பேர் "விடுதலைப் புலிகளின் தலைவர்கள்" இருவர் "பெண் தற்கொலைப் படையாளிகள்" எனவும் அறிவித்தது. பெரும்பாலான குற்றங்களை பொலிசாரே சுமத்தியுள்ளனர்.

விடுதிகளில் தங்கியிருந்த பெரும்பாலான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் வேட்டைக்குள் சிக்கினர். ஒரு இளம் யுவதி, இரவு உடையுடன் தனது வசிப்பிடத்திலிருந்து தூர இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார். கர்ப்பிணிகளும், நோயாளிகளும் கூட பொலிஸ் நிலையங்களில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக் தெரியவந்துள்ளது.

இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் பேசும் தாயும், மகளும் சேவை நேரத்தில் ஒரு பொலிஸ்காரரால் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கு உள்ளானது தெரிய வந்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்ட போது. அவ்வாறான அசம்பாவிதங்கள் ஏதும் இடம் பெற்றதாக தமது பொலிஸ் நிலையத்தில் முறையிடப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் இந்த அடக்குமுறைகள் தொடர்பான தமிழ் மக்களின் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் பொலிஸ் நிலையங்களில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தமிழ் மக்களை விடுதலைப் புலி சந்தேக நபர்களாக கணக்கிடும் தமது பிரச்சாரத்தில் முதலாளித்துவ பத்திரிகைகள் முன்னணி வகிக்கின்றன. கொழும்பு வடக்கு பிரதேசங்கள் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டபோது வத்தளையில் வாழும் 62,500 மக்களும் யாழ்பாணம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் இருந்து வந்த தமிழர்கள் என சில பத்திரிகைகள் கூறி வந்தன. இந்தப் பிரச்சாரம் சிங்கள இனவாத பாசிச இயக்கங்களின் கருத்துக்கு ஒப்பானதாகும். அரசாங்கத்தின் இத்தகைய கைது நடவடிக்கைகள் இனவாதிகளுக்கு ஊக்கமளிக்கின்றன. பொதுஜன முன்னணி அரசாங்கம் சமாதானத்தைப் பற்றியும், யுத்தத்தை முடிவுக் கொண்டுவருவது பற்றியும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் பற்றியும் கதையளக்கும் அதே வேளையில். பயங்கரவாதத்தை அழிக்கும் பேரில் ஒடுக்குமுறையை உக்கிரமாக்கி வருகிறது. இந்த சோதனை நடவடிக்கைகள் அரச படைகளை பலப்படுத்துவதாகவும் அவர்களுக்கான பயிற்சி மைதானமாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆசியாவின் மனித அபிவி

# பிராந்தியம் முழுவதிலும் வளர்ச்சி க

பிரியதர்ஷன மதவத்த

அண்மையில் வெளியான தென் ஆசியாவின் மனித அபிவிருத்திகள் தொடர்பான 1999 ம் ஆண்டுக்கான அறிக்கை, இந்தப் பிராந்தியத்தை பற்றிக் கொண்டிருக்கும் வறுமையையும் அசமத்துவத்தையும் மற்றும் சமூக சீர்கேடுகளின் பரிணாமத்தையும் அடையாளங் காட்டிக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஏற்பாட்டின் கீழ் பாகிஸ்தானிய மனித அபிவிருத்தியின் மத்திய நிலையத்திலிருந்து மஹ்பூப் உல்ஹக் கினால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, தென் ஆசியாவின் "அரச ஆளுமையின் நெருக்கடியை" அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் , பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆகியவை தென் ஆசிய நாடுகளாகும். வளர்ச்சி கண்டுவரும் வறுமை, அத்தோடு இணைந்துள்ள சமூகப் பிரச்சினைகளை தீர்க்கும் போதும், ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தும் போதும், அந்தந்த நாடுகள் காட்டிக் கொண்டுள்ள இயலாமையின் காரணமாக பிராந்தியத்தில் உள்ள அரசாங்கங்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகள் வெளிப்பட்டுள்ளன என அறிக்கையின் தயாரிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சனத்தொகையில் நூற்றுக்கு 23 வீதமான மக்கள் வாழும் தென் ஆசியா உலகில் அதிகளவில் வறுமை நிலவும் பிராந்தியமாகியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள சனத்தொகையில் நூற்றுக்கு 45 வீதமானவர்கள், அதாவது 540 மில்லியன் மக்கள் அமெரிக்க டாலர் ஒன்றுக்கும் குறைந்த தினசரி வருமானம் பெறுவதோடு வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களாவர். இந்தத் தொகையை உலகின் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிடும் போது ஆபிரிக்கா, கிழக்கு ஆசியா, சீனா உட்பட்ட பசுபிக் பிராந்தியம், மத்திய கிழக்கு அரசுகள், லத்தீன் அமெரிக்கா மற்றும் கஸ்பியன் தீவுகளில் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள முழு சனத் தொகையின் சதவீதத்தை விட அதிகம் என அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

தனியொரு நாட்டை எடுத்துக்கொண்டால் உலகில் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களை அதிகளவில் கொண்ட நாடு இந்தியாவாகும். அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அமெரிக்காவின் புள்ளி விபரங்களின்படி இந்தியாவின் சனத் தொகையில் நூற்றுக்கு 53 வீதமானவர்கள், அதாவது 500 மில்லியன் தொகையானவர்கள் அமெரிக்க டாலர் ஒன்றுக்கும் குறைந்த வருமானம் பெறும் –அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத படு ஏழைகளாவர். நேபாளத்தில் நூற்றுக்கு 53 வீதமானவர்களும், பங்களாதேஷில் 29 வீதமானவர்களும், பாகிஸ்தானில் நூற்றுக்கு 12 வீதமானவர்களும் இலங்கையில் 4 வீதமானவர்களும் ஒரு டாலருக்கு குறைந்த வருமானம் பெறுகிறார்கள் என இந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது. தேசிய ரீதியிலான புள்ளிவிபரங்களின் படி வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வோரின் தொகை இதைவிட அதிகமாகும். இதன் அடிப்படையில் பங்களாதேஷில் நூற்றுக்கு 48 வீதமானவர்களும், பாகிஸ்தானில் நூற்றுக்கு 34 வீதமானவர்களும், இலங்கையில் 22 வீதமானவர்களும் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

"விரிவடைந்து செல்லும் ஆழமான வருமான வேறுபாட்டில் தென் ஆசியா உலகில் முதலிடத்தில் உள்ளது. இந்தப் பிராந்தியத்தின் சகல நாடுகளதும் செல்வந்தர்களுக்கிடையில் செல்வமும் அதிகாரமும் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையிலான வேறுபாட்டைக் கொண்டுள்ளது." செல்வந்தர்களின் விருப்புக்கும் ஏழைகளின் விருப்புக்கும் இடையில் இடைவெளி காணப்படும் ஒரு பிராந்தியமாக தென் ஆசியா அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் ஆகக் கூடிய வருமானம் பெறும் நூற்றுக்கு 20 வீதமானவர்கள் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 40 வீதத்திற்கு உரிமை கொண்டாடுவதோடு, கீழ் மட்ட வருமானம் பெறும் நூற்றுக்கு 20 வீதமானவர்கள் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 10 வீதத்தையே பெறுகிறார்கள். பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கையும் ஏழைகளுக்கு எதுவிதத்திலும் பயன்படாததை சுட்டிக்காட்டும் அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகிறது.:

"1960–1995 இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கு 2.5 வீதம் சாதாரண பொருளாதார அபிவிருத்தி வேகத்தில் இந்தப் பிராந்தியம் கொண்டு நடாத்தப்பட்டுள்ள போதிலும், இன்னும் வல்லமை படைத்த நூற்றுக்கு 10 வீதமானவர்கள் நுகரும் வருமானம் சாதாரண ஏழைகள் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் பெறும் வருமானத்தை விட கிட்டத்தட்ட 6 மடங்கு உயர்ந்துள்ளது. அதிக வருமான இடைவெளி காணப்படும் நேபாளத்தில் நூற்றுக்கு 10 வீதமான செல்வந்தர்கள் நூற்றுக்கு 10 வீதமான ஏழைகளைவிட 9 மடங்கு உயர்ந்த வருமானம் பெறுகின்றார்கள். பாகிஸ்தானில் இது 7 மடங்காகவும், இலங்கையிலும், இந்தியாவிலும் 6 மடங்காகவும் பங்களாதேஷில் ஐந்து மடங்காகவும் காணப்படுகிறது."



உக்கிரமான வாழ்க்கைப் பிரச்சினை காரணமாக உடலுக்கு தீமூட்டி தற்கொலை செய்ய முயன்ற யுவதி –இந்திய பெங்களூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

### வாழ்க்கைத் தரத்தின் சீரழிவு

தென் ஆசியாவின் சனத் தொகையில் 200 மில்லியன் மக்கள் 40 வயதிற்கு மேல் உயிர் வாழ்ந்ததாக குறிப்பிடப்படவில்லை. இது இந்தப் பிராந்தியத்தில் காணப்படும் சுகாதார சீரழிவுகளின் நேரடி பிரதிபலிப்புகளாகும். முழு பிராந்தியத்திலும் சாதாரண ஆயுள் காலம் 62 வயதாகும். இவற்றை அபிவிருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும் போது, ஜப்பானில் 80 வயதும், அமெரிக்காவிலும் மற்றும் பிரித்தானியாவிலும் 77 வயதும் சாதாரண ஆயுள் காலமாகக் காணப்படுகிறது. பிராந்தியத்தின் சனத் தொகையில் 879 மில்லியன் மக்கள் ஒழுங்கான சுகாதார வசதியின்றி தவிக்கின்றனர். இது இந்தியாவில் 665 மில்லியனாகவும், பாகிஸ்தானில் 98 மில்லியனாகவும், பங்களாதேஷில் 91 மில்லியனாகவும், நேபாளத்தில் 18 மில்லியனாகவும், இலங்கையில் 6 மில்லியனாகவும் காணப்படுகிறது. பிராந்தியத்தின் சனத் தொகையில் 228 மில்லியன் மக்கள் சுத்தமான குடிநீர் வசதியின்றி உள்ளனர். இது இந்தியாவில் 178 மில்லியனாகவும், பாகிஸ்தானில் 56 மில்லியன், பங்களாதேஷில் 25 மில்லியன், நேபாளத்தில் 11 மில்லியன், இலங்கையில் 7.7 மில்லியன் என்ற வீதத்தில் உள்ளது. சுகாதார சேவையின்றி உள்ளவர்களின் தொகை 276 மில்லியன். அதாவது, பிராந்தியத்தின் மக்கள் தொகையில் 22 வீதம். ஒவ்வொரு நாடுகளிலும் இந்த சதவீதம் பங்களாதேஷ் சனத்தொகையில் நூற்றுக்கு 55 வீதம், பாகிஸ்தானில் 45 வீதம், இந்தியாவில் 15 வீதம், இலங்கையில் 7 வீதம் எனும் முறையில் காணப்படுகிறது.

இவ்வாறு ஏழ்மை நிலையையும் அத்தோடு இணைந்து கொண்டுள்ள சமூக சீர்கேட்டையும் சுட்டிக்காட்டும் அதே வேளை அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகிறது: "இவ்வாறான ஸ்திரமான ஆதாரங்கள் மூலம் தென் ஆசிய பிராந்தியம் இன்னமும் போதுமான வளங்களையும், சமூகக் காரணிகளையும் நோக்கி ஈர்க்கப்படவில்லை என்பது வெளிப்படுகின்றது. அரச நிதி ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்காக செலவிடும் நிதி வீழ்ச்சியடைகிறது. 1990 களின் ஆரம்பம் முதல் அடிப்படை அவசியங்களுக்கான செலவுகளில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவிடப்படும் நிதியை குறைக்கும் திட்டம் இருந்துகொண்டுள்ளது."

மிகவும் சிறிய நாடுகளான பூட்டான், மாலைதீவு தவிர்ந்த பிராந்தியத்தின் சகல நாடுகளும் முழு தேசிய உற்பத்தியிலும் நூற்றுக்கு இரண்டுக்கும் குறைவான சதவீதத்தையே பொது சுகாதார சேவைக்காக ஒதுக்கியுள்ளன. இந்தியாவில் பொதுச் சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி முழு தேசிய உற்பத்தியின் 0.7 வீதத்துக்கும் மிகக் குறைவாகும். பாகிஸ்தானில் இது 0.8 வீதமாகவும், பங்களாதேஷில் 1.2 வீதமாகவும், நேபாளத்தில் 1.2வீதமாகவும், இல்ங்கையில் 1.4 என்ற வீதமாகவும் உள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியை எடுத்துக்காட்டும் இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தில் மேலும் பல விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பிராந்தியத்தில் ஒவ்வொரு லட்சம் குழந்தைகளின் பிரசவத்திற்கும் தாய் மரண வீதம் 480 ஆகும். பூட்டானில் 100,000 பிறப்புக்கு தாய் மரண வீதம் 1,600, நேபாளம் 1,500, பங்களாதேஷ் 850, இந்தியா 437, ஆகும். 15 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களில் நூற்றுக்கு 85 வீதமானவர்கள் இரத்தச் சோகை நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமை இந்தியாவில் 88 சதவீதம், பங்களாதேஷில் 58 சதவீதம், பூட்டானில் நூற்றுக்கு 30 வீதமாகும். பாகிஸ்தானில் பிரசவிக்கும் 1000 பேரில் சிசு மரணவீதம் 95 ஆகும். பூட்டானில் இந்தத் தொகை 87, பங்களாதேஷில் 81, நேபாளத்தில் 75, இந்தியா 71, மாலைதீவு 53, இலங்கையில் 17 எனும் வீதத்தில் காணப்படுகிறது. பிராந்தியத்தில் உள்ள சிறுவர் தொகையில் 79 மில்லியன் சிறுவர்கள் உக்கிரமான போஷாக்கின்மையால் நோய்வாய்ப்படுகின்றார்கள். இந்தியாவில் 5 வயதுக்கு குறைந்த 59 மில்லியன் சிறுவர்கள் போஷாக்கின்மையால் தவிக்கின்றார்கள்.

சுகாதார நிலைமைகளை நெருக்கடிக்குள் தள்ளும் காரணிகளில் பிராந்தியத்தில் உள்ள சனத்தொகைக்கு டாக்டர்கள் தாதிமார்கள் பற்றாகுறை முக்கியமானதாக காணப்படுகிறது. தென் ஆசியாவைப் பொறுத்தவரையில் ஒரு லட்சம் பேருக்கு 44.34 வீதமான டாக்டர்களே உள்ளனர். இது இந்தியாவில் 48 வீதமாகும், பாகிஸ்தானில் 52 வீதம், பங்களாதேஷில் 18 வீதம், நேபாளம் 5 வீதம், இலங்கையில் 23 வீதம், பூட்டானில் 20 வீதம், மாலை தீவில் 19 வீதம். பிராந்தியத்தின் சனத் தொகையில் 4,078 பேருக்கு ஒரு தாதியே உள்ளார். 3,687 பேருக்கு ஒரு டாக்டரே உள்ளார். இந்த அறிக்கை குறிப்பிடுவது போல் பிராந்தியத்தில் தாதிமார்களின் தொகையை விட பொலிசாரின் தொகை நான்கு மடங்கு அதிகமாகும்.

தென் ஆசியாவின் மனித அபிவிருத்தி தொடர்பான '99 ம் ஆண்டு அறிக்கை பிராந்தியத்தில் வீழ்ச்சியடைந்து வரும் கல்வி நிலைமை அத்தோடு இணைந்து காணப்படும் சமூக நெருக்கடி தொடர்பாகவும் அவதானத்தை திருப்புவதன் மூலம் கல்வி அறிவற்ற நிலைமை சமூக பின்னடைவில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளது. பிராந்தியத்தில் முதியோர்களின் எண்ணிக்கையில் 395 மில்லியன் தொகையினருக்கு வாசிக்கும் திறன் இல்லை. இந்த நிலைமை நேபாளத்தில் நூற்றுக்கு 72 வீதமாகும், பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் நூற்றுக்கு 62 வீதமாகும், பூட்டானில் நூற்றுக்கு 58 வீதம், இந்தியாவில் நூற்றுக்கு 48 வீதம், இலங்கையில் நூற்றுக்கு 10 வீதம், மாலை தீவில் நூற்றுக்கு 7 வீதமாகும். பிராந்தியத்தில் வாசிக்கும் திறன் அற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களேயாவர். தென் ஆசியாவின் பெண்கள் தொகையில் 243 மில்லியன் பெண்களுக்கு, அதாவது நூற்றுக்கு 64 பேருக்கு எழுத்தறிவு இல்லை. அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் பெண்களுக்கிடையிலான எழுத்தறிவு நூற்றுக்கு 38 வீதம் எனும் மட்டத்தில் உள்ளது. எழுத்தறிவற்ற நிலை உயர்ந்து காணப்படும் நேபாளத்தில் பெண்கள் தொகையில் நூற்றுக்கு 86 வீதமானவர்கள் எழுத வாசிக்க முடியாதவர்களாவர். இது பாகிஸ்தானில் 76 வீதமாகவும், பங்களாதேஷில் நூற்றுக்கு 74 வீதமாகவும், பூட்டானில் 72 வீதமாகவும், இந்தியாவில் நூற்றுக்கு 62 வீதமாகவும் உயர்ந்து காணப்படுகிறது.

பிராந்தியத்தில் 50 மில்லியன் சிறுவர்கள் ஆரம்ப பாடசாலைக்கு செல்வதில்லை. இந்தியாவின் சிறுவர் தொகையில் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ிருத்தி ஆண்டு அறிக்கை– 1999:

# ண்டுவரும் வறுமையும் சமூக சீர்கேடும்

மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்கே செல்வதில்லை. பிராந்தியத்தில் உள்ள சிறுவர்களில் நூற்றுக்கு 41 வீதமானவர்கள், 5ம் தரம் முடிவடைவதற்குள் பாடசாலைக் கல்வியை கைவிடுவது தெரியவந்துள்ளது. தென் ஆசியாவில் மாணவர், ஆசிரியர் இடைவெளியானது 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எனும் வீதத்தில் உள்ளது. ஆனாலும் பங்களாதேஷில் 71 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரே உள்ளார். இந்தியாவில் 64 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்திலேயே உள்ளனர்.

தென் ஆசியாவின் அரசாங்கங்கள் மக்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதில் காட்டும் அலட்சியப் போக்கு தாக்கத்தை ஏற்படுத்துவது பற்றி அறிக்கையின் தயாரிப்பாளர் குறிப்பிடும் போது சுதந்திரமான வாழ்க்கைக்குத் தேவையான ஒரு சமூக சூழல் உருவாகுவதற்கு அது தடையாக உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். பிராந்தியத்தின் ஒன்றிணைந்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக செலவிடப்படுவது 3.21 வீதமான குறைந்த அளவிலான நிதியேயாகும். பாகிஸ்தானில் கல்விக்காக முழு தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 2.1 வீதமும், இலங்கையில் 3.1 வீதமும், இந்தியாவில் 3.5 வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் கல்வி நிலைமைகளில் ஏற்பட்டுவரும் தடைகளோடு, பொருத்தமற்ற வாழ்க்கை நிலைமைகள், வளர்ச்சியடைந்துவரும் வறுமை, தோல்வி மனப்பான்மை ஆகியவை எதிர்பார்ப்புகள் சிதைவடையும் நிலைமைக்கு தள்ளப்படுவதை எடுத்துக்காட்டும் அறிக்கையின் தயாரிப்பாளர்கள், அவற்றின் பிரதிபலிப்புகளாக சிறுவர் துஷ்பிரயோகம், விபச்சாரம், மற்றும் மோசடி நடவடிக்கைகள் வளர்ச்சியடைவதன் காரணமாக சமூகப் பாதுகாப்பின்மையின் அளவு வளர்ச்சி கண்டுவருவதையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**சிறுவர்களும் பெண்களும் முகம் கொடுக்கும் நிலைமைகள்**

1995ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியத்தின் அறிக்கையிலிருந்து புள்ளிவிபரம் ஒன்றை எடுத்துக் காட்டும் இந்த அறிக்கை, பிராந்தியத்தில் சிறுவர் உழைப்பாளிகளின் தொகை 134 மில்லியனாக உள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. உயிர் பிழைப்புக்காக ஏதாவதொரு பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் சிறுவர்களின் தொகையில்– 10 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களின் தொகையின் சதவீதத்தை எடுத்துக் கொண்டால்– பூட்டானில் நூற்றுக்கு 55 வீதம், நேபாளத்தில் நூற்றுக்கு 44 வீதம், பங்களாதேஷில் நூற்றுக்கு 17 வீதம் என்ற உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதை சிறுவர்கள் முகம் கொடுக்கும் மோசமான நெருக்கடியின் உச்சக்கட்டமாக அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. நாம் அறிந்த வகையில் சிறுவர் பாலியல் தொழில் தென் ஆசியாவில் பரவலாகக் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக கலந்துரையாடப்படுவது குறைவாகவே காணப்படுகிறது. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பற்றாக்குறை காரணமாக வளர்ச்சி கண்டுவரும் வறுமை, பெரும்பான்மையான சிறுவர்களை அன்றாடப் பிழைப்புக்காக உடலை விற்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளியுள்ளது.

தென் ஆசியாவில் 100,000 சிறார்கள் பகிரங்கமாகவே பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக அறிக்கை குறிப்பிடுகிறது. பெரும்பாலும் எய்ட்ஸ் நோய் தொடர்பான பீதி காரணமாக வயது முதிர்ந்த பாலியல் உழைப்பாளிகள் புறக்கனிக்கப்படுகின்றனர் சிறுவர்கள் இதற்குப் பயன்படுத்தப்படுவதால் சிறுவர் பாலியல் வியாபாரம் மேலும் அதிகரித்துள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பிராந்தியத்தில் சிறுவர் பாலியல் தொழில் பெரும் செல்வந்தர்கள் மூலம் நடாத்தப்பட்டுவரும் ஒரு வியாபாரமாக கருதப்படுகிறது. அறிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 7000 சிறுவர்கள் நேபாளத்தில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். நேபாளத்தின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் 100,000 தொடக்கம் 200,000 வரையிலான நேபாள சிறுமிகள் பெருமளவில் இந்தியாவில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. நேபாளத்தில் பெருந்தொகையான சிறுமிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கு மோசமான வறுமை நிலையும், சீதணப் பிரச்சனை மற்றும் ஏனைய சமூக பிரச்சினைகள், திருமண நிச்சயமற்ற நிலைமை, பாடசாலை கல்வியில் இருந்து ஒதுக்கித் தள்ளப்படுதல் போன்றவைகள் காரணங்களாக அமைந்துள்ளன. அதே போல் பங்களாதேஷில் இருந்தும் சிறுமிகள் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் கொண்டு செல்லப்படும் அதே வேளை இந்தியாவிலிருந்தும் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கு பாலியல் தொழிலுக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றனர்.

இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக விற்கப்படும் சிறுவர்கள் 30000 பேர் இருப்பதாக அறிக்கை குறிப்பிடுகின்றது. வடக்கில் காணப்படும் உள்நாட்டு யுத்தத்தில் சிறுவர்கள் அகதிகளாக்கப்பட்டிருப்பது தொடர்பாக இந்த அறிக்கை விசேடமாக குறிப்பிடுவதாவது, குடும்பத்தில் வருமானம் பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளதோடு யுத்த அழிவுகளின் பொருளாதார சீரழிவு காரணமாக சிறுவர்கள் தமது உடலை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தப் பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு சிறுவர்களுக்கு இருக்கும் அவசியத்தை வியாபாரிகள் தமது தேவைக்கு தந்திரமாக பயன்படுத்திக் கொள்வதை அறிக்கை மேலும் உறுதிப்படுத்துகிறது. பாலியல் தொழிலுக்குள் தள்ளப்படும் சிறுவர்கள் நிரந்தரமாக பலரது துஷ்பிரயோகங்களுக்கும், தாக்குதல்களுக்கும், பாதுகாப்பற்ற பாலியல் நடவடிக்கைகள் போன்ற சித்திரவதைகளுக்கும் பலியாவதோடு பயங்கரமான எய்ட்ஸ் நோய்க்கும் ஏனைய சமூக நோய்களுக்கும் ஆளாகின்றனர். "அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து நேபாளத்திற்கு வந்து பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களில் நூற்றுக்கு 65 வீதமானவர்களை எச்.ஐ.வி. வைரஸ் தாக்கியுள்ளதாக அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.

சகல சந்தர்ப்பங்களிலும் இம்சைகளுக்கு இலக்காகுவது பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களும் சிறுவர்களும் மட்டும் அல்ல. 1992 முதல் 1996 வரை இந்தியாவில் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளின் தொகை நூற்றுக்கு 31 வீதம் அதிகரித்துள்ளது. அவ்வாறே பாகிஸ்தானில் பஞ்சாபில், 1998ல், பாலியல் தொல்லைகளுக்கு முகம் கொடுத்தவர்களின் தொகையில் பாதிபேர் சிறுவர்களாவர்." "சமூகத்தில் பிற்போக்கான அனாதைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதை அரச நிர்வாகங்கள் அலட்சியம் செய்துள்ளது அம்பலமாவதாக அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தென் ஆசியாவில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இடம்பெற்றுவரும் மிலேச்சத்தனமான வன்முறை, முழு வறுமை நிலைக்கும் மேலதிகமாக கலாச்சார பின்னடைவுடன் இணைந்து காணப்படுகிறது. இந்தியப் பெண்களுக்கு எதிரான மோசடி நடவடிக்கைகளின் தொகை 38 வீதத்தால்



இந்திய பாடசாலையொன்றில் நிலத்தில் அமர்ந்து கல்வி கற்கத் தள்ளப்பட்டுள்ள மாணவர்

அதிகரித்துள்ளது. 1993–1996 இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியப் பெண்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வன்முறைகளின் தொகை 84000 முதல் 115723 வரை அதிகரித்துள்ளது. அவ்வாறே இலங்கையின் பொலிஸ் அறிக்கையின்படி 1998 முதல் 6 மாதங்களுக்குள் அறிக்கை செய்யப்பட்டுள்ள வன்முறை நடவடிக்கைகளின் தொகை 26565ஆக உள்ளது. தென் ஆசியாவில் அதிகளவிலான பெண்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகள் இடம்பெறும் நாடாக பங்களாதேஷ் குறிப்பிடப்படுகிறது. அங்கு ஒவ்வொரு 100,000 பெண்களுக்கும் 10 பேர் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகின்றனர்.

கிடைத்துள்ள தகவல்களை ஆய்வு செய்யும்போது "பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான தொல்லைகள் நிரந்தரமாக தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு பிராந்தியமாக தென் ஆசியா காணப்படுகிறது. அதற்கு தேசிய எல்லை, வர்க்கம், வயது , இன பேதங்கள் கிடையாது. விசேடமாக குடும்பங்களுக்குள் இடம்பெறும் இம்சைகளைப் பற்றிய தகவல்களை பெண்கள் வெளிவிடுவது மிகக் குறைவாக உள்ள அதே வேளை அவ்வாறான ஒடுக்குமுறைகள் பற்றிய சரியான தகவல்களை பெற்றுக் கொள்வது சிரமமானதாகும். எவ்வாறாயினும் நேபாளப் பெண்களுக்கு எதிரான தொல்லை நடவடிக்கைகளின் தொகை 50 வீதம் என்றும் இவை குடும்பங்களுக்கிடையில் நடைபெறுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. பாகிஸ்தானில் தமது மனைவியர்களை தாக்கும் சம்பவங்கள் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் இரண்டு நடப்பதாக தெரியவந்துள்ளது.

தென் ஆசிய நாடுகளில் உள்ள வறிய குடும்பங்களின் யுவதிகள் சீதணப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்நிலைமை மிகக் கொடூரமாகக் காணப்படுகிறது. மிகவும் தவறான மதிப்பீட்டிலுங் கூட 1994–98 இடைப்பட்ட காலத்திற்குள் இந்தியாவில் சீதன பிரச்சினையால் கொல்லப்பட்டவர்களின் தொகை 23000. இதே காரணத்தால் பாகிஸ்தானில் மாதம் ஒன்றுக்கு வறிய குடும்பங்களிள் 14 பெண் பிள்ளைகள் பேர் எரியும் நெருப்பில் தள்ளப்படுவதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

நிலமானித்துவ சமூக அமைப்போடு இணைந்து கொண்டுள்ள சாதீய ஒடுக்குமுறை மற்றும் திருமண சம்பிரதாயங்கள், பெண்களின் நிலைமையுடன் வளர்ச்சி கண்டுவரும் வறுமை மூலம் மேலும் மேலும் உக்கிரம் கண்டுள்ளது. மேற் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களின் மூலம் இது அம்பலத்திற்கு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

## முதலாளித்துவத்தின் எடுபிடிகளான தீவிரவாதிகளின் போலிக் கோலம் அம்பலம்

'இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்' என்ற தலைப்பில் விஜே டயசினால் எழுதப்பட்டு 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் ஒரு நூலாக வெளிவர உள்ளது. அந்நூலின் முன்னுரை இங்கே பிரசுரமாகின்றது.

1997ல் இருந்து தொழிலாளர் பாதையில் ஒரு கட்டுரைத் தொடராக வெளிவந்த இப்பத்திரம், அன்றைய சமயத்தில் 25 ஆண்டுகளாக தயார் செய்யப்பட்டு தொடுக்கப்பட்டதும் உக்கிரம் கண்டதுமான தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்தின் நிலைமைகளை தெளிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டிருந்தது. இந்த நூலில் இந்த யுத்தத்தின் முதல் 15 ஆண்டுகளுள் – அதாவது 1987 வரை– இடம் பெற்ற அபிவிருத்திகள் பற்றிய ஆய்வுகள் இடம் பெறுகின்றன.

யுத்தத்துக்கான திட்ட வரைவுகள் 1970ல் ஆட்சிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி– சமசமாஜக் கட்சி– கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்க ஆட்சிக் காலத்தில் இருந்து தயார் செய்யப்பட்டது. இதன் காரணமாக சிங்கள சோவினிச, பௌத்த மதவாத அரசியலமைப்புச் சட்டத்தின் மீள்நிர்மாண வேலைகளின் ஆண்டான 1972, இந்த யுத்தத்தின் தொடக்க ஆண்டாகக் கொள்ளப்பட்டது. யுத்தத்தின் தொடக்கத்தை அதன் பேரில் தீர்க்கப்படும் முதலாவது வேட்டின் நாளில் இருந்து கணிப்பது பொதுவில் சரியானது போல் தோன்றினாலும் யுத்தத்தின் நிஜ நோக்கங்களை மூடிமறைக்க இட்டுச் செல்கின்றது. எப்போதும் ஒரு யுத்தம் தொடங்குவது முதலாவது துப்பாக்கி வேட்டு தீர்க்கப்படுவதற்கு முன்னதாக ஒரு நீண்ட காலமாக நிலைபெற்று, குமுறி வந்த பொருளாதார–, அரசியல் காரணிகளின் பெறுபேறாகவாகும். இத்தகைய ஒரு வரலாற்று நோக்கு இல்லாதவிடத்து யுத்தம் நீடிப்பதும் அது விபரிக்கப்படுவதும் நெறிகெட்ட பேர்வழிகளின் கடைகெட்டதும் அக்காலத்துக்கேயுரியதுமான தொழிற்பாட்டின் ஒரு பெறுபேறாகவாகும்.

யுத்தம் உட்பட்ட வரலாற்று நிகழ்வுகளின் காரணிகளை வர்க்க அடிப்படையிலான சமுதாயத்தின் அங்கத்தவரான மனிதனின் உற்பத்தி நடவடிக்கைகளில் இருந்து தலையெடுக்கும் பிரச்சினைகளுள் நிறுத்தி ஆய்வு செய்யும் மார்க்சிசம், வரலாறு தொடர்பான குறுகியதும் அர்த்தமற்றதுமான கற்பனாவாத விதிமுறைகளை நிராகரிக்கின்றது. ஆதலால் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய பயனுள்ளதும், பரந்ததுமான நிஜ விளக்கத்தை உருவாக்குகின்றது.

யுத்தம் உட்பட்ட சமூகப் பேரழிவுகளில் இருந்து மனித இனத்தை விடுதலை செய்யும் பொருட்டு அத்தகைய நிஜ அறிவு அவசியமாகும். ஆதலால் கிழண்டிப் போன சமூகத் தலையிடிக்கு மருந்தாக தலையணையை மாற்றும் போலிச் சிகிச்சைகளை சிபார்சு செய்யும் போலி வைத்தியர்களை பின்பற்றி ஏமாற்றப்பட்டு, படுகுழியில் நட்பகலிலும் வீழ்ந்து கொள்கிறது.

இன்றைய மனிதன் உலகப் பொருளாதார சமூக அமைப்பின் பங்காளியாவான். அது அவனின் தனிப்பட்ட திட்டமிடல் இல்லாத போதிலும் அவனது சமூக நடைமுறை மூலம் சூழ்ந்து கொண்டு, புறநிலை ரீதியாக வளர்ச்சி கண்டுள்ள நிலைமையாகும். இந்த உலக மனிதனைச் சிருஷ்டிக்கத் தடையாக விளங்கிய முதலாளித்துவ அமைப்பே இன்னமும் அவன் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது.

முதலாளித்துவ பங்கீட்டின் ஆரம்ப கட்டத்திலேயே – இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்சும் எங்கேல்சும் சுட்டிக் காட்டியதாவது: "முதலாளித்துவ வர்க்கத்தின் உற்பத்தியில் பொருள்களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல்லும் சந்தை அவசியமாகியுள்ளது. இந்த அவசியம் முதலாளித்துவ வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டுகின்றது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக் கொள்ள வேண்டியதாகிறது. எல்லா இடங்களிலும் தொடர்புகளை நிறுவிக் கொள்ள வேண்டியதாகிறது."

1



இனவாத யுத்தக் கொடுமைகளால் அகதிகளான தமிழ் மக்கள்

1848ம் ஆண்டிலேயே முதலாளித்துவ அமைப்பின் உலகளாவிய அபிவிருத்தியை இந்த விதத்தில் தீர்க்க தரிசனமாகக் கண்டமை விஞ்ஞான ரீதியான விதிமுறைகளைக் கடைப்பிடித்த இருவரதும் சிறப்புக்கும் சாட்சி பகர்கின்றது. ஆனால் இன்று முதலாளித்துவ அமைப்பு அந்த தீர்க்க தரிசனமான முடிவுகளையும் தாண்டி, வளர்ச்சி கண்டுள்ளது.

இன்று சந்தை மட்டுமன்றி உற்பத்தி முறையே பூகோளமயமாகி உள்ளது. உற்பத்தி மூலதனம் பூகோளத்தின் உரித்துக்கள் மீது மட்டுமன்றி ஏழு சமுத்திரங்களையும் சுற்றி வளைத்தும் விண்வெளியை வெற்றி கண்டும் உற்பத்தி கூடத்தை ஸ்தாபிதம் செய்வதில் ஈடுபட்டுள்ளது. இதற்கு அவசியமான உலகளாவிய விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்திகளால் அதை வளப்படுத்தியுள்ளது.

மார்க்சிசம் எனப்படுவது வழிபாட்டுக்குரிய சூத்திரங்களைக் கொண்ட ஒரு நூல் அல்ல. மார்க்சிசம் உருவானது, ஹேகலின் காரண காரியங்களை மட்டும் கொண்ட இயக்கவியல் விதிமுறையை அவரின் உயர்ந்த நினைவுச் சின்னத்தின் சிகரத்தினுள் சிறைப்பிடித்து வைக்கச் செய்வதற்கு எதிராக இடம்பெற்ற புரட்சிகர சிந்தனைக் கிளர்ச்சியினாலாகும். சடவாதத்தின் இயந்திர ரீதியான எல்லைகளை தாண்டிச் சென்ற மார்க்சும், எங்கேல்சும் ஹேகலின் இயக்கவியலை புறநிலை ரீதியான கருத்தியல் வாதத்தில் இருந்து விடுவித்து நிற்க வைத்தனர். விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைக் கொண்ட விதிமுறை என்ற விதத்தில் அது இயக்கவியல் சடவாதத்துக்கான கதவுகளைத் திறந்துவிட்டது. தனது இருப்பின் பல்வேறு கட்டங்களைத் தாண்டிச் சென்று இயற்கையினைப் போலவே சமூகத்தின் எதிர்கால வாழ்க்கையையும் முன்னேற்றத்தையும் அடையக் கூடிய– எதிர்கால தலைமுறைகளுக்கு முன்நோக்கு ரீதியாக வழிகாட்டுவதற்கான வெளிச்சத்தை வழங்கியது. சோசலிச சமத்துவக் கட்சி அந்த விஞ்ஞான ரீதியான வெளிச்சத்தின் மூலம் எதிர்காலத்தை நோக்குகிறது அந்த நோக்கின் மூலம் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், புத்திஜீவிகளையும் போஷித்து வளர்த்தெடுக்கத் தினமும் பாடுபடுகின்றது. அது எமது கட்சிக்கு புறநிலை ரீதியான விதத்தில் கையளிக்கப்பட்டுள்ளதும் அதனால் நனவான முறையில் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுமான பணியாகும்.

இந்த முன்னுரையில் இதைக் குறிப்பிடக் காரணம் பல்வேறு காலகட்டங்களில் மார்க்சிச இயக்கம் கடைப்பிடித்து வந்த விதிமுறைகள், அந்தக் காலகட்டத்துக்கு இசைவான பொறியில் இருந்து விடுபட்டு, இன்று தொழிலாளர் வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய புரட்சிகர வேலைத் திட்டத்தில் இருந்து அந்த சமூகச் சக்திகளைத் தடம்புரளச் செய்யச் செய்யப்படும் முயற்சிகளுக்கு ஒன்றும் குறைவானது அல்ல. தீவிரவாதக் கோலம் பூண்டு மார்க்சிசத்துக்கு உரிமை கொண்டாடும் அத்தகைய சகல முயற்சிகளும் எப்போதும் பிற்போக்குக்குச் சேவை செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகம் (பு.க.க.) தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை அடையும் பொருட்டு கடைப்பிடித்து வரும் விதிமுறைகள் தொடர்பாக "பு.க.க.வுக்கு இருமுனை மின்சூழான தேசிய இனப் பிரச்சினை" என்ற தலைப்பில் அஹிங்சக பெரேரா என்பவர் 1996 செப்டம்பரில் 'தியச' சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை, இத்தகைய முயற்சிகளுக்கு நல்ல உதாரணமாகும். பின்னர் இந்தக் கட்டுரை "சிங்களவர்களுக்கு இல்லாத தமிழர்களுக்கு உள்ள பிரச்சினை என்ன"? என்ற தலைப்பில் அந்த ஆசிரியரால் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்பிலும் சேர்க்கப்பட்டு இருந்தது.

தேசிய சுயநிர்ணய உரிமையை (வெவ்வேறான தேசிய அரசுகளை அமைத்துக் கொள்ள தேசிய இனங்களுக்கு உள்ள உரிமை) காப்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கைவிட்டதை எதிர்த்து, லெனினின் மேற்கோள்களுடன் எழுதப்பட்ட அஹிங்சக பெரேராவின் கட்டுரையின் நிஜ இலக்கு மேலே குறிப்பிட்ட நூலில் அடங்கியுள்ள முதலாவது கட்டுரையிலேயே அம்பலமாகியுள்ளது. அது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் போதிக்காக வக்காலத்து வாங்கி, அதற்கு பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதேயன்றி வேறு ஒன்றும் அல்ல. அஹிங்சக பெரேரா அதில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "உண்மையில் இன்றைய அரசாங்கம் தேசிய இனக்குழு பிரச்சினைக்கு தனது தீர்வு பிரேரணைகளை முன்வைத்தமைக்கு காரணம் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் மிகவும் சுருக்கமான முறையில் சுட்டிக்காட்டிய தேசிய, அனைத்துலக ரீதியாகத் தோன்றும் புறநிலை நிலைமைகளுக்கு அமையவேயன்றி அரசாங்கத்தின் வெறும் நல்நெஞ்சத்தினாலோ அல்லது மனித நேயத்தினாலோ அல்ல. அதன்படி இனக்குழு நெருக்கடிக்கான தீர்வுக் கதவாக திறந்து கொண்டுள்ள அவகாசத்தை பயன்படுத்தும் தீர்க்கமான காரணியாக இருந்து கொண்டிருப்பது அதன் பேரில் கிடைக்கும் பொதுஜன அபிப்பிராயமாகும். யுத்தத்துக்கு எதிராக அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாகக் கிட்டும் பரந்த அளவிலான சமாதானத்திற்காக பொதுஜன அபிப்பிராயத்தை விழிப்படையச் செய்வது தீர்வை நோக்கிச் செல்லும் முக்கிய பாதையாகும். ஆதலால் ஜனநாயக, முற்போக்கு சக்திகளின் பணி இன்று தீர்க்கமாகியுள்ளது என்ற எமது நம்பிக்கை இந்த அரசியல் நிலைமையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது." (சிங்களவர்களுக்கு இல்லாத தமிழர்களுக்குள்ள பிரச்சினை என்ன?. பக்கம்– 10 )


'தியச' குழுவினரும் அஹிங்சக பெரேராவும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள கொந்தராத்து என்ன என்பதை இது நன்கு தெளிவுபடுத்துகின்றது. அதாவது, இன்றைய அரசாங்கம் இனக்குழு பிரச்சினைக்கு தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளதாகக் கூறி "அது யுத்தத்துக்கு எதிரான அதிகாரப் பரவலாக்கம் மூலம் கிடைக்கும் பரந்தளவிலான சமாதானத்தின் பேரில்" எனப் பூதாகாரப்படுத்திக் காட்டுவதன் மூலம் மக்களின் கண்களை இருட்டடிப்புச் செய்வதாகும்.

அஹிங்சக பெரேராவின் இக்கட்டுரை 1995 செப்டம்பரில் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த தேன்நிலவுகள் முடிவடைந்து யூ.என்.பி. வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்குள் இராணுவத்தை திணித்து நடாத்தியதைக் காட்டிலும் படுமோசமான முறையில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் உக்கிரம் கண்டு நான்கு மாதங்கள் கழிந்திருந்தது. இதைக் கண்டு கண்டும் அஹிங்சக பெரேரா ஒரு குருடனைப் போல் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள "இனக்குழு பிரச்சினைக்கு அதனது தீர்வு யோசனைகள்" பற்றிப் பேசுகின்றார். அந்தத் தீர்வு யோசனைகளுக்காக வக்காலத்து வாங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லெனின்



ட்ரொட்ஸ்கி

ஒரு பொதுஜன அபிப்பிராயத்தின் பேரில் ஜனநாயக, முற்போக்கு சக்திகளைப் பலப்படுத்த வேண்டும் என்ற பாணியில் உழுத்துப்போன தெண்டா கயிற்றை இழுத்துக் கொண்டு பொது மக்களைத் தலைமூழ்கிப் போகச் செய்ய முயற்சிக்கின்றார்.

மேற்சொன்ன உதாரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அஹிங்சக பெரேரா பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் "தீர்வு யோசனைகள்" "இனக்குழு நெருக்கடிக்கு தீர்வுகாணும் வழியாக திறந்துள்ள அவகாசம்" என இனங்காட்டிக் கொண்டுள்ளார். பு.க.க.வுக்கு எதிராக அஹிங்சக பெரேரா எழுதியுள்ள கட்டுரையின்படி தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அவர்களுக்கென ஒரு தனி தேசிய அரசினை நிறுவுவதாயின், பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது தீர்வுப் பொதியின் மூலம் திறந்து விட்டுள்ளது அத்தகைய "தீர்வு வழி" யேயாகும். இந்த வழி தடுமாறிப் போன பேர்வழியின் கூற்றுகள் தமிழ் மக்களுக்கு எதிரான "சமாதான யுத்தம்" என்ற பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வாயடிப்புகளையும் தாண்டிச் செல்லும் வம்பளப்பாகும். இது ஜே.வீ.பி. காரர்கள் உள்ளடங்கலான சகல இனவாதிகளும் தீர்வுப் பொதியைப் பற்றிக் கூறிவரும் ஜனநாயக எதிர்ப்பையும் பிற்போக்கு முதலாளித்துவ இலங்கை அரச சார்பிலான வினோதமான வக்காலத்துக்களையும் அறிந்தோ அல்லது அறியாமலோ நடாத்தும் வம்பளப்பாகும். அது மட்டுமன்றி இந்த தீர்வுப் பொதி கரட் கிழங்கை முன்வைத்துக் கொண்டு சமாதானத்துக்கான யுத்தம் எனக் கூறிக் கொண்டு, பொதுஜன முன்னணி அரசாங்கம் கடைபிடிக்கும் வழியிலான விதிமுறைகளை கடைப்பிடிக்க அங்கீகாரம் பெற்றுக் கொண்ட வீரவிதான, பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம், ஜாதிக சிந்தனை கும்பலும் இன்னும் பல சிங்கள சோவினிச, பாசிச அமைப்புக்களும் வளர்ச்சிகாண ஆலவட்டம் பிடிப்பதாக உள்ளது. இது ஆளும் வர்க்கத்தின் அவசியங்களுக்கு சுலபமானது. தமிழ் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதையும் நாடு முழுவதையும் இராணுவ சப்பாத்தினால் நசுக்குவதையும் இலக்காக கொண்டு போட்ட இந்த வேஷமான தீர்வுப் பொதியின் நிஜ கோலம், அஹிங்சக பெரேராவின் அறிக்கை மூலம் அவர் எதிர்பாராத விதத்தில் அம்பலமாகியுள்ளது. முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் அரசியல் ஆளுமையை ஒழித்துக் கட்டாமல் இந்தப் பிற்போக்கு அமைப்பின் பல்வேறு சீர்திருத்தங்கள், திருத்தங்களின் பேரில் கோஷம் எழுப்பி வந்த தேசியவாத சீர்திருத்த இயக்கங்கள் பூகோள ரீதியாகவும் அவ்வாறே நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள இன்றைய முதலாளித்துவ அமைப்பினுள்ளும் இயங்கிக் கொண்டுள்ள முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு ஆதரவளிப்பதோடு எதிர்கால காட்டுமிராண்டி முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் வழியமைத்துக் கொண்டுள்ளார்கள். அஹிங்சக பெரேராவும் 'தியச' குழுவும் சமூக முன்னேற்றத்திற்கு எதிரான இந்தப் போக்கினை பிரதிநிதித்துவம் செய்கின்றன. அந்த விதத்தில் இந்த இயக்கம் ஏகாதிபத்திய அவசியங்களுடன் அணிதிரண்டு கொண்டுள்ளது.

உலக மார்க்சிச இயக்கம் பயன்படுத்திய வார்த்தைகளையும், சுலோகங்களையும் நேரம் காலத்தைக் கணக்கில் கொள்ளாது முறைகேடான முறையில் பயன்படுத்திக் கொண்டு, தமது பாண்டித்தியத்தை வெளிப்படுத்துவதில் ஈடுபடும் முதலாளித்துவச் சார்பு பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் அவ்வாறே அவர்களால் பயிற்றப்பட்ட தீவிரவாதக் கோலம் பூண்ட சீடர்கள் கும்பலும் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் தவறான திசையில் இட்டுச் செல்ல சேவையாற்றும்படி முதலாளி வர்க்கத்தினால் என்றும் சேவைக்கு அழைக்கப்படுகின்றார்கள் என்பதை நாம் மறந்து போய் விடக் கூடாது.

சிறப்பாக ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிச்ச சொச்சங்களால் சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியம் வீழ்ச்சி காணச் செய்யப்பட்டு, கலைக்கப்பட்டதன் பின்னர் மார்க்சியத்தின் செல்லுபடியற்ற தன்மை பற்றியும் சோசலிச பதிலீட்டின் காலவதி பற்றியும் பேசும் ஏகாதிபத்தியவாத உலக அமைப்பின் பிரச்சார பேர்வழிகளாக இவர்களில் பலரும் மாறினர். இது முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனக்காரர்களின் குறைபாடுகளை நிறைவு செய்யக் கிடைத்த உதிரிப் பாகங்களாக ஏகாதிபத்திய முதலாளித்துவ அமைப்பு வெற்றி கொண்ட மிகவும் தற்காலிகமான 'வெற்றி' யாக விளங்கியது.

மேலே குறிப்பிட்ட மேற்கோள் இடம் பெற்ற கட்டுரையிள் அதே பக்கத்தில் அஹிங்சக பெரேரா ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு பின்வரும் விதத்தில் பதிலும் அளித்துள்ளார்: "ஒரு முதலாளித்துவ அரசாங்கம் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஓரளவில் தன்னும் அங்கீகரிக்கும் விதத்தில் அணுகுமானால் நாம் அதை எதிர்க்க வேண்டுமா? இல்லை. ஒரு போதும் இல்லை." அதைத் தொடர்ந்து வரும் இரண்டு வசனங்களில் அவர் ஒரு முதலாளித்துவ அரசாங்கம் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் தொடர்பாக "ஒரு அளவிலான" அக்கறையுடன் தள்ளப்படுவது ஏன்? எனவும் அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் தீவிரவாதி ஏன் குத்துக்கரணம் அடிக்க வேண்டும் என்பதையும் பின்வருமாறு விளக்குகின்றார்: "உண்மையிலேயே ஒரு முதலாளித்துவ அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை அங்கீகரிக்கத் தள்ளப்படுவதும் அதன் பேரில் உருவான பொதுஜனக் குரல் காரணமாகவேயாகும். அங்கு எமது நிலைப்பாடு அரசாங்கம் அங்கீகரித்த அந்த உரிமைகளை உண்மையாகவே வெற்றி கொள்ளும் பொருட்டுப் போராடுவதேயாகும்."

இதன்படி மக்களின் குரலுக்கு செவிமடுக்கும் நற்பண்பைத் தவிர வேறு பொருளாதார, அரசியல் வர்க்க அவசியங்கள் முதலாளி வர்க்கத்துக்கு கிடையாது. எந்த விதத்திலாவது "மக்கள் குரலுக்கு" செவிமடுத்து முதலாளித்துவ அரசாங்கம் உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் அவற்றை வெற்றி கொள்வதற்கும் இடையே போராட்டங்களால் இட்டு நிரப்ப வேண்டிய ஒரு இடைவெளி இருந்து கொண்டுள்ளதை பெரேராவின் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றது. அப்படியானால் உரிமைகள் தொடர்பான அங்கீகாரம் எனப்படுவது ஒரு பயங்கரமான மோசடி என்பதை பொது மக்களுக்கு அம்பலப்படுத்தாமல் அதற்கு எதிரான போராட்டத்தை ஒழுங்கமைப்பது எப்படி? தீவிரவாதியின் போராட்டப் பேச்சு, முதலாளித்துவ அரசாங்கம் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் நப்பாசைகளுக்கு அமைவான ஒரு பிற்போக்கு மோசடியாகும் என்பதும் நன்கு தெளிவாகின்றது. இதனாலேயே பொருத்தம், பொருத்தமின்மையை கணக்கில் எடுக்காது லெனினின் நூலில் இருந்து எடுத்துக் காட்டும் மேற்கோள்களின் பின்னால் பதுங்கிக் கொள்ள தீவிரவாதிக்கு நேரிட்டுள்ளது. மார்க்சிச இயக்கத்தின் முன்னோடிகளை மேற்கோள் காட்டும் போது அந்த மேற்கோள்கள் எந்த நேரம் காலத்தில் முன்வைக்கப்பட்டவை என்பது தொடர்பாகவும் அதன் செல்லுபடியான தன்மையையிட்டும் எப்போதும் கவனம் செலுத்துவது மார்க்சிச மரபாகும். லெனினின் பத்திரங்களில் இருந்து எடுக்கப்படும் மேற்கோள்கள் அவற்றுக்கு உரிய காலத்தில் அவர் ஈடுபட்டிருந்த அரசியல் போராட்டத்தின் தன்மை தொடர்பான உறவுகளில் இருந்து தள்ளி வைப்பதற்கு அஹிங்சக பெரேரா பிரமாண்டமான வரலாற்று திரிப்பு மோசடிகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

"பு.க.க.வுக்கு இருமுனை மின்சூழாகியுள்ள (Torch) தேசிய இனப் பிரச்சினை" என்ற தலைப்பில் எழுதப்பட்டு அவரின் நூலிலும் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரையில் பெரேரா பின்வருமாறு கூறுகின்றார்: "மார்க்சிச லெனினிச இயக்கம் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான சிக்கல்களை சோசலிசப் புரட்சியின் பணியாகக் கொள்ளவில்லை என்பதும், அதை முதலாளித்துவ ஜனநாயகத்தின் பணியாகவே சுட்டிக்காட்டியது என்பதும் பிரசித்தமானது. ஆனால் பின்தங்கிய நாடுகளின் முதலாளித்துவ வர்க்கங்களுக்கு தேசிய இனப் பிரச்சினை உள்ளடங்கலான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பணிகளைத் தீர்த்து வைக்க முடியாது என்ற ட்ரொட்ஸ்கியின் மரபுகளை அடிப்படையாகக் கொண்ட பு.க.க. பின்தங்கிய, பலவீனமான, வங்குரோத்து சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கத்தினால் ஜனநாயகப் புரட்சியின் பணிகளை இட்டுநிரப்ப முடியாது என்ற நிலைப்பாட்டில் நின்று கொண்டுள்ளது."

ட்ரொட்ஸ்கியை மார்க்சிச கோட்பாட்டு மரபுகளில் இருந்து அப்புறப்படுத்திக் காட்டும் கடைகெட்ட முயற்சியை இந்த இரண்டு பந்திகளும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. இந்த ஸ்டாலினிச திரிப்பு பாரம்பரியங்களின் செல்வாக்குகள் அஹிங்சக பெரேராவை எந்தளவுக்கு ஈவிரக்கமற்ற முறையில் ஜே.வீ.பி. உட்பட்ட அனைத்து அமைப்புக்களுடனும் அணிதிரள வைத்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய உலகின் தீவிரவாதிகள் எனப்படும் சகலரும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முழு நாற்றமெடுப்புக்கு மத்தியிலும் ட்ரொட்ஸ்கியின் பேரில் காட்டிக் கொள்ளும் கொலைகாரத்தனமான ஆத்திரத்தில் இருந்து விடுபட முடியாதவர்களாயினர். இதற்கான காரணம் என்ன? ட்ரொட்ஸ்கியின் முழு அளவிலான சமூக ஆய்வுகளின் வெளிச்சத்தின் எதிரில் தாம் அவரின் காலின் பெருவிரல்களில் தன்னும் தொங்கிக் கொள்ள முடியாமல் பூமியின் மண்ணில் வீழ்ந்து கொண்டு மலையுச்சிக்கு பாய நேரிட்டுள்ளதை புரிந்து கொண்டுள்ளனர். ஆதலால் அவர்கள் ட்ரொட்ஸ்கியை பின்பற்றுபவர்கள் மீதும் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

அந்த ஆத்திரத்தை பெரேரா பின்வருமாறு வெளிக் காட்டிக் கொண்டுள்ளார்: "இலங்கை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பணிகள் சோசலிச புரட்சியின் நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து கொண்டுள்ளது எனவும் அதைத் தவிர முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் பணிகளை இட்டுநிரப்புவதற்கான வேறு வழிகள் இல்லை எனவும் பு.க.க. வலியுறுத்தி வருகின்றது. இதனால் பு.க.க. ஜனநாயகப் புரட்சியின் பணிகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் அமைக்கப்படும் தொழிலாளர் வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்காகப் போராடிக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றது. இந்த நிலைப்பாட்டின் மூலம் பு.க.க.வும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை சோசலிச புரட்சி வரை ஒத்திப் போட்டுள்ளதை தெளிவுபடுத்திக் கொண்டுள்ளது."

இதைப் பற்றிக் குறிப்பிடுகையில் முதலில் பல்வேறு தேசிய, இனக் குழுக்களுக்கு சமத்துவமான ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்யும் தீர்வினை ஒத்திப் போட்டுள்ளது, அத்தகைய தீர்வினை உத்தரவாதம் செய்யக் கூடிய சமூக சக்தியான தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன சோசலிச அரசியல் வேலைத்திட்டத்துக்கும் குழிபறிக்கும் தீவிரவாதிகளையும் உள்ளடக்கிய கடைகெட்ட தலைமைகளின் செயற்பாடேயல்லாது பு.க.க வோ அல்லது சோசலிச சமத்துவக் கட்சியோ அல்ல. அந்தத் துரோகம் அன்று தொடக்கம் இன்று வரை அனைத்துலக சோசலிச முன்நோக்கிற்கு எதிராக முதலாளி வர்க்க ஆட்சி தொடர்பாக நப்பாசைகளைப் பரப்பிக் கொண்டு அந்த எதிர் சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் தள்ளுவதன் மூலம் சாதிக்கப்பட்டு வந்துள்ளது. இது இலங்கையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் மட்டுமன்றி உலகம் பூராவும் உள்ள மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் உண்மையாகும்.

இந்தக் கடைகெட்ட தலைவர்களின் அழிவு நிறைந்த பிடியில் இருந்து விடுபட்டு தொழிலாளர் வர்க்கத்தையும் அதைச் சூழ ஒடுக்கப்படும் மக்களையும் சோசலிசப் புரட்சி முன்நோக்கின் மூலம் ஆயுதபாணிகளாக்கி அதன் அடிப்படையில் போராடுவதன் மூலம் மட்டுமே இதற்கான தீர்வு காலவதியாகி இழுபட்டுப் போவதைத் தடுக்க முடியும். அது தொடர்பாக அன்று பு.க.க.வும் இன்று சோ.ச.க.வும் வலியுறுத்துவதையிட்டு அஹிங்சக பெரேரா குறிப்பிடுவது சரியானது. அவ்வாறே அந்த உண்மை பொதுமக்களுக்கு படுபயங்கரமான விளைவுகளையும் கொணர்ந்துள்ளது. இதையிட்டு பிரச்சினையே கிடையாது. முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பின்னால் வயிறளக்கும் நடவடிக்கைகளின் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடும் சகல முயற்சிகளதும் வங்குரோத்தும், பிற்போக்கும் உலகின் அனைத்து இடங்களிலும் அவ்வாறே இலங்கையிலும் ஒரு விடயத்தை நிரூபித்துக் காட்டியுள்ளது. ட்ரொட்ஸ்கிசம், ட்ரொட்ஸ்கிசவாதிகளின் பேரில் ஆத்திரத்தைக் கொட்டும் விதத்தில் அஹிங்சக பெரேரா இந்த தவ்ண்டையடிக்கும் தொழிலில் ஈடுபட்ட வண்ணம் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கை' வருமாறு:

"1917ல் ஏப்பிரல் ஆய்வுகள் மூலம் லெனின் ட்ரொட்ஸ்கியின் மரபுகளை ஒப்புக் கொண்டாரா இல்லையா என்பது விவாதத்துக்குரிய ஒரு விடயமாகும். அது வேறொரு இடத்தில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினையாகும். எவ்வாறெனினும் லெனின் ஏப்பிரல் ஆய்வுகளை முன்வைத்தது பெப்பிரவரி புரட்சியின் பின்னராகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்." பெரேரா இந்த ஒரு சில வசனங்களைக் கையாள்வது பு.க.க. ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படையில் காலூன்றி நின்று ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் ஏற்படும் வரை ஜனநாயகப் புரட்சியின் பணிகளை ஒத்திவைத்துள்ளது எனக் கூறுவதன் இறுதியிலாகும். லெனின் 1917 ஏப்பிரல் மாதத்தில் போல்ஷிவிக் கட்சிக்கு சமர்ப்பித்த ஆய்வுகளின் முக்கிய அத்திவாரமாக விளங்கியது அனைத்துலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக ரூஷ்ய பொது மக்கள் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்துக்காக வழிநடாத்தப்படாது போகின் ரூஷ்யா முகம் கொடுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் அவ்வாறே விவசாயிகளதும் எந்த ஒரு ஜனநாயகப் பணியையும் இட்டு நிரப்ப முடியாது போகும் என்பதாகும். மார்க்சிசம் லெனினிசத்துக்கும் ட்ரொட்ஸ்கிசத்துக்கும் இடையே ஒரு சீனப் பெரும் சுவரை நிர்மாணிக்க முயன்ற ஸ்டாலினிஸ்டுகள் உட்பட்ட அனைத்து கைக்கூலி "நிபுணர்களும்" பல்லாயிரக் கணக்கான பத்திரங்களின் மூலம் கொள்ளையடிக்க எடுத்த முயற்சிகளின் திரிபுக்கள் பெரேராவின் ஆலோசனைகளில் அடங்கியுள்ளன. லெனின் ஏப்பிரல் ஆய்வுகளை முன்வைத்தது பெப்பிரவரிக்குப் பிறகும் ஏப்பிரல் தொடங்கவும் முன்னதாக ரூஷ்யாவின் 1917 பெப்பிரவரி புரட்சியின் பின்னராகும். இது உண்மையாகும். அதில் உள்ளடங்கியிருக்கும் விடயங்கள் ஸார் மன்னன் ஆட்சி பெப்பிரவரியில் வீழ்ச்சி கண்டதன் பின்னர், மென்ஷிவிக், சமூகப் புரட்சிக் கட்சிகளின் உள்ளும் போல்ஷிவிக் கட்சியினுள்ளும் ஸ்டாலின் தலைமையிலான குழுவின் உதவியோடு ஆட்சியில் இருந்து வந்த முதலாளித்துவ வர்க்கத்தினால் ரூஷ்ய மக்கள் முகம் கொடுத்த எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது போன நிலையிலாகும். அவர்கள் வழங்கியுள்ள மோசடி வாக்குறுதிகளால் ஏமாந்துவிடக் கூடாது. ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைக் கொண்ட தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தின் கர்ப்பத்தின் மூலமே தீர்வு காண முடியும். ஆதலால் "கோட்பாடு இருளானது. உண்மை பசுமையானது"எனக்

14ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ...

13ம் பக்கத் தொடர்ச்சி

கூறிக்கொண்டு லெனின், தமது தலைமையின் கீழ் அதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த "தொழிலாளர், விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரம்" என்ற கலப்பட ஆட்சி சுலோகத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பவர்களை போல்ஷிவிக் நூதனசாலைக்கு அனுப்ப வேண்டும் எனக் கூறி, நிராகரித்தார். ரூஷ்ய மன்னர் ஆட்சியினுள் அடைபட்டுக் கிடந்த தேசிய இனங்களதும் அவ்வாறே பிரமாண்டமான அளவிலான விவசாயிகளதும் அவர்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வது லெனினின் ஏப்பிரல் ஆய்வுகளின் அடிப்படையில் ட்ரொட்ஸ்கியின் இணைத் தலைமையின் கீழ் வெற்றி கொண்ட 1917 அக்டோபர் புரட்சியின் பின்னர் மட்டுமேயாகும். இந்த உலக வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு "விவாதத்துக்கிடமானது" "வேறோர் இடத்தில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்" என்ற பாணியிலான நிபுணத்துவ வெறும் வார்த்தைகளுக்குள் பதுங்கிக் கொண்டு நழுவுவதற்கு சகல மோசடி மார்க்சிச – லெனினிஸ்டுகளும் முயன்றுள்ளனர். ஆனால் நிஜ உலகின் அபிவிருத்திகள் மீண்டும் மீண்டும் அந்தப் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க கோட்பாட்டின் சரியான தன்மையின் சவாலை அவர்கள் திரும்பத் திரும்ப எதிர் கொள்ள நேரிட்டுள்ளது. அந்த விடயத்தில் அஹிங்சக பெரேரா முதலாளித்துவ கல்வி நிறுவனமான இன்றைய பல்கலைக்கழக அமைப்பின் அரசியல் விஞ்ஞான பாடவிதானத்தின் கீழ் தமக்கு முன்னோடிகளின் கரடுமுரடான கறுப்பு துவாயின் மூலம் மூஞ்சியை மட்டுமன்றி மூக்கையும் பொத்திக்கொள்ள முடியாது போயுள்ள உடல்சார் பலவீனங்களையும் வெளிக்காட்டிக் கொண்டுள்ளார்.

முதலாளித்துவ சமுதாயத்தை புரட்சிகரமான முறையில் மாற்றியமைக்கும் பணிக்கு முரணான விதத்தில் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் சீர்திருத்தங்களை வெற்றி கொள்ளும் வயிறளப்பு ஊதாரித்தனத்தில் தலைமூழ்கிப் போன பெரேரா மற்றொரு திரிப்பினை பின்வரும் இலட்சணத்தில் முன் வைக்கின்றார். அதுவும் ரூஷ்யப் புரட்சியுடன் தொடர்புபட்ட விதத்தில் லெனினின் ஆக்கங்களில் இருந்து மேற்கோள் காட்டும் திரிப்பாகும்

"எமது அடிப்படையானதும் நிஜமானதுமான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சோசலிசப் பணிகளின் இடை விளைவாக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளை தீர்ப்போம். சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவாகும் என நாம் எப்போதும் கூறி வந்துள்ளோம்"(லெனின்– 'கம்கறு மாவத்த' மார்ச் 1996)

இந்த மேற்கோள்களின் பின்னர் பெரேரா பின்வருமாறு கேள்வி எழுப்பி பதிலும் அளிக்கின்றார்.

"இது எதைத் தெளிவுபடுத்துகின்றது? கோட்பாட்டு நிலைப்பாடு எடுப்பது மட்டும் போதுமானது அல்ல. மார்க்சிச இயக்கம் வகிக்கும் கோட்பாட்டு நிலைப்பாடுகளை மிகவும் சரியான நடைமுறை உபாயம், மூலோபாயத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துவதிலும் அது திறமைகாட்ட வேண்டும். அவ்வாறே போராட்டத்தின் இடைவிளைவாக வெற்றி கொள்ளும் சீர்திருத்தங்களை அங்கீகரிப்பதன் மூலம் லெனின் இறுதி வெற்றி கிட்டாததால் இதற்கு அப்பால் கிட்டும் தற்காலிக வெற்றிகளுக்கு காலால் உதையும் பரிதாபத்தை எதிர்த்து வந்துள்ளதை காட்டுகின்றது"

ரூஷ்யாவில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பணிகளைத் தீர்த்து வைத்தது பற்றியே லெனின் குறிப்பிடுகின்றார். மேற்கோளாகக் காட்டியுள்ள அவரின் வசனங்கள், 1917 அக்டோபர் புரட்சியின் மூன்றாவது ஆண்டு நிறைவின் பேரில் 1920ல் நிகழ்த்திய உரையிலேயே அடங்கியுள்ளன. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பணிகள் ரூஷ்யாவினுள் 1917 பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சோசலிச நடவடிக்கைகளின் ஒரு பாகமாகவே தீர்த்து வைக்கப்பட்டது என்றே லெனின் குறிப்பிடுகின்றார். அந்தப் புரட்சியுடன் தொடர்பற்ற விதத்தில் அதைத் தவிர்த்து அல்லது அதற்கு மேலாக பாய்ந்து கொள்வதன் மூலம் அடையக் கூடிய தீர்வு இருந்ததில்லை என்பதே அதன் அர்த்தம். இல்லையா?. இது அன்று புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகமும் இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியும் வலியுறுத்தும் நிலைப்பாட்டில் இருந்து வேறுபடுவது எப்படி?

லெனினின் இரண்டு வசனங்களின் உள்ளும் அவர் திட்டவட்டமான முறையில் வெளிப்படுத்தும் சீர்திருத்தங்களிடையே முக்கியமானது, தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தமது தலைவிதியை தீர்மானித்துக் கொள்ள வழங்கப்பட்ட ஜனநாயக உரிமைகளும் விவசாயிகள் காணிகளை பெற்றுக் கொள்ளும் உரிமைகளுமாகும். அந்த இரண்டு நடவடிக்கைகளும் இன்னமும் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இடம் பெறும் உலகளாவிய பொது சோசலிச திட்டமிடலை அல்லது விவசாயத்தில் கூட்டுமயத்தினை நோக்கிச் செல்லாத முதலாளித்துவ ஜனநாயத் தீர்வுகளாகும். அவை சோசலிச திட்டமிடலை நோக்கி மாற்றமடையும் சமூகத்தின் ஒடுக்கப்படும் மக்களை அந்த முற்போக்கு விதிமுறைகளையிட்டு நனவூட்டி, வெற்றி கொள்ளும் தொடர்ச்சியின் இடைமருவு கட்டங்களாகும். எனவேதான் அவை சோசலிசப் புரட்சியின் இடைச் சக்திகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்தச் சோசலிசத் தொடர்ச்சியின் அபிவிருத்திகளுக்குப் பிற்காலத்தில் தடைகளை ஏற்படுத்திய ஸ்டாலினிச அதிகாரத்துவம், விவசாயிகள் தொடர்பாகவும் அவ்வாறே ரூஷ்யாவினுள் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாகவும் 1920களின் கடைப்பகுதியில் இருந்து மேற்கொண்ட கொலைகாரத்தனமான அத்துமீறல்களின் அழிவுகள் அன்றையை விட இன்று பழைய சோவியத் யூனியனுள் வெளிப்பாடாகியுள்ளது.

லெனின் குறிப்பிட்ட "சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைச் சக்தியாக நாம் எப்போதும் குறிப்பிட்டுள்ளோம்" என்ற கூற்று மார்க்சிச இயக்கத்தின் வரலாற்றில் நீண்டதூரம் பயணம் செய்த விளைவுகளைக் கொண்டதாகும். முதலாளித்துவ அமைப்பினுள் வெற்றிகொள்ளும் சீர்திருத்தங்களை ஒவ்வொன்றாக திரட்டி ஒழுங்கு முறையாக மூட்டை கட்டிக் கொண்டு பயணம் செய்வதன் முடிவில் சோசலிசத்தை நோக்கிச் செல்ல முடியும் என்ற சீர்திருத்தவாத வேலைத் திட்டத்தை மார்க்சிச இயக்கத்தினுள் முதற் தடவையாக வெளிவெளியாக தெரிவித்தவர், 1890களில் ஜேர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் தலைவரான எட்வார்ட் பேர்ண்ஸ்டைன். அன்றில் இருந்து இன்று நூறு ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கழிந்து சென்றுள்ள போதிலும் அக்காலப் பகுதியினுள் உலகின் பல்வேறு இடங்களிலும் பேர்ண்ஸ்டைன்வாதத்தின் நாசங்கள் எடுத்துக் காட்டப்பட்ட போதிலும் அந்த முதலாளித்துவச் சார்பு சீர்திருத்தவாதத்தின் அதிர்வுகள் இன்னமும் ஒலித்தபடியுள்ளன. சிறப்பாக சீர்திருத்தவாதிகளுக்கு 'சேலைன்' குழாய்களாக விளங்கிய ஸ்டாலினிச கொர்பச்சோவின் பெரெஸ்ரொய்கா முகமூடியும் கழற்றி வீசப்பட்டு, அந்த அதிகாரத்துவம் வீழ்ச்சி கண்ட 1989–91 காலப்பகுதியின் பின்னர், புரட்சிகர சோசலிச முன்நோக்கிற்கு எதிரான கூச்சல்கள் துள்ளிக் கிளம்பின.

முதலாம் உலக யுத்த காலத்தில் ஏகாதிபத்திய யுத்தத்தினை கட்டியணைத்துக் கொண்ட பேர்ண்ஸ்டைனின் சமூக சீர்திருத்தவாத இயக்கம் மீண்டும் தலையெடுத்தது, படுமோசமான கம்யூனிச எதிர்ப்பு இயக்கத்துக்கு தோள் கொடுத்த வண்ணம், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய காலத்திலாகும். ஆனால் அதன் புதிய பாய்ச்சலை ஸ்டாலினிச ஆட்சி வீழ்ச்சி கண்டதன் பின்னர் நன்கு துலாம்பரமாகக் காணமுடிந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 40 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதாக கூறிக் கொண்ட இந்தப் பிற்போக்கு இயக்கம் 1999 அளவில் 143 நாடுகளின் அமைப்பைத் திரட்டிக் கொள்வதில் வெற்றி கண்டது. சோசலிச முகமூடி அணிந்து கொண்டிருந்த குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்க கும்பல் அடியோடு அந்த வழியில் தடம் புரண்டு போயிற்று. 'தியச'வும் இதில் ஒரு இயக்கமாகும்

அஹிங்சக பெரேரா அந்த சமூக புரட்சி எதிர்ப்பு எதிரொலியின் ஒரு நோக்குனர் ஆவார்.

—தொடரும்

# இலங்கையின் 52 ஆவது சுதந்திர தின விழா...

1ம் பக்கத் தொடர்ச்சி

மட்டுமன்றி "சமாதானத்துக்கான யுத்தம்" என்ற பாதாகையின் கீழ் இராணுவ நடவடிக்கைகளை உக்கிரமாக்கினார்.

அதே சமயம் குமாரதுங்க எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒரு தனித் தமிழ் அரசுக்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளையம் குற்றம் சாட்டினார். "1994 ஆகஸ்ட் தொடக்கம் நான் தனிப்பட்ட முறையிலும் எனது அரசாங்கமும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காணவும் யுத்தத்தை முடிவுக்குக் கொணரவும் இடைவிடாது தொழிற்பட்டுள்ளோம். பெரும் எதிர்க் கட்சி குழுவும் இந்தப் போக்கில் பங்கு கொள்வதை தொடர்ந்து திட்டவட்டமாக மறுத்து வந்தன." என அவர் குறிப்பிட்டார்.



சந்திரிகா குமாரதுங்க



ரணில் விக்கிரமசிங்க

ஆனால் ஒரு கிழமைக்கு முன்னதாக ஜனவரி 23 ல் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு பொதியை– மாகாண அரசாங்கங்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை கையளிப்பதை உள்ளடக்கிய அரசியலமைப்பு திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு ஆதரவு தெரிவித்து குமாரதுங்கவுக்கு ஒரு பகிரங்க கடிதத்தை வரைந்தார்.

கிட்டத்தட்ட 5 ஆண்டுகளாக குமாரதுங்க அரசியல் தீர்வு பொதியை நடைமுறைக்கிட யூ.என்.பி. உதவத் தவறியதே யுத்தத்துக்கு காரணம் எனக் குற்றம் சாட்டி வந்துள்ளார். ஆனால் இப்போது அந்த ஆதரவை வழங்க யூ.என்.பி. முன்வந்துள்ள போதிலும் அவர் இன்னமும் பதில் அளிப்பதாக இல்லை. இந்த சாகசங்கள் நிறைந்த மௌனத்துக்கான காரணத்தை விளக்கி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட விளக்கத்தின்படி 1995ல் தயாரிக்கப்பட்ட பின்னர் ஒத்திப் போடப்பட்ட அரசியல் பொதியை மீளமைக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. புதிய வரைவு "விரைவில்" பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதே சமயம் பெரும் வர்த்தக நிறுவனங்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த நெருக்கி வருகின்றன. அவர்களின் கவலையை வெளிப்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி கூறியதாவது: "பூகோளரீதியான பொருளாதாரம் நாடுகளுக்கிடையே உக்கிரமான போட்டியை வேண்டி நிற்கின்றது. எவ்வாறெனினும் இந்தச் சவால்களுக்கு சக்திவாய்ந்த விதத்தில் பதிலிறுக்கும் எமது வல்லமை எமது உள்நாட்டு இனக்குழு மோதுதல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மோதுதல் தொடரும் வரை நாம் ஒரு பூகோளமயமான உலகில் போட்டியிட எமது மக்களுக்கு நலன்களை கொணரவும் முடியாது."

ஜனவரி கடைப் பகுதியில் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்ட ஒரு சிரேஷ்ட நோர்வே இராஜதந்திரி லீவ் லூண்டே ஜனாதிபதியையும் எதிர்க்கட்சி தலைவரையும் தமிழ் அரசியல் குழுக்களையும் சந்தித்தார். நோர்வே வெளிநாட்டு அமைச்சர் நட் வொலீபக் இந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக கொழும்பில் செயற்படும் அரசியல் கட்சிகளிடையே ஒரு இணக்கத்தை உருவாக்கலாம் என எதிர்பார்க்கின்றார்.

அந்த அடிப்படையில் பார்க்கும் போது குமாரதுங்கவின் சுதந்திர தினப் பேச்சு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு சகலரையும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என விடுக்கப்பட்ட ஒரு அழைப்பாகும். "எம்மைப் பிடிவாதமான முறையில் நீண்ட தூரம் இட்டுச் சென்றுள்ள இந்த மோதுதலை தீர்ப்பதற்கான சாதனங்கள் தொடர்பாக ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு–எமது நாட்டுக்காகப் போராடுவதற்கு அனைத்து ஜனநாயக அரசியல் தலைவர்களையும் மீண்டும் ஒரு தடவை நான் அழைக்கின்றேன். எமது அனைத்து மக்களையும்– சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலே, பறங்கியர்– பிரதிநிதித்துவம் செய்யும் சகல ஜனநாயக அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் இடையே உடன்பாட்டை ஏற்படுத்துவது அவசியம். இந்த உன்னதமானதும் பாரியதுமான பணியில் எம் அனைவருடனும் பங்கு கொள்ளும்படி நாம் விடுதலைப் புலிகளையும் கூட அழைப்போம். தமிழ் மக்களுக்கு நீண்டு வரும் துயரங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விடுதலைப் புலிகள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது."

## யுத்த தயாரிப்பு

அதே சமயம் அவர் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் பேர் சூட்டினார். "சிங்கள, தமிழ் தலைவர்களையும் அப்பாவி மக்களையும் படுகொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களதோ அல்லது சிறுபான்மையினரதோ பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாது என்பதை விடுதலைப் புலிகள் அங்கீகரிக்க வேண்டும். ஈவிரக்கமற்ற பயங்கரவாத வன்முறைக்கும் அதன் விளைவுகளுக்கும் யுத்தத்துக்கும் நாம் அவசரமாக முடிவு கட்ட வேண்டும்." எவ்வாறெனினும் யுத்தத்தை தொடக்கி வைத்தது 'பயங்கரவாதம்' அன்றி தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராகத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கொழும்பு அரசாங்கங்கள்– 1950 களில் அவரின் தந்தையாரும் 1960 களிலும் 70 களிலும் அவரின் தாயார் உட்பட– காட்டிய பாகுபாடுகளேயாகும்.

ஆனால் குமாரதுங்க சமாதானம் பற்றி பேசும் அதே வேளையில் அவரின் அரசாங்கமும் இராணுவமும் ஒரு யுத்தத்துக்காகத் தயார் செய்து வருகின்றன. 'சன்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி, அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிகவும்

தொடர்ச்சி 15ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பை தெளிவுபடுத்திக் காட்டியிருந்தது. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இச்செய்தியை உடனடியாக நிராகரித்த போதிலும் 'அசோசியேட்டட் பிறஸ்' செய்தி, தூதரக அறிக்கை "இலங்கை அமெரிக்கா இடையேயான பல பில்லியன் உடன்படிக்கையின் ஒரு பாகமாக ஹெலிகொப்டர்கள், ஷெல் மோட்டார்களை கண்டு பிடிக்கும் ராடார் சாதனங்கள், யுத்த தளபாடங்களை இலங்கை கொள்வனவு செய்யும் என்ற சுயாதீனமான 'சன்டே டைம்ஸ்' அறிக்கையை நிராகரிக்கவில்லை" எனக் குறிப்பிட்டது. நவீன யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்வதோடு மட்டும் நின்று விடாத கொழும்பு அரசாங்கம் மேலதிகமாக 15000 படையாட்களையும் இராணுவ அதிகாரிகளையும் சேவையில் சேர்க்கும் பொருட்டு ஒரு பிரச்சார இயக்கத்தை வீடு வீடாக நடாத்திக் கொண்டுள்ளது.

கடும் இராணுவ செய்தி தணிக்கைக்கு மத்தியிலும் இலங்கை ஆயுதப் படைகளின் நிலைப்பாட்டின் சீரழிவை எடுத்துக் காட்டும் சில விபரங்களும் வெளியாகியுள்ளன. சுதந்திரத் தினத்தன்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் அறிவித்ததாவது: "பெப்பிரவரி 3ம் திகதி நள்ளிரவில் தனங்கிளப்பு பகுதியில் படைகள் ஒரு பயங்கரவாதிகளின் 'பதுங்கு குழிகள்' மீது தாக்குதல் நடாத்தினர்." இது சுதந்திர தினத்தின் மனோநிலையை தூக்கிப் பிடிக்கச் செய்யப்பட்டு இருப்பின் இது ஒரு படு மோசமான தோல்வியாகும். இராணுவம் குறிப்பிட்ட இந்தப் பகுதி நீண்ட காலத்துக்கு முன்னரே பூரணமாக விடுவிக்கப்பட்ட பகுதியாக குறிப்பிடப்பட்டு வந்தது. அது அப்படியாயின் அங்கு தாக்குதல் தொடுப்பதற்கு ஒரு 'பயங்கரவாத பங்கர்' இருக்க முடியாது.

யாழ்ப்பாணம் பிஷப் தோமஸ் சௌந்தரநாயகத்தின் படி விடுதலைப் புலிகள் 2000 ஆண்டினை யுத்த ஆண்டாகப் பிரகடனம் செய்து கொண்டுள்ளது. பத்திரிகையாளர்கள் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் குமாரதுங்கவின் சுதந்திர தின அழைப்பு பற்றி நினைவுபடுத்திய போது பிஷப் கூறியதாவது: "பிரபாகரன் கூட தனது வருடாந்த (மாவீரர் தின) உரையில் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விட்டிருந்தார். இரு தரப்பினரும் இது பற்றி பேசிக்கொள்கின்றனர்; ஆனால் யுத்தத்துக்கு தயார் செய்கின்றனர். இதன் பெறுபேறாக பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர்."

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க சுதந்திர தின கொண்டாட்டங்களின் பொதுவான இருளுடன் சேர்ந்து கொள்ளும் விதத்தில் கூறியதாவது: "ஒவ்வொரு சுதந்திர தினத்தின் போதும் நாம் அடிக்கடி நம்பிக்கைகள் யதார்த்தமாக வேண்டும் என வலியுறுத்துகின்றோம்... (எதிர்வரும் ஆண்டில்) அந்த நம்பிக்கைகளில் எந்தளவை நாம் அடைந்து கொண்டுள்ளோம் என நினைத்துப் பார்க்கையில் உண்மையில் இந்த எதிர்பார்ப்புக்களை திருப்திகரமான முறையில் அடைய முடியவில்லை."

குமாரதுங்க சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்தாலும் யுத்தம் முற்றுப் பெறும் என்பதில் எவருக்கும் உண்மையில் நம்பிக்கையே கிடையாது. பொதுஜன முன்னணி அரசாங்கமும் இராணுவமும் யுத்தத்துக்கு தயார் செய்கின்றன. ஆனால் ஒரு தொகை இராணுவ பின்னடைவுகளுக்கு மத்தியில் எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது. இந்த மனத்தளர்ச்சி அலைகள் ஒரு முன்னோக்கே கிடையாத ஒரு தலைவரதும் ஒரு அரசாங்கத்தினதும் அறிகுறியாகும். இதனால் பரந்த அளவிலான உழைக்கும் மக்களின் வாழ்க்கை அதிகரித்த விதத்தில் சகிக்க முடியாத ஒன்றாகிக் கொண்டுள்ளது.

# களுத்துறை சிறைச்சாலை தாக்குதலில் தமிழ் கைதிகள் இருவர் பலி

எமது நிருபர்

தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள களுத்துறை சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதுதலில் இரண்டு கைதிகள் பலியானதோடு பெருந்தொகையானவர்கள் காயமடைந்தனர். இச் சம்பவம் ஜனவரி 6ம்,7ம் திகதிகளில் இடம்பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சுமார் 800 தமிழ் இளைஞர்கள் பலவித குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில் இச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முதல் நாள் அதாவது ஜனவரி 6ம் திகதி இடம் பெற்ற மோதுதலில் அதிகாரிகளின் தாக்குதலின் காரணமாக 85 தமிழ் கைதிகள் காயமடைந்தனர். அதில் 50 பேர் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 35 பேரும் களுத்துறை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதில் வவுனியாவைச் சேர்ந்தவரான அந்தோனிப் பிள்ளை ஜேசுதாசன் படு காயங்களுக்குள்ளாகி உயிரிழந்ததோடு மிக மோசமான நிலையில் உள்ள மேலும் நான்கு பேர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். ஆஸ்பத்திரியிலிருந்து 'தொழிலாளர் பாதை'க்கு கிடைத்த தகவல்களின்படி அவரின் தலை சிதறிப்போயுள்ளது. மரண பரிசோதனைகளை நடாத்திய அரசாங்க வைத்திய அதிகாரி, தலையில் ஏற்பட்ட காயங்களால் மூளை பாதிக்கப்பட்டதன் காரணமாக ஜேசுதாசன் இறக்க நேரிட்டதாக குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் நாள் தமிழ் அரசியல் கைதிகள் மீது இடம் பெற்ற தாக்குதலில் 24 கைதிகள் தாக்கப்பட்டதோடு சிறிகுமார் எனும் இளைஞர் கொல்லப்பட்டார். ஜனவரி 9ம் திகதி நடத்தப்பட்ட பரிசோதனையின் பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அவரின் முகத்திலும் நெஞ்சிலும் 10 சூடுகள் விழுந்திருப்பதாகவும் அரசாங்க வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகள் 12பேர் சிறு காயங்களுக்குள்ளாகியிருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோசலிச சமத்துவக் கட்சி கடந்த சனிக்கிழமை களுத்துறை சிறைச்சாலைக்கு விஜயம் செய்வதற்கு சிறைச்சாலை ஆணையாளரிடம் அனுமதி கேட்டபோதும், அன்று விடுமுறை நாள் எனக் கூறி அதை தட்டிக்கழித்தார். களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தோட்டப்புற இளைஞர்கள் ஆறு பேரை விடுதலை செய்யுமாறு சோ.ச.க. பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சோ.ச.க. இந்த கைதிகளின் பேரில் ஏற்பாடு செய்துள்ள சட்டத்தரணியும், தொழிலாளர் பாதை நிருபரும் களுத்துறை ஆஸ்பத்திரியில் உள்ள காயமடைந்தவர்களை பார்வையிடச் சென்றனர். காயமடைந்தவர்கள் உள்ள வார்ட்டை காவல் செய்வதற்காக சிறைச்சாலை காவலர்கள் 15பேரும் மேலதிக பொலிசாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஒவ்வொரு கட்டிலிலும் விலங்கிடப்பட்ட நிலையில் காயமடைந்த கைதிகள் கிடத்தப்பட்டனர். அங்கு வந்த சிறைச்சாலை காவலர், தான் தமிழர் விடுதலை கூட்டணியின் எம்.பி.களுக்கு கூட இடமளிக்கவில்லை என்றும் பின்னர் அவர்கள் அரசாங்க பிரதி அமைச்சரிடம் அனுமதி பெற்றதாகவும் கூறி எமது நிருபரையும் சட்டத்தரணியையும் தடை செய்தார். தமிழர் விடுதலை கூட்டணி (TULF) எம்.பி.யான பொன்னம்பலம் செல்வராசா காயமடைந்தவர்களை பார்வையிட்ட பின் குறிப்பிட்டிருந்ததாவது: "அவர்களுக்கு எந்தவிதமான சிகிச்சையும் வழங்கப்படவில்லை. காயமடைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரி சிவநாதன் கிஷோர் பற்றி குறிப்பிட்ட அவர் "கால் உடைந்த வேதனையில் அலறிக் கொண்டிருந்த போதும் யாரும் அவரைப் பற்றி கணக்கில் எடுக்கவில்லை" என்றார். களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே காயமடைந்த கைதிகள் தாக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. கடந்த சனிக்கிழமை கைதிகளைப் பார்வையிட உறவினர்கள் சிறைச்சாலைக்கு சென்ற சந்தர்ப்பத்தில் இனவாத குண்டர்கள் அவர்களை பயமுறுத்தினர்.

ஆத்திரமூட்டல் நடவடிக்கையின் பின்னரே கைதிகளுக்கு எதிரான தாக்குதல் இடம்பெற்றது. இந்தக் கைதிகள், கடந்த இரண்டு மாதங்களாக சிறைச்சாலை வசதிகளை அதிகரிக்கக் கோரியும் தங்களை விடுதலை செய்யக் கோரியும் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஜனவரி 5ம் திகதி பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்த கைதிகள் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்ததோடு சிலர் கூரையில் ஏறி எதிர்ப்பைக் காட்டினர். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இரண்டு: முதலாவது, கைதிகள் உள்ள சிறைச்சாலை பகுதிகளை கூறுபோட்டு அண்மையில் கட்டப்பட்ட மதில்களில் 'கேட்' அமைப்பது. இந்த தடை மதில்கள் கைதிகள் ஆளையாள் சந்திப்பதை தடுப்பதற்காகவே அமைக்கப்பட்டன. மதில் இருப்பதன் காரணமாக நூலகத்திற்கு செல்ல நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இரண்டாவது கோரிக்கை, உறவினர்கள் தங்களை பார்வையிட வரும்போது கை விலங்கிட்டபடி கொண்டு வரும் புதிய நடைமுறையை நிறுத்த வேண்டும் என்பதாகும். இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளருடன் கலந்துரையாட வேண்டும் என கைதிகள் தெரிவித்தார்கள். ஜனவரி 6ம் திகதி சிறைச்சாலை ஆணையாளர் உட்பட்ட 10 அதிகாரிகள் கலந்துரையாடலுக்காக சிறைச்சாலைக்கு சமூகமளித்தனர். அன்று கைதிகள் அரசியல்வாதியும் சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் கொழும்பில் கொல்லப்பட்டதற்கு எதிராக கறுப்பு கொடி ஏற்றியிருந்தனர். பொன்னம்பலம் இங்குள்ள சில கைதிகளின் சார்பாக ஆஜராகியும் வந்தவர். பேச்சுவார்த்தைகளின் போது சிறைச்சாலை ஆணையாளர் கோரிக்கைகளை நிராகரித்தார். பின்னர் சிறைச்சாலை பாதுகாவலர்கள் தாங்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக குறிப்பிட்டனர். கலந்துரையாடலின் பின்னர், சிறைச்சாலையில் 'எப்'பிரிவு சிறைக் கூடத்தை சோதனை செய்வதற்காக பாதுகாவலர்கள் மூவர் அனுப்பப்பட்டனர். அவர்கள் தம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக கூறிக்கொண்டு திரும்பி வந்தனர். அதேவேளை காவலர்கள் கைதிகளைத் தாக்கத் தொடங்கினர். மேற் குறிப்பிடப்பட்ட சம்பவம் கைதிகளைத் தாக்குவதற்காக திட்டமிட்டு சிருஷ்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சிறைச்சாலை ஆணையாளரும் சம்பவம் நடந்த வேளை அங்கு இருந்துள்ளார். எந்த விதமான சம்பவமும் இன்றி சிறைச்சாலை அதிகாரிகள் இரண்டாம் நாள் கைதிகளைத் தாக்கியதோடு சுடுவதற்காக 'ரிபீட்டர்' வகை துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக நீதி அமைச்சரும் சிறைச்சாலை அதிகாரிகளும், கைதிகள் ஏற்கனவே திட்டமிட்டு தாக்கியதாகக் காட்டும் வகையில் ஆயுதங்களை – சில விறகுக் கட்டைகள், இரண்டடி கூரான கம்பிகள், மொட்டைக் கத்திகள் – தொலைக்காட்சியில் காட்சிக்கு வைத்தனர். இந்த 'ஆயுதங்கள்' பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உதவியோடு, ரிபீட்டர் துப்பாக்கிகளால் ஆயுதபாணிகளாகியுள்ள சிறை காவலர்களுக்கு தாக்குதல் தொடுப்பதற்காகவே சேகரிக்கப்பட்டுள்ளன! இந்த விமர்சனம் தொடுக்கப்பட்டுள்ள நிலைமைக்கு மத்தியில் அரசாங்க சிறைச்சாலை ஆணையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் கைதிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்த சிறைச்சாலையில் 800 க்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இங்கு உணவு விநியோகத்தின் பேரில் 50 சிங்கள கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ் கைதிகளை பயமுறுத்துவதற்காகவே அவர்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை. பெரும்பாலான கைதிகள் மூன்று வருடங்களுக்கு மேலாக இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். வழக்குத் தாக்கல் செய் இல்லையேல் விடுதலை செய்! என அவர்கள் இடைவிடாது கோரிவந்துள்ளனர்

சகல தமிழ் கைதிகளும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதன் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தடுத்து வைக்கும் உத்தரவை வழங்கும் அதிகாரம் உள்ளதோடு, கைதிகளிடம் பெறப்படும் பொய் 'ஒப்புதல் வாக்குமூலங்களை' அவர்களுக்கு எதிரான சாட்சியாக பயன்படுத்தவும் முடியும். தமிழ் இளைஞர்களை இங்ஙனம் தடுத்து வைப்பது தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத அரச தாக்குதலின் ஒரு பாகமாகியுள்ளது.

1983 ஜூலையில் அன்றைய யூ.என்.பி. அரசாங்க காலத்தில் இடம்பெற்ற மக்கள் படுகொலைத் தாக்குதல்களின் போது, வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் 53 பேர் கொல்லப்பட்டனர். 1997 நவம்பரில் களுத்துறைச் சிறைச்சாலையில் காவலர்கள் மூலம் தூண்டி விடப்பட்ட சிங்கள கைதிகளுக்கும் தமிழ் கைதிகளுக்கும் இடையிலான சண்டையில் இரண்டு தமிழ் கைதிகள் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானவர்கள் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செச்னியா மீதான ரூஷ்ய தாக்குதலின் அரசியல், வரலாற்று விளைவுகள்

1ம் பக்கத் தொடர்ச்சி

மக்களின் எண்ணிக்கை 30,000– 50,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக சோசலிச வெப் தளம் (WSWS) யுத்தத்தை உடன் நிறுத்துமாறும் ரூஷ்யப் படைகளை வாபஸ் பெறும்படியும் கோருமாறு அனைத்து தொழிலாளர்களையும் மாணவர்களையும் புத்திஜீவிகளையும் வேண்டுகின்றது. ரூஷ்ய மக்களின் நலன்களின் பேரிலேயே செயற்பட்டு வருவதாகக் கூறும் கிரேம்ளினின் சுயநலவாதங்கள் நிராகரிக்கப்பட வேண்டும். செச்னியா மீதான தாக்குதல் ரூஷ்ய ஆளும் பிரமுகர்களின் ஒரு படுகொலை யுத்தமாகும்.

மாஜி ரூஷ்ய ஜனாதிபதி யெல்ட்சினும் அவரால் புதிதாக நியமனம் செய்யப்பட்ட வாரிசு விளாடிமிர் புட்டினும் செச்னியா மீதான தாக்குதல் தனித்து பயங்கரவாத கொள்ளையர்களுக்கு எதிராகவே நெறிப்படுத்தப்பட்டுள்ளதாக கூறிக் கொள்கின்றனர். இந்த யுத்தத்தை ஒரு வெறும் பொலிஸ் நடவடிக்கையாகக் காட்டிக் கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சிகள், செச்சியன் நகரங்களிலும் பட்டினங்களிலும் வாழும் அப்பாவி பொது மக்கள் மீது இவர்கள் நடாத்திய குண்டு வீச்சு விதிமுறைகள் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் மாஸ்கோவிலும் மற்றும் நகரங்களிலும் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்களுக்கு செச்னியன் பிரிவினைவாதிகளே பொறுப்பு என்ற வாதமே இந்த யுத்தத்துக்கான உடனடியான சாக்குப் போக்காகியது. இதில் 200 மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இதுகாறும் இந்தக் குண்டு வெடிப்புகளில் செச்னியர்கள் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான உறுதியான ஆதாரங்கள் எதுவுமே முன்வைக்கப்படவில்லை. ரூஷ்ய அரசாங்க வட்டாரங்களில் வன்முறை குற்றங்கள், அரசியல் படுகொலைகளின் சாதனைகளை அடிப்படையாகக் கொண்ட மாபியா மூலகங்களின் செல்வாக்குகள் போட்டியிட்டு வருகின்றன. இந்தக் கொலைகார நடவடிக்கைகளுக்கு உண்மையில் அவர்களே பொறுப்பு என்பதை நிராகரித்துவிட முடியாது. இருப்பினும் குண்டுவீச்சுக்களும் செச்சியன் யுத்தமும் ரூஷ்ய ஆட்சியாளர்களின் அரசியல் நோக்கங்களின் நலன்களுக்கு பயன்பட்டுள்ளது. பொலிசாரின் அடக்குமுறை அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில் நாட்டினுள் நிலவிவரும் பெரும் சமூக நெருக்கடிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அடியோடு ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளது. ரூஷ்யாவின் குழப்பநிலையை ஒரு ஒழுங்கு முறைக்கு கொணர்வதற்கு அவசியமான பலசாலியாக ஜனாதிபதி வாரிசு புட்டின் சித்தரிக்கப்பட்டார். யுத்தம் யெல்ட்சினின் உள்கட்சி வட்டாரங்களுக்கு இந்த முக்கிய வாகனத்தை வழங்கியது. எதிர்தரப்பு சக்திகளின் அரசியல் கைப்பொம்மைகளுக்கு எதிராக ரூஷ்ய பெடரேசனின் பிராந்திய ஒன்றிணைப்பைக் கட்டிக்காப்பதன் மூலம் ரூஷ்ய மக்களின் நலன்களின் பேரில் யுத்தம் இடம்பெற்று வருகின்றது என்பதே புட்டின் அரசாங்கம் முன்வைத்துள்ள முக்கிய நியாயப்படுத்தலாகும். எவ்வாறெனினும் வெகுஜனங்களின் காவலனாகவும் ரூஷ்ய தேசிய நலன்களின் பாதுகாவலனாகவும் கிரேம்ளின் தன்னைச் சித்தரித்துக் காட்டுவது சிரிப்புக்கிடமானது. ஏறக்குறைய ஒரு தசாப்த காலமாக முதலாளித்துவ சந்தைக் கொள்கைகளே யெல்ட்சினாலும் தற்சமயம் புட்டினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. யுத்தகாலத்துக்கு வெளியே எந்த ஒரு மக்களும் பலிகடாக்களாகியுள்ள மாபெரும் சமூக, பொருளாதார பேரழிவுகளுக்கு இவர்களே பொறுப்பு. புதிய ஒழுங்கு முறையின் உச்சியில் குந்திக் கொண்டுள்ள விரல்விட்டு எண்ணக் கூடிய அரை– கொலைகார மூலகங்கள் பரந்தளவிலான ரூஷ்ய தொழிலாளர்களை பெருமளவிலான வேலையின்மைக்கும், வறுமைக்கும், முக்கிய சமூக சேவைகளின் ஒழிப்புக்கும் பலிகடாக்களாக்குவதன் மூலம் தம்மை வளப்படுத்திக் கொண்டனர்.

மேலும் இது கிரேம்ளின் ஆளும் கும்பலான மாஜி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தில் இருந்து ஒரு தசாப்தத்துக்கு முன்னர் முதலில் தலைநீட்டிய காலம் தொடக்கம் தனது உயிர் நீடிப்புக்கு மேற்கத்தைய அரசாங்கங்களிலும் வங்கிகளிலும் கூட்டுத்தாபனங்களிலுமே தங்கியிருந்தது. முக்கியமாக அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் ஒரு வாடிக்கையாளர் ஆட்சியாளனாக தொழிற்பட்டு, முன்னைய அரசுடமை கைத்தொழில்களை ஒழித்துக் கட்டியும் அனைத்துலக மூலதனம் ரூஷ்ய இயற்கை வளங்களையும் சந்தைகளையும் கையாட வழிவகுத்தும் செயற்பட்டு வந்தது. செச்னியாவுக்கு எதிரான யுத்தம், ரூஷ்ய தரகு முதலாளித்துவத்தின் (கொம்பிரதோர்) புதிய வர்க்க நலன்களைப் பாதுகாக்க இடம் பெற்றது. ரூஷ்யாவின் நீண்டகாலக் கூட்டாளியான சேர்பியா மீதான நேட்டோ குண்டுவீச்சைத் தொடர்ந்து இந்த ஆளும் பிரமுகர்கள் கும்பல் தனது காக்கசியன் பிராந்தியம் மீதான மேற்கத்தைய நாடுகளின் சவாலையிட்டு பெரிதும் கவலை கொண்டிருந்தது. இந்தப் பிராந்தியம் பிரமாண்டமான கஸ்பியன் எண்ணை வயல்களுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான ஒரு விரகி முக்கியத்துவம் கொண்ட பாலமாக விளங்கியது. உத்தியோகபூர்வமான அரசாங்கப் பிரகடனங்கள் பொதுவில் மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய ஆட்சியாளர்களை செச்னிய பிரிவினைவாதிகளின் மறைமுக ஆதரவாளர்களாக இனங்காட்டி வந்துள்ள போதிலும் சில முன்னணி அரசியல்வாதிகள் அமெரிக்காவின் நேரடி தலையீடு இருந்து கொண்டுள்ளதாக ஜாடை காட்டி வந்துள்ளனர்.

சமீபத்தில் இடம் பெற்ற இராணுவத் தலைவர்களின் ஒரு கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் இகோர் சேர்கியேவ் "அமெரிக்காவின் தேசிய நலன்கள் வடக்கு காக்கசசில் இராணுவ மோதுதலை வேண்டி நிற்கிறது. வெளியிலிருந்து தூபமிடப்பட்டு இடைவிடாது குமுறிக் கொண்டுள்ளது. மேற்கத்தைய நாடுகளின் கொள்கையானது ரூஷ்யாவுக்கு ஒரு சவாலாக உள்ளது. அதனது அனைத்துலக அந்தஸ்தை பலவீனம் அடையச் செய்யவும் விரகி முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியங்களில் இருந்து அப்புறப்படுத்துவதுமே நோக்கமாக உள்ளது." எனப் பிரகடனம் செய்தார்.

ஒரு புறத்தில் கொசோவா யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவுக்கு எதிரான பரந்த உணர்வலைகளின் அடிப்படையில் இத்தகைய ஒரு அறிக்கையின் இலக்கு, செச்சியன் பிரச்சார இயக்கத்துக்கு ரூஷ்யாவின் உள்ளே பரந்த மக்கள் ஆதரவை வெற்றி கொள்வதாகும். ஆனால் அமெரிக்க இராணுவத்தின் வளர்ச்சியின் மூலம் தோன்றியுள்ள அச்சுறுத்தலை புட்டினும் இராணுவத்தில் உள்ள அவரது சகாக்களும் மாபெரும் ரூஷ்யன் சோவினிசத்தை தூண்டிவிடுவதன் அடிப்படையில் எதிர்த்து நிற்க முடியாது. இந்த யுத்தத்துக்கு தொழிலாளர் வர்க்கம் வழங்கும் எந்த ஒரு ஆதரவும் அவர்களின் சொந்த ஒடுக்குமுறையாளர்களின் கரங்களையும் அனைத்துலக வங்கிகளுக்கும் கைத்தொழில் கூட்டுக்களுக்கும் ஊடாக ரூஷ்யாவில் மேலாதிக்கம் செலுத்தும் அந்த அரசாங்கத்தையும் மட்டுமே பலப்படுத்தச் செய்யும்.

செச்னியாவில் கிரேம்ளினின் இலக்கு, ரூஷ்யாவின் வல்லரசு அந்தஸ்த்தை மீள ஸ்தாபிதம் செய்வதும் ஏகாதிபத்திய அரசாங்கங்களுடனும் மேற்கத்தைய வங்கிகளுடனுமான தமது பேரம் பேசும் பலத்தை உறுதி செய்வதும், அதன் மூலம் ரூஷ்யன் காக்கசியன் மக்களை சுரண்டுவதில் பங்குகொள்ளும் தமது உரிமையை பேணுவதுமேயாகும்.

## செச்னியாவில் ஏகாதிபத்தியத்தின் பாத்திரம்

செச்னியாவிலான ரூஷ்ய ஆக்கிரமிப்பை மேற்கத்தைய வல்லரசுகளுக்கும் நேட்டோவுக்கும் அல்லது ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஒரு சமபலம் கொண்டதாக



விளாடிமீர் புட்டின்

நோக்குவது ஒரு பாரதூரமான தவறாகும். ஏகாதிபத்திய அரசாங்கங்களும் குறிப்பாக அமெரிக்கா, இன்றைய துயரமான நிகழ்வுகளுக்கு ஒரு பெரும் பொறுப்பாகும். சோவியத் யூனியனை உடைத்து எறிந்துவிட்டு, முதலாளித்துவ சந்தை உறவுகளை புனருத்தாரணம் செய்ததில் இருந்து மலர்ந்த முதலாவது புதிய ஜனநாயக ஒழுங்கு முறை என இதைப் பிரகடனம் செய்த அமெரிக்கா, ஐரோப்பாவினால் உத்தரவாதம் செய்யப்பட்டதுமான ஒரு ஆட்சியாளர்களால் இது இடம் பெற்றுள்ளது என்பதை இந்த யுத்தம் தொடர்பான எந்த ஒரு வெகுஜனத் தொடர்புச் சாதன விமர்சகர்களும் குறிப்பிடத் தவறிவிட்டனர். யெல்ட்சினின் அரசாங்கம் அரசுடமை நிறுவனங்களை தகர்த்து எறிந்தும் பல்லாயிரக் கணக்கானோரை வறுமைக்குள் தள்ளியும் தம்மை செல்வந்தர்களாக்கிக் கொண்டும் இருந்த ஒரு நிலையிலேயே இவர்கள் ஒரு மாஜி ஸ்டாலினிஸ்டான யெல்ட்சினை மாபெரும் மனிதநேயக்காரனாகவும் ஜனநாயக உயர் இலட்சியங்களைக் கொண்டவனாகவும் காட்டினர்.

அமெரிக்காவும் ஐரோப்பாவும் ரூஷ்ய யுத்தத்தை கண்டனம் செய்வது அடியோடு பாசாங்கானது. ஈராக்குக்கு எதிரான அவர்களின் இராணுவத் தாக்குதலும் தடைவிதிப்புகளும் இலட்சோப லட்சம் அப்பாவி ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இறந்ததற்குப் பொறுப்பாகும். சேர்பியாவுடனான மோதுதலின் போது நேட்டோ பெல்கிரேட்டிலும், நாடுபூராவும் உள்ள நகரங்கள், பட்டினங்களிலும் சிவிலியன்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியது. அத்தோடு சிறிய தேசிய இனங்களின் தேசிய இறைமையில் கைவைப்பதற்குள்ள தனது உரிமை பற்றியும் வலியுறுத்தியது. அமெரிக்கா நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் உரிமை பாராட்டி வந்துள்ளது. கடந்த ஆண்டு "பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும்" பம்மாத்தின் கீழ் சூடானின் மாபெரும் மருந்து உற்பத்தி பக்டரி மீது குண்டு வீச்சு நடாத்தியது.

சேர்பியா மீதான நேட்டோ தாக்குதல், ரூஷ்யாவின் நீண்டகால புவிசார்– அரசியல் நலன்களை சவால் செய்யும் விதத்தில் அமெரிக்கா கையாண்ட ஒரு தொகை நடவடிக்கைகளின் சமீபத்திய சம்பவமாகும். கடந்த சில வருடங்களாக சோவியத் சகாப்தத்தைச் சேர்ந்த வார்ஷோ ஒப்பந்தத்தின் ரூஷ்யாவின் மாஜி சகாக்களை ஈர்க்கும் விதத்தில் நேட்டோ விரிவுபடுத்தப்பட்டது. இதே சமயம் இவற்றில் பலவுக்கு ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் பெறும் சாத்தியங்களும் வழங்கப்பட்டன.

அமெரிக்கா, 1972ம் ஆண்டின் பீரங்கி ஏவுகணை எதிர்ப்பு ஒப்பந்தத்துக்கு மாறாக அணுவாயுத ஏவுகணைத் தாக்குதலுக்கு எதிராக ஒரு தேசிய பாதுகாப்பு கேடயத்தை உருவாக்கும் புதிய திட்டங்களுடன் முன்னேறி வருகின்றது. இது ரூஷ்யாவுக்கும் இதன் ஆபத்தை கொணர்கின்றது. அமெரிக்கா இதன் பிராந்தியத்தின் மீது சார்பு ரீதியில் தண்டனைக்கு அப்பாற்பட்ட தாக்குதலில் ஈடுபட முடியும். அதே சமயம் அமெரிக்கா கஸ்பியன் பள்ளத்தாக்கில் இருந்தும் அதனூடாக காக்கசஸ் வரையுமான எண்ணை போக்குவரத்து வழிகளில் ரூஷ்யா கொண்டுள்ள கட்டுப்பாட்டைக் குறைக்கும் கொள்கையையும் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றது. இந்த நிலைமைகளின் கீழ் ரூஷ்யாவினுள் இருந்துகொண்டுள்ள பெரிதும் சோவினிச சக்திகளை தவிர்க்க முடியாத விதத்தில் பலப்படுத்துவதாகவும் விளங்கியது.

எவ்வாறெனினும் அமெரிக்காவோ அல்லது ஐரோப்பாவோ ரூஷ்யா செச்னியாவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பேரில் அவை ரூஷ்யாவுடன் கொண்டுள்ள பொருளாதார, அரசியல் உறவுகளை தியாகம் செய்துகொள்ள விரும்புவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. அவர்கள் அக்கறை காட்டுவது செச்சியன் மக்களின் தலைவிதியைப் பற்றியல்ல; தமது நலன்களுக்குப் பெரிதும் சேவகம் செய்த ஒரு ஆட்சியாளர்களுடனான உறவுகள் முழுமையாகத் தகர்ந்து போகும் ஆபத்தையிட்டே. மேற்கத்தைய அரசாங்கங்களின் உத்தியோகபூர்வமான பிரகடனங்கள் இடைக்கிடையே ரூஷ்யாவின் தரப்பிலான மிதமான போக்குக்கு அழைப்பு விடுப்பதோடு அதன் சொந்தப் பிராந்தியத்தினுள் "பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை" அடக்குவதற்கான மாஸ்கோவின் உரிமையை அங்கீகரிக்கவும் செய்கின்றன. ஈராக்கிலும் பொஸ்னியாவிலும் கொசோவாவிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சொந்த யுத்த நடவடிக்கைகளை ஆதரிக்கும் வாஷிங்டனின் மனித உரிமை பிரச்சாரத்தினால் ஏமாற்றப்பட்ட சகலருக்கும் இது ஒரு நல்ல படிப்பினையாக விளங்கும்.

## வரலாற்று படிப்பினைகள்

உலக சோசலிச வெப் தளம் (WSWS) 20 ம் நூற்றாண்டின் அடிப்படை அரசியல் படிப்பினைகளை அடியொற்றி– ரூஷ்ய, செச்சியன், அனைத்துலக– தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு சுயாதீனமான முன்நோக்கினை முன் வைக்கின்றது.

செச்னிய யுத்தம் மாஜி ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் 1917 அக்டோபர் புரட்சியின் சமூக, ஜனநாயக அபிலாசைகளை பல தசாப்த காலங்களாக காட்டிக்கொடுத்ததில் வேரூன்றிக் கொண்டுள்ளது. லெனின்– ட்ரொட்ஸ்கி தலைமையில் வழிநடாத்தப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் அனைத்துலகவாதம், சமத்துவ அடிப்படைக் கொள்கைகள் அப்பட்டமாக மீறப்பட்டதன் காரணமாக செச்சியன் மக்களின் தொடர்ச்சியான தேசிய. ஜனநாயக துயரங்களுக்கு ஸ்டாலினிசமே பொறுப்புச் சொல்லியாக வேண்டும்.

தொழிலாளர் வர்க்கம் விவசாயிகளில் பெரும்பான்மையினரதும் ரூஷ்ய சாம்ராஜ்யம் பூராவும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களதும் ஆதரவுடனேயே 1917 ல் ஆட்சியைக் கைப்பற்றுவது சாத்தியமாகியது. சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியம் (USSR) 1922ல் ஸ்தாபிதம் செய்யப்பட்டதோடு பல்வேறு தேசிய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த 65 மில்லியன் மக்கள் உட்பட்ட 140 மில்லியன் மக்களைக் கொண்டிருந்தது.

இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியினர் மீது தொழிலாளர் வர்க்க தலைமையை உறுதி செய்யும் பொருட்டு போல்ஷிவிக்குகள் அனைத்து சோவியத் மக்களதும் சமத்துவம், இறைமையையும், பிரிந்து சென்று சுயாதீனமான அரசுகளை அமைப்பதையும், தேசிய– மத சிறப்புரிமைகளை ஒழிப்பதையும், தேசிய சிறுபான்மையினரதும் தேசிய இனக் குழுக்களதும் சுயாதீனமான அபிவிருத்தியையும் பிரகடனம் செய்தது. இந்த விதத்தில் அவர்கள் ஏகாதிபத்திய சக்திகளதும் தேசிய முதலாளி வர்க்கத்தின் வெள்ளையர் சக்திகளதும் அரசியல் செல்வாக்கை எதிர்கொள்ளும் அதே வேளை மாபெரும் ரூஷ்ய சோவினிசம் தொடர்ந்து வருவது தொடர்பான எந்த ஒரு சந்தேகத்தையும் அவர்கள் போக்க முடிந்தது. சோவியத் மக்களின் ஒன்றிணைவை தெளிவான விதத்தில் ஸ்தாபிதம் செய்வதன் மூலம் பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செச்னியா மீதான தாக்குதலுக்கு தயாராகும் ரூஷ்ய படையணிகள்

ஸார் பேரரசு ஒரு சிறியதும் பின்னடைவும் மலட்டு தேசிய அலகுகளையும் கொண்ட மேற்கத்தைய பெரும் வல்லரசுகளுக்கு அரசியல் ரீதியில் தொடர்ந்தும் கீழ்படிவானதுமான ஒரு இரத்தப் புற்று நோயாக சிதறுண்டு போவதைத் தடுக்கத் தன்னிச்சையாக உதவியது.

இக்கொள்கை உலகம் பூராவும் உள்ள ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் இயக்கத்துக்கு ஒரு பிரமாண்டமான உந்துதலை வழங்கியது. அக்டோபர் புரட்சி கேள்விக்குரிய பதிலை வழங்கியது: காலனித்துவ நாடுகளின் மக்கள் எந்த விதிமுறைகளுக்கு ஊடாகவும் எந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலும் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலையை ஈட்டிக் கொள்வதும் பொருளாதார சமூக முன்னேற்றத்தை நோக்கிய தமது பாதையை ஊர்ஜிதம் செய்வது? தேசிய ஒடுக்குமுறையிலிருந்து தலையெடுப்பதற்கான நிஜ அடிப்படை ஒரு சோசலிச பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு அத்திவாரம் இடும் விதத்தில் தொழிலாளர் வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதே என்பதை இந்த உதாரணத்தின் மூலம் நிரூபித்தது. ஸ்டாலினிசத்தின் மாபெரும் அட்டூழியம், அத்தகைய ஒரு சோசலிசத் தீர்வில் உலகத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நம்பிக்கை வைப்பதை அவமானப்படுத்தி குழிபறித்ததேயாகும்.

போல்ஷிவிக்குகள் சோசலிச நிர்மாணப் பணி ஒரு உலகளாவிய ரீதியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர். சோவியத் யூனியன் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டு இருந்து வரும் வரை ரூஷ்யாவின் பொருளாதாரப் பின்னடைவுகளின் முதுசங்களில் இருந்து தலையெடுக்க முதல் நடவடிக்கை எடுப்பது மட்டுமே சாத்தியமாகியது. ஒரு நிஜமான சமூக சமத்துவமும் செழிப்பும் கொண்ட சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான சட பொருளாதார அவசியங்களை புரட்சியை ஐரோப்பாவின் பெரிதும் முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்கு விஸ்தரிப்பதன் ஊடாகவும் இறுதியில் ஒரு உலக சோசலிச அமைப்பை ஸ்தாபிதம் செய்வதன் மூலமுமே அடைய முடியும்.

எவ்வாறெனினும் ஐரோப்பாவில் புரட்சிகர போராட்டங்கள் தோல்வி கண்ட ஒரு நிலைமையின் கீழ் கட்சியினுள் இருந்த பரந்த தட்டினரும் அரச அதிகாரத்துவமும் இந்தக் முன்னோக்கு "யதார்த்தமற்றது" எனக் கூறி நிராகரித்தனர். அவர்கள். தமது சொந்த வசதி வாய்ப்புக்களை கட்டிக்காப்பதை தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று நலன்களுக்கு மேலாக தூக்கிப் பிடித்ததோடு ஸ்டாலினை தமது தலைவராகவும் "தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை" நிர்மாணிப்பதை தமது பிற்போக்கு கற்பனாவாதத்துக்கான கோட்பாட்டு நியாயப்படுத்தலாகவும் கண்டனர். லியோன் ட்ரொட்ஸ்கி போல்ஷிவிக் கட்சியினுள் ஸ்டாலினிசத்தின் தேசியவாத முன்னோக்கையும் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்ட "மாபெரும் சக்திகளின் சண்டை" மீண்டும் தலை தூக்குவதையும் எதிர்க்கும் பொருட்டு "இடதுசாரி எதிர்க் கட்சியை". அமைத்தார். ஸ்டாலினின் தலைமையில் அதிகாரத்துவத்தின் வளர்ச்சி அதன் மார்க்சிச எதிர்ப்பாளர்களை பயங்கரம், அடக்குமுறை, கொலைகள் மூலம் அதிகரித்த விதத்தில் கையாண்டது. சோவியத் தொழிலாளர்களுக்கும் தேசிய சிறுபான்மையினருக்கும் எதிரான பயங்கரங்கள் உக்கிரம் கண்டன.

ஸ்டாலினிச அதிகாரத்துவம் இழைத்த படுபயங்கரமான அட்டூழியங்களில் ஒன்று இரண்டாம் உலக யுத்த காலத்தின் போது – 1944ல் – சோவியத் மத்திய ஆசியாவிற்கு 400,000 செச்னியர்களும் இன்குஷ்டுகளும் பெருமளவில் நாடுகடத்தப்பட்டது. இதன் பெறுபேறாக நாடுகடத்தப்பட்டவர்களில் 30 சதவீதத்தினர் இறந்து போனதாக மதிப்பிடப்பட்டது.

## பிரிவினைவாதத்தின் முட்டுச்சுவர்

யுத்தத்தை எதிர்ப்பது என்பது செச்னியாவில் உள்ள பிரிவினைவாதக் குழக்களதும் தேசியவாதத் தலைவர்களதும் முன்நோக்குகளையோ அல்லது விதிமுறைகளையோ ஆதரிக்க முடியாது. கிரேம்ளின் அடக்குமுறைக்கான ஒரே பதிலீடு ஒரு சுதந்திரமான செச்சியன் அரசே என்ற வாதம் பொய்யானது. அத்தகைய ஒரு முன்நோக்கு காக்கசசின் முற்போக்கான பொருளாதார அபிவிருத்திக்கோ அல்லது அதன் பரந்த மக்களது சமூக, ஜனநாயக தேவைகளை நிறைவு செய்வதற்கோ தாக்கிப் பிடிக்கக் கூடிய ஒரு அடிப்படையையோ கொண்டிருக்க முடியாது.

இது செச்னியர்களோ அல்லது ரூஷ்ய வெகுஜனங்களோ பழைய ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் கீழ் இருந்து வந்த நிலைமைகளுக்குத் திரும்பிச் செல்வது பற்றிய ஒரு பிரச்சினை அல்ல. சோவியத் யூனியனின் அனைத்து மக்களும் ஸ்டாலினாலும் அவரது வாரிசுகளாலும் ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்துவ பொலிஸ் அரசின் கீழ் பல தசாப்த காலங்களாக தமது ஜனநாயக, சமூக உரிமைகள் நசுக்கப்பட்டு வருந்தினர்.

இருப்பினும் லெனின் போல்ஷிவிக் கட்சியின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட சோவியத் யூனியன் ஈரோஏசியன் (ஐரோப்பிய ஆசிய) நிலப்பரப்பின் மக்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார கூட்டு அபிவிருத்தியில் ஒரு பிரமாண்டமான ஒருபடி முன்னேற்றத்தை பிரதிநிதித்துவம் செய்தது. அந்த நிலைப்பாட்டில் இருந்து காக்கசசிலும் வேறு இடங்களிலும் இன்று பல்வேறு பிரிவினைவாத இயக்கங்களின் தோற்றம் சோவியத் யூனியனை கலைத்ததன் மூலம் உச்சக் கட்டத்தை அடைந்த சமூக எதிர்ப்புரட்சிக்கு எதிரானது அல்ல; ஆனால் அதன் ஒரு பாகம் ஆகும்.

செச்னியாவில் உள்ள இஸ்லாமிய பிரிவினைவாத சக்திகள் ரூஷ்யாவுக்கு எதிரான வரலாற்று, சமகால குறைபாடுகளை சுரண்டிக் கொள்ள முடிந்தது. ஆனால் அவர்களின் விதிமுறைகளும் நோக்கும் முன்னோக்குகளும் அடிப்படையில் யெல்ட்சின், புட்டினில் இருந்து வேறுபடவில்லை. சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதில் இருந்து காக்கசஸ் தேசிய தகராறுகளினால் சின்னாபின்னமாகிப் போய்விட்டது. இதனால் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழக்க நேரிட்டது. இந்த மோதுதல்கள் பெரஸ்ரொயிகாவுக்குப் பின்னைய செச்சியன் சுதந்திர இயக்கத்தின் முதல் தலைவரான யொக்கர் டுடேவ் போன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் அதிகாரிகளினால் பெருமளவுக்கு ஊக்குவிக்கப்பட்டது.

இவை தேசிய விடுதலையின் ஒழுங்கு முறையான இயக்கங்கள் அல்ல. இவைக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்துக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாது. அல்லது அவை எந்தவிதத்திலும் ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாஷைகளை உள்ளடக்கிக் கொண்டதும் கிடையாது. இதற்கு மாறாக அவை தேசிய முதலாளிகளின் சமூக நலன்களைக் கொண்ட பல்வேறு கும்பல்களின் அபிலாஷைகளை வெளிக்காட்டிக் கொண்டுள்ளன. ஒரே சீரான இனக்குழு பிராந்தியங்களாக கூறு போடுவதன் மூலமும் தொழிலாளர் வர்க்கத்தை இனக்குழு – இனவாத அடிப்படையில் பிளவுபடுத்துவதன் மூலமும் இவர்கள் உலக முதலாளித்துவத்துடன் தமது சொந்த நேரடி உறவுகளை ஸ்தாபிதம் செய்ய முயற்சிக்கின்றனர்.

இந்த சமூகத் தட்டினரைப் பொறுத்தமட்டில் தேசிய சுதந்திரம் என்பது எண்ணை விநியோகம், எண்ணை சுத்திகரிப்பு இவற்றுடன் சேர்ந்து போதைப் பொருள் வர்த்தகம், ஆயுத தளபாட விற்பனை, விபச்சாரம் போன்றவை மூலம் இலாபத்தைக் கறந்து கொள்வதற்கான ஒரு சாதனமாகவே நோக்கப்படுகின்றது. ரூஷ்யாவுக்கு எதிரான ஆயுதப் போராட்டம், இவை தம்மைக் கணிசமான அளவு எண்ணை படிவங்களுக்கு நெருக்கமானவர்களாகவும் வாஷிங்டனுடனும் பேர்ளினுடனும் லண்டனுடனும் ஒரு இலாபகரமான வாடிக்கையாளர் உறவை ஏற்படுத்திக் கொள்ளும் விதிமுறையாகவும் உள்ளது.

டிசம்பர் 27ம் திகதி வோல் ஸ்ரீட் ஜேர்ணலில் வெளியான காக்கசஸ் சந்தையின் (CCM) தலைவர் கோஸ் – அகமத் – நௌகாவின் கட்டுரையில் இது வெளிப்பாடாகி இருந்தது. நௌகாவ் செச்சியன் பிரிவினைவாத வட்டாரங்களின் ஒரு முன்னணி பிரமுகராவார். அவர் தனது தொழிலை ஒரு கடைகெட்ட செச்சியன் மாபியாவாக (Mafia) மாஸ்கோவில் ஆரம்பித்தார். அவர் தனது மோசடி பண சம்பாத்தியம் போன்ற கொலைகார நடவடிக்கைகளை "சுதந்திரத்துக்கான ஒரு தொடர்ச்சியான போராட்டம்" என வருணித்துக் கொண்டார்.

வோல் ஸ்ரீட் ஜேர்ணலுக்கு எழுதிய கட்டுரையில் நௌக்காவ் "முடிவில்லாத கெரில்லா யுத்தத்தில்" ஈடுபடும் பிரிவினைவாதிகளின் பலத்தைப் பற்றி ஜம்பம் அடிப்பதோடு "செச்னியா யுத்தத் தணல் ஜோர்ஜியா, அஜர்பைஜான், கஸ்பியன் எண்ணை வயல்களுக்கு பரவுவதற்கு முன்னர்" முடிந்த மட்டும் கூடிய விரைவில் காக்கசஸ் வரையில் சமாதானத்தை புனருத்தாரணம் செய்யும் முக்கியமான மூலோபாய, பொருளாதார நலன்களை ஐரோப்பாவும் அமெரிக்காவும் கொண்டுள்ளன என எச்சரிக்கையும் செய்கின்றார்.

மேற்கத்தைய நலன்களுக்கு அத்தகைய ஒரு நேரடி வேண்டுகோளை விடுப்பது எந்தவிதத்தில் முற்றிலும் ஒரு செச்சியன் தோற்றப்பாடு அல்ல. இவற்றின் பிரதிபலிப்புக்களை உலகம் பூராவும் உள்ள இத்தகைய தேசியவாத இயக்கங்களில் கண்டு கொள்ள முடியும். 20ம் நூற்றாண்டின் முதற் பாகத்தில் ஒடுக்கப்படும் நாடுகளில் உள்ள தேசிய விடுதலை போராட்டங்களின் முதலாளித்துவத் தலைவர்கள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை தூக்கி வீசிவிட்டு, தமது சொந்த தேசிய சந்தையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர முயன்றனர். எவ்வாறெனினும் இன்று முதலாளித்துவ உற்பத்தியின் பூகோள ரீதியான இணைப்பானது இனக்குழு அல்லது இனவாத அடிப்படையிலான புதிய வகையிலான தேசிய பிரிவினைவாத இயக்கங்களின் அபிவிருத்திக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏகாதிபத்திய கட்டுப்பாட்டுக்கு முடிவு கட்டி தேசிய, சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு மாறாக இந்த இயக்கங்கள் இன்றுள்ள அரசுகளை துண்டாடவும் ஏகாதிபத்திய வல்லரசுகளுடனும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுடனும் நேரடி உறவுகளை ஸ்தாபிதம் செய்து கொள்ளவும் முயற்சிக்கின்றன. ஒவ்வொரு விடயத்திலும் முதலீடுகளை உள்ளே ஈர்க்கும் பொருட்டான இந்த உந்துதல்கள் சம்பள வெட்டுக்கள் மூலமும் சுரண்டல் மட்டத்தை ஒழுங்குமுறையாக அதிகரிக்கச் செய்வதன் மூலமும் சுகாதாரம், ஓய்வூதியம் போன்ற முக்கிய சமூக சேவைகளை சிதறடிப்பதன் மூலமும் வெளிப்பாடாகியுள்ளன. இவை கம்பனிகளின் இலாபங்களை காலி செய்யும் ஒரு மன்னிக்க முடியாத நடவடிக்கையாகக் கணிக்கப்படுகின்றது.

செச்னியாவிலும் நிலைமைகள் இதில் இருந்து வேறுபட்டது அல்ல. ஆளும் கும்பல் எண்ணெய் வருமானங்கள் மூலமும் கொளுத்துப் பருக்கலாம். ஆனால் பெருமளவிலான நாட்டுப்புற மக்கள் வறுமைக்கும் சுகாதார சீர்கேட்டுக்கும் பலியாகத் தள்ளப்பட்டுள்ளனர்.

## ஒரு சோசலிச பதில்

செச்சியன் யுத்தத்தையும் ரூஷ்யா பூராவுமுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் சமூக, ஜனநாயக உரிமைகள் மீதான முன்னொரு போதும் இல்லாத அளவிலான பெரும் தாக்குதல்களையும் எதிர்ப்பதற்கான ஒரே முற்போக்கு பாதை, கிரேம்ளினின் ஊழல்நிறைந்த ஆட்சியாளர்களதும் அத்தோடு ஏகாதிபத்திய வல்லரசுகளதும் முதலாளித்துவ புனருத்தாரணத்தின் பலிகடாக்களாகியுள்ள கோடானுகோடி மக்களை ஒன்றுபடுத்தப் போராடுவதேயாகும். 20ம் நூற்றாண்டின் உதயத்தோடு கோடானு கோடி தொழிலாளர்கள் சோசலிச முன்நோக்கினாலும் தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் ஒன்றுபடுத்தும் போராட்டத்தினாலும் ஊக்குவிக்கப்பட்டனர். அப்படியானால் இன்று விமர்சனப் பார்வை கொண்ட தொழிலாளர்கள் அத்தகையதொரு முன்நோக்கு 21ம் நூற்றாண்டுக்கு பொருந்தி வராது என்ற மனத்தளர்ச்சியும் சிடுமூஞ்சித்தனமும் மூடத்தனமானதுமான வாதத்தை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முதலாளித்துவ தேசியவாத இயக்கத்தின் வரையறைகள் (குறைபாடுகள்) அந்தச் சகாப்தத்தின் மிகவும் முன்னேற்றமான சிந்தனையாளர்களுக்கு –லெனின், றோசா லக்சம்பேர்க், ட்ரொட்ஸ்கி போன்றவர்களுக்கு ஏற்கனவே தெட்டத் தெளிவாகியது.

இத்தகைய ஒரு தோற்றப்பாட்டை ஓப்பீட்டுக்கு அப்பாற்பட்ட வடிவத்துக்கு தரமிறக்கி – இனக்குழு அடையாளத்தை தேசியத்தை நிர்மாணிப்பதற்கான அடிப்படையாக வாதிட்டு– ஏன் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும்? அத்தோடு பொருளாதார வாழ்வின் பூகோளமயமாக்கம் அந்தக் காலத்தில் இருந்த எதற்கும் அப்பால் சென்றுள்ள நிலையில் இன்று தொழிலாளர் வர்க்கம் அதை ஏன் கட்டியணைக்க வேண்டும் ?

புட்டின் ஆட்சியாளர்களின் மாபெரும் ரூஷ்ய சோவினிசத்தை எதிர் கொள்வதற்கு முன்னைய சோவியத் யூனியனின் மக்கள் சோவியத் யூனியனின் ஆரம்பத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட சோசலிச, அனைத்துலகவாதத்துக்கான பொறுப்பை புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். 1920 களின் தொடக்க காலத்தில் ரூஷ்யன், காக்கசியன் மக்களை சுயவிருப்பின் மூலம் ஒன்றிணைத்தமை, தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை அவசியங்களை நிறைவு செய்யும் விதத்தில் பொருளாதார மறுசீரமைப்புச் செய்வதன் மூலமே சாத்தியமாகியது. அதைத் தொடர்ந்து வந்த சோவியத் யூனியனின் ஸ்டாலினிச சீரழிவுகள் என்னவாக இருந்த போதிலும் சமூக முன்னேற்றத்துக்கும் ஜனநாயத்துக்குமான ஒரே பாதையாக இது இருந்து கொண்டுள்ளது. இந்த இலக்கை அடைய ரூஷ்யாவிலும் செச்னியாவிலும் உள்ள தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கும் முதலாளித்துவ சுரண்டலுக்கும் எதிரான போராட்டத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தமது சக தொழிலாளர் பக்கம் திரும்ப வேண்டும்.

ரூஷ்யாவிலும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் நடுமைய அரசியல் பணி உலக சோசலிச போராட்டத்தில் ஈடுபடுவதற்கான ஒரு புதிய மார்க்சிசத் தலைமையை அபிவிருத்தி செய்வதேயாகும். உலக சோசலிச வெப் தளம் (WSWS) நான்காம் அகிலத்தின் 'இன்டர்நெட்' தளமாகும். நான்காம் அகிலம் ஸ்டாலினிச காட்டிக்கொடுப்புக்களுக்கு எதிராக சோசலிச அனைத்துலகவாதத்தைப் பேணுவதற்காக லியோன் ட்ரொட்ஸ்கியினால் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. பெரிதும் அரசியல் ரீதியில் முன்னேற்றம் கண்ட தொழிலாளர்களும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து உலக சோசலிச புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவதற்கான ஆய்வுப் பீடம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!




## லியோன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்

விலை ரூபா. 10.00



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00




## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்
நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மாகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூபா. 15.00




இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

## சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00




## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுகால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்


விலை ரூ.10.00




## இலவசக் கல்வியை காப்பது எப்படி ?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00




ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்


விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை. ரூ5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10: தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் கண்மூடித்தனமாக கைதாவதை கண்டித்து யாழ்ப்பாண குடாநாடு பூராவும் பாடசாலை பகிஷ்கரிப்பு

எஸ். இராசேந்திரன்

யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு இயக்கம் பரவி வந்ததன் காரணமாக பொதுஜன முன்னணி அரசாங்கமும் பொலிசும் தாம் கைது செய்து, எட்டு நாட்களுக்கு மேலாக தடுத்து வைத்திருந்த இரண்டு பாடசாலை மாணவர்களையும் அவர்களின் தாயாரையும் விடுதலை செய்யத் தள்ளப்பட்டனர். இவர்கள் ஜனவரி 25ம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்.

வினோத் சிறீஸ்கந்தராஜாவும் (12 வயது) அவரின் சகோதரியான பிரியா சிறீஸ்கந்தராஜாவும் (16 வயது– வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) தாயார் வளர்மதி சிறீஸ்கந்தராஜாவும் (42 வயது) ஜா–எல யூ.என்.பி. ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் (டிசம்பர் 18) இடம் பெற்ற தற்கொலை குண்டுதாரரின் குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பில் எட்டு பேர் கொல்லப்பட்டதோடு 55க்கும் 'அதிகமானோர் படுகாயமடைந்தனர். தனித் தமிழ் அரசுக்கான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளே இக்குண்டு வெடிப்பை நடாத்தியதாக பெரிதும் நம்பப்படுகின்றது.

வளர்மதி சிறீஸ்கந்தராஜாவோ அல்லது அவரின் பிள்ளைகளான வினோத், பிரியாவோ இத்தாக்குதலில் ஈடுபட்டதாக எதுவிதமான குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. அவர் செய்த ஒரே "குற்றம்" தற்கொலை குண்டுதாரியின் தாயாராக விளங்கியதேயாகும்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தின் ஆண்டு–8 மாணவனான வினோத் அவரின் வகுப்பில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இந்த திடீர் கைது நடவடிக்கை சம்பந்தமாக பாடசாலை அதிபருக்கும் கூட முறையான அறிவித்தல் எதுவும் கொடுக்கப்படவில்லை. அவரின் சகோதரியும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவியுமான பிரியா வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இம்மூவரும் கைது செய்யப்பட்டது பற்றியோ அல்லது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டது பற்றியோ இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் எதுவித தகவலையும் வழங்கத் தவறிவிட்டனர். இத்தகைய கைதுகளின் போது அரச கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கும் நடைமுறையையும் கூட அதிகாரிகள் கடைபிடிக்கத் தவறிவிட்டனர்.

விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வளர்மதி சிறீஸ்கந்தராஜா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது : "...ஜனவரி 25ம் திகதி நான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் காங்கேசந்துறை தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டேன். அடுத்த நாள் நான் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு வீட்டில் தங்கவைக்கப்பட்டேன். அதைத் தொடர்ந்து அவர்கள் எனது மகனின் தலையையும் அவரது போட்டோவையும் காட்டினார்கள். அவர் எனது மகன் என்பதை நான் ஒப்புக் கொண்டேன். 'இரத்த பரிசோதனை' யும் கூட அவர் எனது மகன்தான் என்பதை ஊர்ஜிதம் செய்தது" என்றார்.

இந்தக் கைதும் தடுத்து வைப்பும் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகிகளிடையே பெரும் கொதிப்பை உண்டு பண்ணியது.

ஜனவரி 31ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட மாணவர் சங்கம் யாழ்ப்பாண நகரில் உள்ள பாடசாலைகளில் ஒரு பகிஷ்கரிப்புக்கு ஏற்பாடு செய்தது. இந்த பாடசாலை பகிஷ்கரிப்பில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி என்பன பங்கு கொண்டன. வடமராட்சி பகுதியில் முன்னணி பாடசாலைகளான ஹார்ட்லி கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மிஷன் மகளிர் கல்லூரிகள் வெறிச் சோடிக் கிடந்தன. யாழ்ப்பாண நகருக்கு வெளியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகியனவும் இந்த பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கு ஆதரவு வழங்கின.

அரசியல் அமைப்புக்கள், அரசியல் நடவடிக்கைகள் மீதான கடும் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் மாணவர் தூதுக் குழுக்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கு ஆதரவு வழங்கும்படி கோரி வந்தன. இத்தகைய மாணவர் குழு ஒன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இரா்ணுவத்தினரால் அங்கிருந்து வெளியேறா வண்ணம் தடுத்து வைக்கப்பட்டனர். மானிப்பாய் தொகுதியில் உள்ள சில பாடசாலை அதிபர்கள் 'இப்போது சிவில் நிர்வாகம் நடைமுறையில் இருப்பதால்' பகிஷ்கரிப்புக்கு அவசியம் கிடையாது எனக் கூறி மாணவர்களை அதில் கலந்து கொள்ளாதிருக்கும்படி கோரினர்.

உடுப்பிட்டி பகுதியில் பாடசாலை பகிஷ்கரிப்புக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டிய 11 மாணவர்கள் படையாட்களால் கைது செய்யப்பட்ட போதிலும் இவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பெப்பிரவரி 1ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும்– ஊர்காவற்துறை உட்பட– உள்ள பாடசாலைகள் அடியோடு ஸ்தம்பிதம் அடைந்தன. யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னணி பாடசாலைகளைச் சேர்ந்த 20 மாணவர்களைக் கொண்ட ஒரு பிரதிநிதிகள் குழு ஒன்று கூடி ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தவும் மகஜர் ஒன்றை அரசாங்க அதிகாரி களிடம் கையளிக்கவும் முடிவு செய்தது. இந்த மகஜர் வினோத்தும், பிரியாவும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என வலியுறுத்துவதாக அமைந்தது.

பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டத்துக்கு சமூகத்தின் ஏனைய தரப்பினரது ஆதரவும் கிட்டியது. இப்போராட்ட இயக்கத்துக்கு யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள் ஆதரவு வழங்கியதோடு பெப்பிரவரி 2ம் திகதி பகிஷ்கரிப்பு இயக்கத்தில் ஈடுபடவும் முடிவு செய்திருந்தனர்.

வடமாகாண பாடசாலை அதிபர்கள் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிய மகஜரில் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தது: "......ஆண்டு 8ல் கல்வி பயிலும் வினோத் எனும் மாணவனை பாடசாலையில் வைத்து அதிபருக்கு முறையாக அறிவிக்காமல் கைது செய்துள்ளனர். அதே தினம் இம்மாணவனின் சகோதரியான பிரியா சிறீஸ்கந்தராஜா– வசாவிளான் மகாவித்தியாலய மாணவி–வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இதனால் குடாநாட்டில் உள்ள பெற்றோர்கள் மாணவர்கள் மத்தியில் ஒருவித பய உணர்வு ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கண்டனத்துக்குரியது".

இந்த அதிபர்கள் சங்கம் தனது மகஜரில் மாணவர்கள் பொலிசாரதும் இராணுவத்தினரதும் குறுக்குவிசாரணைகள் மூலம் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகக் கூடாது எனவும் அவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தமாதிக்காது நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டிருந்தது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இக்கைதுகள் சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் "..அவர்கள் விடுதலை செய்யப்படாது போனால் அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை பகிஷ்கரிப்பு பிரச்சார இயக்கத்தில் இறங்கும் நிலைமை உருவாகும். அத்தோடு இந்த பாடசாலை பகிஷ்கரிப்பு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியிலும் விஸ்தரிக்கப்படும்" எனவும் குறிப்பிட்டிருந்தது.

இந்த நெருக்கடி நிலையின் மத்தியில் யாழ்ப்பாண இராணுவ தளபதி பிரிகேடியர் காமினி ஜயசிங்க பாடசாலை அதிபர்களுடன் பெப்பிரவரி 1ம் திகதி ஒரு திடீர் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தார். இது இராணுவத்தின் 52வது படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம் பெற்றது. எதிர்காலத்தில் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்காமல் மாணவர்கள் எவரும் கைது செய்யப்பட மாட்டார்கள் என்பதை மீள ஊர்ஜிதம் செய்ய அவர் முயன்றார். அத்தோடு அவர் இந்தக் கைதுகள் வடமாகாண இராணுவம் அறியாத விதத்தில் இடம் பெற்றுவிட்டதாகவும் காட்ட முயற்சித்தார்.

பாடசாலை பகிஷ்கரிப்பு மூன்றாம் நாளை எட்டிய பெப்பிரவரி 2ம் திகதி, வினோத், பிரியாவையும் அவர்களின் தாயாரையும் கொண்ட விசேட விமானம் பலாலியில் தரைதட்டியது. இம்மூவரும் யாழ்ப்பாண நகருக்கு கூட்டிச் செல்லப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும் இம் மாணவர்கள் இருவரும் இரண்டு கிழமைக்கு ஒரு தடவை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு ஆஜராகும்படியும் அவர்களது 'நல்லொழுக்கத்தை' ஊர்ஜிதம் செய்யும்படியும் வேண்டப் பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சார இயக்கத்தின் பரிமாணமும் வேகமும் விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்க குமாரதுங்க அரசாங்கம் ஸ்தாபிதம் செய்துகொண்டுள்ள ஒடுக்குமுறை பொலிஸ், இராணுவத்தின் மீதான ஆழ்ந்த கசப்புணர்வை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. வளர்மதி சிறீஸ்கந்தராஜாவும் அவரது பிள்ளைகளும் நடாத்தப்பட விதம் நாடு பூராவும் உள்ள தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான தொல்லைகளையும் கெடுபிடி கைதுகளையும், குறுக்கு விசாரணைகளையும் சில தருணங்களில் இடம் பெறும் கொலைகளையும் பளிச்சிட வைக்கும் நல்ல உதாரணமாகும். இந்த யுத்தத்தின் இனவாதத் தன்மையானது அனைத்து தமிழ் மக்களையும்– பாடசாலை மாணவர்கள் உட்பட்ட– தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளராக கொள்ளும் பாதுகாப்பு படையினரின் ஊகங்களை கோடிட்டுக் காட்டுகின்றது.

# இந்திய தோட்டத் தொழிலாளர்...

7ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப் பொலிஸ் தாக்குதலைப் பற்றி ஆராய்வதற்கென பொதுமக்கள் உரிமை சங்கம் நியமித்த கமிட்டியின் அறிக்கை இந்தப் பூசி மெழுகல்களைத் திட்டவட்டமான முறையில் நிராகரித்துள்ளது. இந்தக் கமிட்டி கொலை இடம்பெற்ற இடத்துக்கு விஜயம் செய்து இறந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் குடும்ப அங்கத்தவர்களை சந்தித்து கலந்துரையாடியது. இந்தக் கமிட்டியில் ஓய்வு பெற்ற தமிழ்நாடு பொலிஸ் மா அதிபர் வீ.லக்ஷ்மன் நாராயணன், பம்பாய் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி எச்.சுரெஷ், ஓய்வு பெற்ற இந்திய சிவில் சேவை அதிகாரி வீ.கறுப்பன், சுந்தரநாயர் பல்கலைக்கழகத்தின் மாஜி உபவேந்தர் வசந்தா தேவி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அக்டோபர் 27ம் திகதி வெளியான அறிக்கையில் கமிட்டி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "மாஞ்சோலை தொழிலாளர்கள் தமது பிரச்சினையின் பேரில் நடாத்திய ஊர்வலம் அமைதியானது. ஊர்வலம் சென்ற தொழிலாளர்களின் மரணத்துக்கு முக்கிய காரணம், பொலிசாரின் குண்டாந்தடியடிப் பிரயோகமாகும். மாவட்டச் செயலகத்திற்கு ஊர்வலம் சென்றவர்களின் தலைவர்களை தனது அலுவலகத்துக்கு அழைத்து அவர்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த மகஜரை பொறுப்பேற்று இருந்தால் இந்தச் சம்பவம் இடம் பெற்றிராது."

## மாஞ்சோலை தொழிலாளர்களின் நிலைமை

ஜுலையில் இடம் பெற்ற பொலிஸ் தாக்குதலின் பின்னர் மாஞ்சோலைத் தோட்டங்களுக்கு விஜயம் செய்த மனித உரிமை ஆணைக்குழுவின் பொதுச் செயலாளர் கார்த்திகேயன் தாம் அடிமை உழைப்பாளிகளையோ அல்லது உழைப்பு நிலைமைகளையோ காணவில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால் தோட்டங்களில் தொழிலாளர்கள் "அடிமை சேவை நிலைமைகளின்" கீழ் வாழ்ந்து கொண்டுள்ளதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். கார்த்திகேயன் அமெரிக்க எப்.பீ.ஐ.யின் இந்தியப் பாணியிலான சி.பீ.ஐ யின் மாஜித் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் அடிமை உழைப்பாளி எனப்படுவது தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் எஜமானர்களிடம் அல்லது வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களிடம் பெற்ற கடனைத் திருப்பி செலுத்த முடியாத நிலையில் பல தலைமுறைகளாக அவர்களது அடிமைகளாக இருந்துவரும் நிலைமையைக் குறிக்கின்றது. மாஞ்சோலை தொழிலாளர்களை அந்த விதத்தில் நோக்குமிடத்து அவர்கள் அடிமை உழைப்பாளிகளாக இல்லாது போனாலும் அவர்கள் அற்ப சொற்ப சம்பளத்துக்கு தோட்டங்களில் மிகவும் துன்பகரமான வாழ்க்கையை நடாத்த தள்ளப்பட்டுள்ளனர். இதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லாதுள்ளது.

ஆண்களும் பெண்களும் ஒரு நாளைக்கு 9 மணித்தியாலங்கள் பட்டப் பகலில் வேலை செய்கிறார்கள். தேயிலைச் செடிகள் 4500, 4800 அடி உயரமான மலைச் சாரல்களிலேயே பயிரிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்கள் சில காலங்களில் கடும் மழைக்கும் சில சமயங்களில் பனிக்கும் இலக்காகின்றது. இந்தச் சகல நிலைமைகளின் கீழும் தொழிலாளர்கள் தேயிலைக் கொழுந்தைக் கொய்யத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தமது 'லயன்' அறைகளுக்கு மாலை 5.50 மணிக்கு அல்லது 6 மணிக்கே வருகின்றார்கள்.

'மேற்பார்வையாளர்கள்' நாள் பூராவும் தொழிலாளர்களை மேற்பார்வை செய்கின்றார்கள். வேலை நேரத்தில் தொழிலாளர்கள் சிறுநீர் கழிக்கத் தன்னும் வெளியே செல்ல முடியாது. தொழிலாளர்களை சும்மா இருக்கச் செய்யும் விதத்தில்– பொய்யான விதத்தில் நடந்து கொண்டார்களா என அறியும் பொருட்டு சிறுநீர் கழித்த இடத்தைக் காட்டும்படி கூட இந்த மேற்பார்வையாளர்கள் பலவந்தப்படுத்துவதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதாம்பாளின் கொலைக்கு பாதுகாப்பு படையினரே பொறுப்பு! ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றச்சாட்டு

எஸ்.இராசேந்திரன்

நான்கு வயதுக் குழந்தையின் தாயான சரவணபவானந்தக் குருக்கள் சாரதாம்பாளின் (20 வயது) கொலைக்கும் பாலியல் வல்லுறவுக்கும் எதிராக 500 க்கும் அதிகமான கிராமவாசிகள் புங்குடுதீவு கடற்படை முகாமுக்கு எதிரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். இது டிசம்பர் 31ம் திகதி இடம் பெற்றது. காட்டுமிராண்டித் தனமான வன்முறைகளில் ஈடுபடும் இலங்கை அரசாங்க ஆயதப் படைகளைக் கண்டனம் செய்யும் பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்திக் கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது. கடற்படையினரது மிரட்டல்கள் பயமுறுத்தல்களுக்கும் அத்தோடு ஈ.பி.டி.பி. அரசியல்வாதிகளின் "பூரண விசாரணை" நடாத்தும்படி கோரும் வாக்குறுதிகளுக்கும் மத்தியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் குருக்களின் மகளான சாரதாம்பாள் டிசம்பர் 28 ம் திகதி சீருடையில் வந்த நால்வரால் அவரின் இல்லத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்டார். சாரதாம்பாளின் சகோதரரான எஸ்.இராஜகேர சர்மா (18 வயது) தமது வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது: சாரதாம்பாள் "என்னுடன் வீட்டில் இருந்து வந்தார். இரவு 8.30 மணிக்கு காக்கி சீருடையில் வந்த நால்வர் ஆயதபாணிகளாக எமது வீட்டினுள் நுழைந்தனர். அவர்கள் என்னையும் எனது சகோதரியையும் பயமுறுத்தினர். அவர்கள் கொச்சைத் தமிழில் பேசினர்.

"அவர்களில் இருவர் என்னைத் தாக்கியதோடு எனக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தினர். அவர்கள் எனது கையைக் கட்டியதோடு கண்களையும் மூடிக் கட்டினர். இந்தத் தாக்குதலின் பின்னர் அவர்கள் என்னை வெளியே இழுத்துச் சென்று வீட்டின் பின்புறமாகப் போட்டனர். மற்றும் இருவர் அருகில் உள்ள குடியில்லாத வீட்டிற்கு எனது சகோதரியை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர். அதைத் தொடர்ந்து அவர் கொலை செய்யப்பட்டார்."

அந்தப் பகுதியில் அமுலில் இருந்து கொண்டுள்ள ஊரடங்குச் சட்டத்துக்கு மத்தியிலும் சாரதாம்பாளின் சகோதரனின அழுகை ஒலி கேட்டு மக்கள் ஒன்று திரண்டனர். மண்ணெண்ணை விளக்கின் உதவியோடு அவர்கள் சாரதாம்பாளை தேடினர். ஆனால் அவர்கள் இத்தேடுதலின் போது சாரதாம்பாள் அணிந்திருந்த சில உடுதுணிகளை மட்டுமே கண்டுபிடிக்க முடிந்தது.

இதைத் தொடர்ந்து அயலவர்கள் அருகில் உள்ள கடற்படை முகாமுக்குச் சென்று முறைப்பாடு செய்தனர். "எமக்கு எதுவும் தெரியாது" எனக் கூறி கடற்படை அதிகாரி அவர்களை திருப்பியனுப்பினார். மறுநாள் காலை சாரதாம்பாளை தேடும் பணியில் ஈடுபட்ட கிராமவாசிகள் அவரின் சடலம் வீட்டில் இருந்து 20 யாருக்கு அப்பால் கிடந்ததைக் கண்டுபிடித்தனர். சாரதாம்பாளின் நிர்வாண சடலம் காவோலையினால் மூடப்பட்டுக் கிடந்தது.

கிராமவாசிகள் உலக சோசலிச வெப் தள நிருபருக்களித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்தனர்: "நாம் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை வெறுமனே பாலியல் வல்லுறவுக்கும், படுகொலைக்கும் எமது எதிர்ப்பைத் தெரிவிக்க மட்டும் நடாத்தவில்லை. இது ஒரு சுய கௌரவத்துக்குரிய பிரச்சினையாகிப் போயுள்ளது. இது பெண்களுக்கு மட்டும் அல்ல ஆண்களுக்கும் பொருந்தும். எனவேதான் நாம் காவோலைகளை காவிக் கொண்டு இந்த ஊர்வலத்தில் ஈடுபட்டோம். இந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் எந்தளவு தரக் குறைவான விதத்தில் கணிக்கப்படுகின்றார்கள் என்பதை அனைத்துலக சமூகத்துக்கு காட்ட வேண்டியிருந்தது. காவோலையைக் காட்டிலும் மிகவும் கீழ்த்தரமான முறையில் அவர்கள் கணிக்கப்படுகின்றார்கள்" என்றார்.

இந்த நிலைமையை விபரிக்கையில் அவர்கள் மேலும் கூறியதாவது: "ஆயுதப் படைகளின் துன்புறுத்தல்கள் அத்தோடு பாலியல் வன்முறைகள் பற்றி அம்பலத்துக்கு வராத நிகழ்வுகள் பல இடம் பெற்றுள்ளன. ஒரு இராணுவ சோதனைச் சாவடியை அல்லது பாதுகாப்பு அரணை பெண்களும், இளம் யுவதிகளும் தாண்டிச் செல்லும் போது அவர்கள் பல்வேறுபட்ட சேஷ்டைகளுக்கு இலக்காக நேரிடுகின்றது. சில காலத்துக்கு முன்னர் இங்குள்ள ஒரு ஊமைப் பெண் கூட இராணுவத்தினரின் பாலியல் வன்முறைக்கு பலியாக நேரிட்டது. இந்த நிலைமை மேலும் மோசம் அடையுமோ என்பது தான் எமது அச்சம்" என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த சாரதாம்பாள் படுகொலை சம்பந்தமாக ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட அமைப்பாளர் ஆயுதப் படைகளை கண்டனம் செய்யும் விதத்தில் ஒரு அறிக்கையை வெளியிடத் தள்ளப்பட்டார். வீ.கே.ஜெகன் தமது அந்த அறிக்கையில் "இந்தச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 500 யார் தொலைவில் கடற்படை முகாம் உள்ளது. மேலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் வேறு எவரும் இப்பகுதியினுள் ஊடுருவ முடியாது. ஆதலால் இது கடற்படையினரின் வேலையாகும்" எனத் தெரிவித்தார்.


சாரதாம்பாளின் மகள் சுமிதா

கடற்படையினரும் தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத் தள்ளப்பட்டனர். ஊர்காவற்துறை கடற்படை கட்டளையிடும் அதிகாரி தனது அறிக்கையில் "நாம் உடனடியாக ஒரு விசாரணையை நடாத்துவோம். இதற்கு பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்." என்றார்.

கொழும்பில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தகவல் திணைக்களம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புங்குடுதீவு சம்பவத்தையிட்டு ஒரு பூரண விசாரணைக்கு உத்தரவிட்டு உள்ளதாகத் தெரிவித்தது. "அந்தஸ்து, தரத்தை கணக்கில் கொள்ளாமல் குற்றவாளிகளுக்கு எதிராக உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் அதையிட்டு தனக்கு மீள அறிவிக்கும்படியும்" உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தது. கடந்த காலத்தில் இடம் பெற்ற அத்தகைய "விசாரணைகள்" வெறும் பூசி மெழுகல்களாக மட்டும் விளங்கியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 5ம் திகதி இடம் பெற்ற மஜிஸ்திரேட் விசாரணையில் சாரதாம்பாளின் சகோதரன் தனது சகோதரியின் காயங்களின் தன்மையைப் பற்றி விபரித்தார்: "சடலம் கிடந்த இடத்துக்கு நான் சென்ற போது அது ஒரு நீல நிறச் சேலையால் மூடப்பட்டுக் கிடந்தது. நான் அதனை நீக்கிப் பார்த்தேன்... அவளின் காதுகளால் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவளின் உடம்பு பூராவும் கடி காயங்கள் இருந்தன. அவரின் காலிலும் கூட கடி காயங்கள் இருந்தன" என்றார். தனது வீட்டில் தொடர்ந்து வசிப்பதையிட்டு இராஜசேகர சர்மா அச்சம் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ் நீதவான் அவரை அவரின் தந்தையார் வசிக்கும் அனலைதீவுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாண நகரத்தில் சட்ட மருத்துவ ஆய்வினை நடாத்துவதற்கான தகுதி வாய்ந்த சட்ட வைத்திய அதிகாரி இல்லாததன் காரணமாக சாரதாம்பாளின் சடலத்தை கொழும்புக்கு அனுப்பவும் ஒரு பூரண சட்ட வைத்திய அறிக்கை பெறும்படியும் உத்தரவிடப்பட்டது. கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் ஜனவரி 9ம் திகதிய அறிக்கையின்படி சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் மரணம் மூச்சடைப்பினால் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் கைதடி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரால் பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதோடு அவரின் தாயார், சகோதரன், உறவினர் ஆகியோரும் 1996 ஆகஸ்டில் கொலை செய்யப்பட்டனர். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் உருவாக்கியுள்ள பயங்கர நிலைமையின ஒரு பாகமாக இந்நடவடிக்கைகள் விளங்குகின்றன.

## ரூபா 200,000 சிறப்பு நிதியை வெற்றி கொள்வோம்

உலக ட்ரொட்ஸ்கிசக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியும் 21ம் நூற்றாண்டினுள் காலடி வைப்பது, உலக சோசலிச வெப் தளத்தின் மூலம் தொழிலாளர்கள், இளைஞர்கள், ஒடுக்கப்படும் மக்கள், புத்திஜீவிகளை மார்க்சிசக் கலாச்சாரத்தின் மூலம் ஆயுதபாணிகளாக்கும் வரலாற்றுப் பொறுப்புக்கு தோள்கொடுக்கும் இலக்கிலாகும்.

உலகம் பூராவும் கட்சியைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஆங்கிலம், ஜேர்மன், பிரான்சிய, ஸ்பானிய, சர்போ–குரோஷியன், இந்தோனேசியன், ரூஷ்ய, மற்றும் சிங்கள மொழிகளில் ஏற்கனவே வெப் தளங்கள் செயற்பட்டு வருகின்றன. தமிழ் வெப் தளத்தினை ஆரம்பிப்பதற்கான தொழில்நுட்பப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இந்த உலக வெப் தளமானது பெரிதும் சக்தி வாய்ந்த முறையில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே வளர்ச்சி கண்டுவரும் போட்டா போட்டிகள், தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் சவால்கள், வரலாறு, விஞ்ஞானம், கலை, வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்திகள் மற்றும் துறைகள் சம்பந்தமாகவும் ஆய்வு செய்து வருகின்றது.

இலங்கையில் இருந்து கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப அபிவிருத்தி நிலைமைகளுக்கு மத்தியிலும் சோசலிச சமத்துவக் கட்சி வெப் தளத்தின் நடவடிக்கைகளோடு மாதத்திற்கு இருதடவை 'கம்கரு மாவத்த' பத்திரிகையையும் 'தொழிலாளர் பாதை'யை மாத இதழாகவும் வெளியிட்டு வருகின்றது.

ஸ்டாலினிஸ்டுகள் தம்மை சோசலிஸ்டுகளாக காட்டிக் கொண்டு பல தசாப்தங்களாக மார்க்சிச கலாச்சாரத்தையே நாசமாக்கி வந்த ஒரு நிலைமையின் கீழ் மேற்சொன்ன நடவடிக்கைகளின் வரலாற்று முக்கியத்துவம் தீர்மானம் செய்யப்படுகின்றது. ஸ்டாலினிசத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் ஒரு ஏஜன்சியாக வளர்ச்சி கண்ட பப்லோவாதத்துக்கும் மற்றும் சகல குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளுக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட எமது கட்சி மேற்கொண்ட போராட்டம் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது. இதை நீங்கள் அறிவீர்கள். இன்று இப்போராட்டம் பண்புரீதியான உயர்மட்டத்தை எட்டிப் பிடித்துள்ளது.

இந்த வரலாற்று அபிவிருத்திக்கு முகம் கொடுக்கும் போது இன்று அத்தியாவசியமாகியுள்ள தொழில்நுட்பத் துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ரூபா 200,000 அவசியமாகியுள்ளது இதனை 5 மாதங்களுக்குள் திரட்டவேண்டும் என எமது கட்சி முடிவு செய்துள்ளது. டிசம்பரில் ஆரம்பமாகும் இந்த நிதி சேகரிப்பினை ஏப்பிரல் 2000 ல் நிறைவு செய்ய வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு. இதன் பொருட்டு தங்களின் அதி உயர்ந்த நிதி உதவியை வழங்கும்படியும் கட்சியின் நடவடிக்கைகளில் பங்குகொள்ளுமாறும் வேண்டுகிறோம்.




சந்தா தபால் கட்டணம் உட்பட

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.36 |
| இதழ் 6 | ரூ.68 |
| இதழ் 12 | ரூ.128 |
| இதழ் 24 | ரூ.248 |

விபரங்களுக்கு :
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10 தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

கையொப்பம்: .............................. திகதி: ..............................

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை, கொழும்பு 10.
தொ.பே. 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90,1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் இல.6, போதிராஜாராம மாவத, கொழும்பு10ல் உள்ள பிரின்ட் அன்ட் பிரின்ட் கிரபிக் லிமிடட்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.